


தண் தமிழ் இலக்கணமும் கட்டுரையும்

. பொன். இராமநாதன்

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை - 1

தண் தமிழ்
இலக்கணமும் கட்டுரையும்

எட்டாம் வகுப்பு

ஆசிரியர்:
பண்டித - வித்துவான்
மி. பொன். இராமநாதன்
தமிழ் விரிவுரையாளர்,
சர். தியாகராயர் கல்லூரி, சென்னை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1

காபிரைட்] 1962 [விலை ரூ. 1-50 ந.பை.

முதற் பதிப்பு—நவம்பர், 1958
இரண்டாம் பதிப்பு—ஜூன், 1959
ஐந்தாம் பதிப்பு—நவம்பர், 1962

[Paper used : 24 lbs. White Printing]

Approved for class use by the Text-Book Committee
[Supplement to Part I-B of the
For St. George Gazette dated 13-5-1959, Page 19]

Sree Rama prasad Press, 56, Broadway Madras-1.

முன்னுரை

தண் தமிழ் இலக்கணம் என்னும் இந்நூல், தன் பெயருக் கேற்ப, மாணவர்களின் இளமனம் சிறிதும் வருந்தாதபடி எளிய முறையில் இலக்கணங்களை யெல்லாம் இன்புறக் கற்பதற்குத் துணை புரிவதாகும். உதாரணங்களைக் கொண்டே மாணவர்கள் விதிகளை எளிதாக அறிந்து, இலக்கணப் பயன் எய்துமாறு தெள்ளிய நடையில் விளக்கமுற எழுதப்பெற்ற இது, 1958ஆம் ஆண்டிலிருந்து புதிதாகத் தொடங்கப் பெறும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு, அரசாங்கத்தா ரால் வெளியிடப்பட்ட புதிய பாட இயலை (Syllabus dated 23rd April 1958) மனங்கொண்டு, அதற்கேற்ற முறையில் அமைக்கப்பெற்றதாகும்.

இலக்கணமே, ஒரு மொழியைத் திருத்தமுறப் பேசுதற் கும், எழுதுதற்கும் உதவிபுரிவதாகலின், மாணவர்கள் இலக் கணப் பாடத்தில் பேரூக்கமும் உற்சாகமும் காட்டி, இந்நூலிற் காட்டியுள்ள உதாரணங்களும், விதிகளும் தம் உள்ளத்திற் பதியுமாறு நன்கு கற்பராயின், அவர்கள் தம் தாய்மொழியில் சிறந்த அறிவினைப் பெற்று, மேல் வகுப்புக் களிலும் மேன்மையுற்றுத் திகழ்வர். ஆகவே, மாணவர்கள் அனைவரும் இந்நூலைக் கற்றுப் பெரும்பயன் அடைவார்க ளாக.

இந்நூலை யேற்று வெளியிட முன்வந்த நேஷனல் பப்ளிஷிங் கம்பெனியார் அவர்கட்கும், இதைச் சீரிய முறையில் செவ்விதாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ ராமபிரசாத் அச்சகத்தார்க்கும் எனது நன்றி உரியதாகுக.

பள்ளிக்கூடத் தலைமையாசிரியர்களும், தமிழாசிரியர்களும் இந்நூலைத் தங்கள் பள்ளிகளில் பாடமாக வைத்து ஆதரிக்குமாறு மிகமிக வேண்டிக்கொள்கின்றேன்.

தியாகராயர் கல்லூரி,
சென்னை.

இங்ஙனம்
மி. பொன். இராமநாதன்
24-11-58.

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்

இலக்கணம்

I. எழுத்து

II. சொல்

முதற்பாகம்

இலக்கணம்

I. எழுத்து

எழுதப்படுவது எழுத்து. ஒரு சொல்லுக்கு முதற் காரணமாய் உள்ள ஒலியே எழுத்து எனப் படும். 'த' 'மி' 'ழ்' என்றும் மூன்று ஒலி களும் சேர்ந்து '**தமிழ்**' என்னும் சொல்லாயிற்று. அத்தமிழ் என்னும் சொல்லையே வாயினால் சொல் லும்பொழுது, அதில் உள்ள எழுத்துக்கள் **ஒலி எழுத்துக்கள்** என்றும், அதனையே எழுதிக் காட் டும்பொழுது, அதில் உள்ள எழுத்துக்கள் **வரி எழுத்துக்கள்** என்றும் கூறப்படும். இதனால் ஒலி எழுத்தின் அடையாளமாக எழுதப்படும் குறி யீடே வரி எழுத்தாம் எனக் கொள்க.

மொழிக்கு முதற் காரணமாய் உள்ள ஒலிக ளன்றி, தும்மல், இருமல், கனைத்தல் முதலியன ஒலி எழுத்தாகா.

1. எழுத்தும் அதன் வகையும்

இவ்வாறு மொழிக்கு முதற் காரணமாய் உள்ள எழுத்துக்கள் இரு வகைப்படும். அவை **முத லெழுத்து**, **சார்பெழுத்து** என்பனவாம். சார் பெழுத்துக்கள் தோன்றுவதற்கு முதலாக (காரண மாக) இருக்கும் எழுத்துக்கள் **முதலெழுத்து**

எனப்பட்டன. முதலெழுத்துக்களைச் சார்பாகக் (இடமாகக்) கொண்டு பிறக்கும் எழுத்துக்கள் **சார்பெழுத்து** எனப்பட்டன.

'' மொழிமுதற் காரண மாம்அணுத் திரள்ஒலி
எழுத்து ; அது முதல், சார்பு எனஇரு வகைத்தே ''
(நன். சூ. 58)

2. முதல் எழுத்து

நம் உயிர் தனித்தும் இயங்கும்; உடம்போடு கூடியும் இயங்கும். அதுபோல், சில எழுத்துக்கள் தனித்தும் ஒலிக்கும்; வேறு சில எழுத்துக்களோடு சேர்ந்தும் ஒலிக்கும். இவ்வாறு ஒலிக்கும் எழுத்துக்கள் உயிரெழுத்துக்கள் என்று கூறப்படும்.

அவையாவன:

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டு எழுத்துக்களும் ஆம். இவை **ஆவி** என்றும் வழங்கப்படும்.

நம் உடம்பு, உயிரோடு கூடி இருக்கும் பொழுதுதான் இயங்கும். அவ்வுயிர் அவ்வுடம்பை விட்டுப் பிரிந்துவிட்டால், அது தனித்து இயங்க இயலாது. அதுபோல, சில எழுத்துக்கள் உயிர் எழுத்துக்களோடு கூடி இருக்கும்போதுதான் ஒலிக்கும். அவ்வுயிரெழுத்துக்களோடு கூடாத பொழுது அவை ஒலிக்க வாரா. அதனல் அவை மெய்யெழுத்துக்கள் என்று கூறப்படும். இவ்வெழுத்துக்கள் **உடல், உடம்பு, உறுப்பு, ஒற்று, புள்ளி** எனவும் பெயர் பெறும்.

அவையாவன :

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டு எழுத்துக்களும் ஆம்.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், பதினெட்டு மெய்யெழுத்துக்களும் ஆகிய முப்பது எழுத்துக்களும், தமிழ் மொழிக்கு முதன்மையான எழுத்துக்களாம். இவை, உயிர்மெய் எழுத்துக்கள் முதலியன பிறப்பதற்கு முதலாக (காரணமாக) உள்ளன. எனவே, இவை முப்பதும் முதலெழுத்துக்கள் எனப்படும்.

"உயிரும் உடம்பும்ஆம் முப்பதும் முதலே"

(நன். சூ. 59)

3. சார்பெழுத்து

முதலெழுத்துக்களைப் போன்று தனித்து வருதலின்றி, அம்முதலெழுத்துக்களையோ, அன்றி ஒரு சொல்லையோ சார்பாக (இடமாக)க் கொண்டு தோன்றும் எழுத்துக்கள் சார்பெழுத்து என்று சொல்லப்பெறும். அவை, உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்னும் பத்து எழுத்துக்களுமாகும்.

"உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்" (நன். சூ. 60)

(அஃகிய - மாத்திரை குறைந்த; இதனை 'இ' முதலிய எல்லாவற்றோடும் கூட்டுக. தனிநிலை- ஆய்தம்.)

4. (1) குற்றியலுகரம்

மேற்கூறப்பட்ட சார்பெழுத்துக்கள் பத்தனுள் குற்றியலுகரமும் ஒன்றென்பதை முன்னைய பாடத்தால் நீங்கள் அறிவீர்கள். ஓசை குறைந்த இயல்பினை உடைய உகரம் **குற்றியலுகரம்** எனப்படும். உகரத்திற்கு இயல்பாக உள்ள மாத்திரை ஒன்று. ஆனால், அது சில சொற்களின் இறுதியில் வல்லின மெய்யின்மேல் ஏறி வரும்போது, தனக்கு உரிய ஒரு மாத்திரையினின்றும் குறைந்து ஒலிக்கும்.

படு, பாடு—இவற்றைச் சொல்லிப் பாருங்கள். 'படு' என்னும் சொல்லில் உள்ள உகரத்தின் ஓசையைக் காட்டிலும் 'பாடு' என்னும் சொல்லில் உள்ள உகரத்தின் ஓசை குறைந்து ஒலிப்பது தெரியும். இவ்வாறு குறைந்தொலிக்கும் உகரத்திற்கு மாத்திரை அரையாகும். அதனால் இவ்வுகரம் **குற்றியலுகரம்** எனப்படும்.

இன்னும், கதவு, கண்ணு, கம்பு—இவற்றுள் கதவு, கண்ணு என்னுஞ் சொற்களின் இறுதியிலுள்ள உகரத்தைக் காட்டிலும், 'கம்பு' என்னும் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் குறைந்தொலிப்பதையும் காணலாம்.

கீழ்வருவனவற்றைச் சொல்லிப் பாருங்கள் :—

(1)	நாடு,	காது,	பாகு.
(2)	அஃது,	கஃசு,	பஃது.
(3)	மரபு,	வரகு,	பாலாறு.
(4)	கட்டு,	பத்து,	புற்று.
(5)	வண்டு,	நுங்கு,	பந்து.
(6)	மார்பு,	போழ்து,	சார்பு.

மேலே கண்ட எடுத்துக் காட்டுகளிலிருந்து பின் வரும் சில விதிகளை அறியலாம்.

1. குற்றியலுகரச் சொற்களின் ஈற்றில், வல்லின மெய்களாகிய க்-ச்-ட்-த்-ப்-ற் என்பவற்றின் மேல் உகரம் ஏறிய கு-சு-டு-து-பு-று என்னும் எழுத்துக்களே இருக்கக் காணலாம்.

2. இச்சொற்களுள், தனிக்குற்றெழுத்தை ஈற்றெழுத்துக்கு அயல் எழுத்தாகக் கொண்டு, அவ்வீரெழுத்தால் மட்டும் வரும் சொல் ஒன்றும் இல்லாமையையும் அறியலாம்.

3. ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து நெட்டெழுத்து, ஆய்த எழுத்து, உயிரெழுத்து, வல்லின மெய், மெல்லின மெய், இடையின மெய் என்னும் ஆறுவகைகளுள் ஒன்ருக இருப்பதையும் காண்கின்ருேம்.

4. இரண்டு எழுத்துக்களைக் கொண்ட குற்றுகர ஈற்றுச் சொற்களுள் முதலெழுத்து நெடிலாய் இருப்பதையும் காணலாம்.

இதனுல், தனிக் குற்றெழுத்தல்லாத மற்றை எழுத்துக்களுக்குப் பின்னே ஒரு சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின்மேல் ஏறிவரும் உகரமே தன் மாத்திரையில் குறுகும் என்பதும், அதனுல் அது **குற்றியலுகரம்** என்று சொல்லப்படும் என்பதும் அறியலாம்.

இனி, இக்குற்றியலுகரம் அதன் அயல் எழுத்தால் ஆறு வகைப்படும்.

(1) நெடில் தொடர்

ஆடு, காது, சோறு—என்னும் சொற்களின் ஈற்றில் குற்றியலுகரம் இருப்பதை நாம் அறிவோம். அதன் அயலில் **ஆ, கா, சோ** என்னும் நெடிலெழுத்துக்கள் இருப்பதால், இவை **நெடிற் ருெடர்க் குற்றியலுகரம்** என்று கூறப்படும்.

[நெடில் தொடர்க் குற்றியலுகரச் சொற்களெல்லாம் இரண்டு எழுத்துக்களைக் கொண்டனவாகவே இருக்கும். இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களாலான சொல்லாய் இருந்து, அதன் ஈற்றயலெழுத்து நெடிலாயிருப்பினும், அது நெடில் தொடர்க் குற்றியலுகரமாகாது; உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் என்றே கூறப்படும். இவ்வேறுபாட்டினை அறிக.

உ-ம். மாடு—நெடில் தொடர்க் குற்றியலுகரம் (ஈரெழுத்துச் சொல்.)

மலாடு—உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் (மூவெழுத்துச் சொல்.)]

(2) ஆய்தத் தொடர்

அஃது, கஃசு, பஃது—என்னும் குற்றியலுகரச் சொற்களின் ஈற்றயலில் ஆய்தம் இருப்பதால், இவை **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்** ஆகும்.

(3) உயிர்த்தொடர்

மரபு, மிளகு, பாலாறு — இக்குற்றியலுகரச் சொற்களின் ஈற்றயலில் முறையே ர (ர்+அ), ள (ள்+அ),லா (ல்+ஆ) என்னும் உயிர் மெய் எழுத்

துக்கள் இருக்கின்றன. இவ்வெழுத்துக்களில் உள்ள அ, அ, ஆ என்னும் உயிரெழுத்துக்களைத் தொடர்ந்து குற்றியலுகரம் இருத்தலால், இவை **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

(4) வன்றொடர்

கட்டு, பத்து, புற்று—என்னும் குற்றியலுகரச் சொற்களின் ஈற்றயலில் உள்ள எழுத்துக்கள் ட், த், ற் என்னும் வல்லின மெய்களாகும். ஆதலால், இவ்வல்லினத்தைத் தொடர்ந்து வந்த இக்குற்றியலுகரமும் **வன்றொடர்க் குற்றியலுகரம்** என்று கூறப்படும்.

(5) மென்றொடர்

வண்டு, நுங்கு, பந்து—என்னும் இக்குற்றியலுகரச் சொற்களின் ஈற்றயலில் உள்ள எழுத்துக்கள் ண், ங், ந் என்னும் மெல்லின மெய்களாகும். இம்மெல்லின எழுத்துக்களைத் தொடர்ந்து வந்தமையால் இக்குற்றியலுகரங்கள் **மென்றொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

(6) இடைத்தொடர்

மார்பு, போழ்து, வெய்து—என்னும் இக்குற்றியலுகரச் சொற்களின் ஈற்றயலில் உள்ள எழுத்துக்கள் ர், ழ், ய் என்னும் இடையின மெய்களாகும். இவ்விடையின மெய்களைத் தொடர்ந்து வந்தமையால், இக்குற்றியலுகரங்கள் **இடைத்தொடர்க் குற்றியலுகரம்** எனப்படும்.

இவ்வாறு குற்றியலுகரம் தனக்கு அயலில் உள்ள எழுத்தை நோக்கி,

(1) நெடில் தொடர்க் குற்றியலுகரம் (நாடு)
(2) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் (அஃது)
(3) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் (வரகு)
(4) வன்றொடர்க் குற்றியலுகரம் (சுக்கு)
(5) மென்றொடர்க் குற்றியலுகரம் (சங்கு)
(6) இடைத்தொடர்க் குற்றியலுகரம் (மார்பு)

என ஆறு வகைப்படுதல் காண்க.

(குற்றியலுகரம் அல்லாத உகரமெல்லாம், தனக்குரிய ஒரு மாத்திரையை முற்றும்பெற்று ஒலித்தலால் அவை **முற்றியலுகரம்** எனப்படும்.)

> "நெடிலொடு ஆய்தம் உயிர்வலி மெலிஇடைத்
> தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
> அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே" (நன். சூ. 94)

(2) குற்றியலிகரம்

கொக்கு + யாது = கொக்**கி**யாது.
பாக்கு + யாது = பாக்**கி**யாது.
சொல்வது + யாது = சொல்வ**தி**யாது.
கேண்**மி**யா

இவற்றுள் **கி, தி, மி** என்பவை குற்றியலிகரங்கள். இகரம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிப்பதே குற்றியலிகரமாகும். குற்றியலுகரம் போலவே இதனையும் ஒலித்தற்குரிய கால அளவு ***அரை மாத்திரை***யாகும்.

ஒன்று சேரும் இருமொழிகளுள் முன்னது குற்றுகர மொழியாயும், பின்னது 'யா' என்னும்

எழுத்தை முதலாகக் கொண்ட மொழியாயும் உள் ளன. முன்னது *நிலைமொழி* பின்னது *வரு மொழி*.

நிலைமொழியின் ஈற்றிலுள்ள குற்றுகர எழுத்து, வருமொழி முதலில் யகரம் வந்தால் குற் றியலிகரமாகத் திரியும். '*மியா*' என்னும் அசைச் சொல்லில் இருக்கும் இகரமும், மாத்திரை குறைந் தொலிப்பதால் அஃதும் குற்றியலிகரமாகும்.

"யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய" (நன். சூ. 93)

5. மாத்திரை (விரிவாக)

(1) அ, இ, உ, எ, ஒ, க, கி, கு, கெ, கொ.

(2) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ.

மேலே இருவகையான எழுத்துக்கள் காட்டப் பட்டுள்ளன. அவற்றுள் முதலில் உள்ள எழுத் துக்கள் குறுகி ஒலிக்கின்றன. இரண்டாவதாக உள்ள எழுத்துக்கள் நீண்டு ஒலிக்கின்றன. இவற் றிலிருந்து எழுத்துக்களை ஒலிப்பதற்கு உரிய கால அளவைகள் உண்டு என்பதை நீங்கள் உணர லாம்.

ஒலியை அளப்பதற்குக் கருவி உண்டு. அக் கருவியை மாத்திரை என்பர். மாத்திரை என்ற சொல்லுக்கு 'அளவு' என்பது பொருள். ஒரு முறை இயல்பாகக் கண்ணிமைக்கும் நேரத்தை '*ஒரு மாத்திரை*' என்பர். ஒருமுறை கையை நொடிப்பதும் ஒரு மாத்திரையாகும்.

'அ' என்று சொல்வதற்கும், ஒரு முறை இயல்பாகக் கண்ணை இமைப்பதற்கும் சரியாக இருக்கும். ஆகவே, **குற்றெழுத்திற்கு ஒரு மாத்திரை** என்பதை நீங்கள் அறியலாம். **ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை** ஆகிய இவையும் தனித்தனி ஒவ்வொரு மாத்திரை பெறும்.

இவ்வாறே 'ஆ' என்று சொல்வதற்கும், இரு முறை கண்ணிமைப்பதற்கும் சரியாக இருக்கும். எனவே **நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டு.**

மெய்யெழுத்துக்களும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், முற்றாய்தமும் தனித்தனி **அரை அரை மாத்திரை** பெறும்.

மகரக் குறுக்கமும், ஆய்தக் குறுக்கமும் தனித்தனிக் **கால் மாத்திரை** பெறும்.

உயிரளபெடை மூன்று மாத்திரைகள் ஒலிக்கும். சில இடங்களில் **நான்கு மாத்திரை** யளவு ஒலித்தலும் உண்டு.

பயிற்சி

1. எழுத்தென்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
2. முதலெழுத்துக்கள் யாவை? அவை ஏன் முதலெழுத்து எனப்பட்டன?
3. சார்பெழுத்துக்கள் யாவை? அவற்றிற்கு ஏன் அப்பெயர் வந்தது?
4. 'குற்றியலுகரம்'—இதனை விளக்குக.
5. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? வகைக்கோர் உதாரணம் தருக.
6. குற்றியலிகரம் எங்கு வரும்? எத்தனை வகைப்படும்?
7. மாத்திரை என்றால் என்ன? எவ்வெவ்வெழுத்துக்கள் எத்தனை எத்தனை மாத்திரை ஒலிக்கும்?

II. சொல்

1. பதமாவது யாது?

ஓரெழுத்தே தனித்து நின்றேனும், இரண்டு முதலிய எழுத்துக்கள் தொடர்ந்து நின்றேனும் பிறபொருளை உணர்த்தி நிற்குமானால் அது பதமாகும். அப்பதம் பகுபதம் என்றும், பகாப்பதம் என்றும் இருவகைப்படும். **பதம், சொல், மொழி** என்பன ஒருபொருட் சொற்கள்.

'கண்ணன் வந்தான்' என்ற தொடரில் **கண்ணன், வந்தான்** என்னும் இரண்டு பதங்கள் இருக்கின்றன. இவை இரண்டும் 'பதங்கள்' என்று தம்மை உணர்த்திக் கொள்வதே யல்லாமல், 'கண்ணன் என்பது 'ஓர் ஆள்' என்றும், 'வந்தான்' என்பது 'அவன் செய்த தொழில்' என்றும் வேறு பொருளையும் உணர்த்தி நிற்றல் காண்க. இவ்வாறன்றி, எழுத்துக்கள் பல தொடர்ந்து நின்றாலும், அவை வேறு பொருளை உணர்த்தாவாயின் பதமாகமாட்டா.

(உ-ம்.) இறிஞி, மிறிஞி.

இவை மும்மூன்றெழுத்துக்கள் தொடர்ந்து பதம்போன்று காணப்பட்டாலும், பொருள் ஒன்றும் இல்லாமையால் பதமாகா.

2. ஓரெழுத்தொருமொழி

ஆ, ஈ, வா, போ, தா, நீ, தீ என்பன ஓரெழுத்து மொழிகள். இவை 'எழுத்துக்கள்' என்று தம்மை உணர்த்திக்கொள்வதேயன்றி, 'ஆ' என்பது பசுவினையும், 'ஈ' என்பது ஈக்களையும், 'வா,

போ' என்பன ஏவல் வினைகளையும், '*தா*' என்பது 'கொடு' என்னும் வினையையும், '*நீ*' என்பது முன் நிற்கும் ஒருவனையும், '*தீ*' என்பது நெருப்பினையும் உணர்த்தி வேறு பொருள்களைத் தந்தவாறும் காண்க. அதனால் இவை ஓரெழுத்து ஒரு மொழிகளாயின.

3. (1) பகாப்பதம்

பதங்கள், பகாப்பதம் என்றும், பகுபதம் என்றும் இருவகைப்படும் என்று முன்னமே கூறினோமன்றோ? அவற்றுள் பகாப்பதமாவது, ஒரு பதத்தைப் பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்க முடியாதது **பகாப்பதமாகும்.**

மண், நீர், பொன், மரம், பனை, வா, போ, தொல், ஓ, உறு, தவ என்பன பகாப்பதங்கள்.

இவற்றைப் பகுதி விகுதிகளாகப் பிரிக்க முடியாது. ஆதலால் இவை பகாப்பதங்கள். இச்சொற்களெல்லாம், தாம் தோன்றிய காலம் தொட்டு இன்றுள்ளவாறே ஒரே தன்மையாக இருந்து வருபவை. இவை, தம்மால் உணர்த்தப்படும் பொருள்களுக்குக் காரணத்தால் வந்தனவல்ல; இடுகுறியாக வந்தவை.

(2) பகுபதம்

பகுபதங்கள், பகுதி, விகுதி முதலிய பகுபத உறுப்புக்களைக் கொண்டனவாய், காரணமுடையவாய், புலவர்களால் அவ்வப்போது உண்டாக்கப் பெறுவனவாகும்.

4. பகுபத உறுப்புக்கள்

அப்பகுபத உறுப்புக்கள் ஆறு வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பன. இவற்றுள் இரண்டுறுப்பு முதல் ஆறு உறுப்புக்களையும் பகுபதங்கள் பெற்று வரும்.

(உ-ம்.)

ப வி

(1) கூனி = கூன் + இ

(இது பகுதி விகுதி என்னும் இரண்டு உறுப்பால் வந்த பகுபதம்.)

ப இ வி

(2) உண்டான் = உண் + ட் + ஆன்

(இது பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்று உறுப்பால் வந்த பகுபதம்).

ப இ சா வி

(3) உண்டனன் = உண் + ட் + அன் + அன்

(இது பகுதி, விகுதி, இடை நிலை, சாரியை என்னும் நான்கு உறுப்பால் வந்தபகுபதம்).

ப ச இ சா வி

(4) விழித்தனன் = விழி + த் + த் + அன் + அன்

இது பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்னும் ஐந்து உறுப்பால் வந்த பகுபதம்).

ப ச இ சா வி

(5) எழுந்தனன் = எழு + த் + த் + அன் + அன்

(இது ஆறு உறுப்புக்களையும் பெற்று வந்த பகுபதம். இதில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே சந்தியால் வந்த தகர வல்லொற்று நகர ஒற்ருகத் திரிந்து வந்துள்ளமை காண்க. இதுவே விகாரமாகும்.)

இவ்வாறு பகுதி விகுதி முதலிய உறுப்புக்களைப் பெற்றுப் பகுப்பதற்கு ஏற்றனவாக வரும் பதங்களெல்லாம் **பகுபத**மெனப்படும்.

" பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும் "
(நன். சூ. 133)

இச்சூத்திரத்தால் பகுபத உறுப்புக்கள் ஆறினையும் அறிக.

5. ஆகுபெயர்

தாமரை என்பது ஒரு கொடியின் பெயர். 'தாமரை மலர்ந்தது' என்று சொல்லும்போது, அது கொடியை உணர்த்தாது, அதன் சினையாகிய பூவை உணர்த்துகின்றது. இவ்வாறு ஒரு பொருளின் பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு ஆகி வரும்போது, அது **'ஆகுபெயர்'** எனப்படும். இது பொருளாகு பெயர் முதலியனவாகப் பலவகைப் படும்.

" பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே " (நன். சூ. 290)

6. தொழிற்பெயர் விகுதிகள் (விரிவாக)

ஒரு தொழிலின் பெயரை உணர்த்தி நிற்பது **தொழிற்பெயராகும். நடத்தல், வருதல்** என்னும் சொற்கள் தொழிலின் பெயரை உணர்த்துகின்றன. அதனால் இவை **தொழிற் பெயர்** எனப் படும். இப்பெயர்களின் இறுதியில் உள்ள **'தல்'**

என்னும் உறுப்பே **தொழிற்பெயர்** விகுதியாகும். இவ்வாறு தொழிற் பெயர்க்கு விகுதியாக வருவன பல உண்டு. அவை:

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, மதி என்பனவும் பிறவுமாம்.

நடித்தல், பாடல், வாட்டம், கொலை, செல்கை, பார்வை, போக்கு, காய்ப்பு, வரவு, மறதி, முயற்சி, கல்வி, விக்குள், சாக்காடு, மெய்ப்பாடு, தோற்றரவு, வாரானை, உண்டமை, கண்டது, ஏற்றுமதி என்னும் தொழிற்பெயர்கள் முறையே 'தல்' முதலிய விகுதிகளைக் கொண்டு வந்திருத்தல் காண்க. இவற்றுள் 'தோற்றரவு' என்பது 'தோன்றுதல்' என்றும், 'வாரானை' என்பது 'வருதல்' என்றும் பொருள்படும்.

7. பண்புப்பெயர் விகுதிகள்

செம்மை, நன்மை என்பன பண்புப் பெயர்கள். இவற்றின் இறுதியிலுள்ள 'மை' என்னும் விகுதி **பண்புப் பெயரின் விகுதியாகும்.**

நன்மை, மாட்சி, மாண்பு, நன்கு, நன்றி, நலம், நன்று என்பனவும் பண்புப் பெயர்களாகும். ஆதலின் இவற்றின் இறுதியிலுள்ள *மை சி, பு, கு, றி, அம், று* என்பனவும் பண்புப் பெயர் விகுதிகளே.

8. முதனிலைத் தொழிற்பெயர்

'சோறு கொதி வந்ததா ?'—என்னும் தொடரில், 'கொதி' என்பது கொதித்தல் என்னும்

பொருளில் வந்துள்ளது. 'கொதித்தல்' என்னும் சொல் தொழிற்பெயர் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இங்கு அது 'தல்' என்னும் விகுதியின்றி '**கொதி**' என்னும் முதனிலை (பகுதி) யாகவே நின்று 'கொதித்தல்' என்னும் தொழிற் பெயற் பொருளைத் தந்தது. இவ்வாறு ஒரு **தொழிற்பெயர் விகுதியின்றி, அதன் முதனிலை மட்டுமே நின்று, தொழிற்பெயர்ப் பொருளைத் தருமாயின், அது முதனிலைத் தொழிற் பெயர்** என்று சொல்லப்படும்.

கெடுதல், அடித்தல், முடிச்சி—என்பன தம் தொழிற்பெயர் விகுதிகள் கெட்டு, **கெடு**, **அடி**, **முடி** என்று நிற்றலால், அவை முதனிலைத் தொழிற் பெயராம்.

9. முதனிலை திரிந்த தொழிற் பெயர்

இன்று காய்ந்த வெய்யிலால் தரை மிகவும் **சூடு** ஏறிவிட்டது, **கேடு** வரும் பின்னே; மதி கெட்டு வரும் முன்னே—என்னும் இத்தொடர் களில் வந்துள்ள சூடு, கேடு என்னும் சொற்களைக் கவனிக்க. இவை முறையே சுடுதல், கெடுதல் என்னும் தொழிற்பெயர்ப் பொருளில் வந்துள்ளன. இத்தொழிற் பெயர்களின் 'தல்' விகுதி கெட்டு, இவற்றின் முதனிலைகளாகிய **சுடு**, **கெடு** என்பன **சூடு**, **கேடு** எனத் திரிந்து நின்றன. இவ்வாறு **ஒரு தொழிற்பெயர் தன் விகுதி கெட, அதன் முதனிலை திரிந்து நின்று, தொழிற்பெயர்ப் பொருளை உணர்த்துமாயின், அது முதனிலை திரிந்த தொழிற்பெயர்** என்று சொல்லப்படும்.

(உ - ம்.)

தொ. பெ.	மு. தி. தொ. பெ.
கொள்ளுதல்	கோள்
மின்னுதல்	மீன் (-மின்னுதல்)
உறுதல்	ஊறு
படுதல்	பாடு
இடையுறுதல்	இடையூறு

(குறிப்பு :

1. பகுதியும் விகுதியும் பெற்று வருவது, தொழிற்பெயர் —கெடுதல்.

2. விகுதி கெட்டுப் பகுதி திரியாது இயல்பாக நின்றே தொழிற்பெயர்ப் பொருளை உணர்த்தி வருவது, முதனிலைத் தொழிற் பெயர்—கெடு)

3. விகுதி கெட்டுப் பகுதி திரிந்துநின்று தொழிற் பெயர்ப் பொருளை உணர்த்தி வருவது, முதனிலை திரிந்த தொழிற் பெயர்—கேடு.)

10. வினையாலணையும் பெயர்

'முருகன் வந்தான்' என்பதில் 'வந்தான்' என்பது முருகனது வினையை உணர்த்துவதால், 'வினைமுற்று' ஆகும்.

'முருகன் வந்தான்; வந்தவன் ஒருமணி நேரங்கூட ஓய்வாக இருக்கவில்லை. இடைவிடாது படித்துக்கொண்டே இருந்தான்'—என்று சொல் லும்போது, வந்தவன் என்னும் வினை, வினையை உணர்த்தாது, அதனைச் செய்த முருகனுக்குப் பெயராக வந்தது. இவ்வாறு ஒரு வினைமுற்று, **தனக்குரிய வினைப்பொருளில் வராது, அதனைச் செய்தவனுக்குப் பெயராக அணையும் (பொருந் தும்) போது அது வினையாலணையும் பெயர் என்று சொல்லப்படும்.**

(உ-ம்.) கற்றவன் பெருமை யடைவான்.
உழைத்தவன் ஊதியம் பெறுவான்.
பாடுபட்டவன் பயனுறுவான்.

இத்தொடர்களில் அமைந்துள்ள கற்ருன், உழைத்தான், பட்டான் என்னும் வினைமுற்றுக்கள் **கற்றவன், உழைத்தவன், பட்டவன்** எனத் திரிந்து பெயர்ப்பொருளை உணர்த்தி நின்றமை காண்க. இவையெல்லாம் வினையாலணையும் பெயர்களாம்.

11. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேறுபாடு

தொழிற் பெயர் வருதல்—தொழிற் பெயர்	வினையாலணையும் பெயர் வந்தவன்—வினையாலணையும் பெயர்
1. ஒரு தொழிலுக்குப் பெயராய் வரும்.	1. வினையைச் செய்தவனுக்குப் பெயராய் வரும்.
2. படர்க்கை யிடத்தில் மட்டும் வரும்.	2. தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னும் மூன்றிடங்களிலும் வரும்.
3. காலம் காட்டாது.	3. மூன்று காலங்களையும் காட்டும்.

வந்தேனை (வந்த என்னை)க் கவனித்தாயா? வினையாலணையும் பெயர் தன்மையில் வந்தது.

கற்ருேய் வருக—வினையாலணையும் பெயர் முன்னிலையில் வந்தது.

சொன்னவனைத் தெரியும்—வினையாலணையும் பெயர் படர்க்கையில் வந்தது. இவற்ருல் வினையா

லணையும் பெயர் மூவிடத்திற்கும் உரியனவாய் வருதல் காண்க.

வந்தானைக் கண்டேன்—இறந்தகால வினையாலணையும் பெயர்.

வருகின்றவனைத் தடுத்தேன்—நிகழ்கால வினையாலணையும் பெயர்.

வருவானைக் கவனி—எதிர்கால வினையாலணையும் பெயர். இவற்ருல் வினையாலணையும் பெயர்கள் முக்காலத்தும் வருதல் காண்க.

பயிற்சி

1. பதமாவது யாது ?

2. ஓரெழுத்து ஒருமொழி என்ருல் என்ன ? உதாரணம் காட்டி விளக்குக.

3. பகாப்பதம் என்ருல் என்ன ?

4. பகுபதம் என்ருல் என்ன ? அதன் உறுப்புக்கள் எத்தனை வகைப்படும் ? சூத்திரம் தந்து விளக்குக.

5. ஆகுபெயரின் இலக்கணம் யாது ? அது எத்தனை வகைப்படும் ?

6. தொழிற்பெயர் என்ருல் என்ன ? அவற்றின் விகுதிகள் யாவை ?

7. பண்புப் பெயரின் விகுதிகள் யாவை ?

8. முதனிலைத் தொழிற் பெயர்கள் யாவை ? விளக்குக.

9. முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள் எவ்வாறு வரும் ? உதாரணத்தோடு விளக்குக.

10. வினையாலணையும் பெயர் என்று எவற்றிற்குப் பெயர் ?

11. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்குமுள்ள வேறுபாடுகள் யாவை ?

12. வேற்றுமை (விரிவாக)

1. முருகன்—இஃது ஒரு பெயர்ச்சொல். இச் சொல் முருகனை (ஐ), முருகனால் (ஆல்), முருக னுக்கு (கு), முருகனின் (இன்), முருகனது (அது), முருகனிடம் (இடம்), முருகா!—எனப் பலவகைப் பொருளில் வேறுபட்டு வருவதைக் காணலாம். இவ்வேறுபாடே **வேற்றுமை** எனப்படும். இவ் வேற்றுமைகளை உண்டாக்கும் ஐ முதலிய உருபு களே **வேற்றுமை உருபுகள்** எனப்படும்.

இவ்வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முறையே பெயர் வேற்றுமை அல்லது முதல் வேற் றுமை என்றும், இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற் றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை என்றும், எட்டாம் வேற்றுமை அல்லது விளி வேற்றுமை என்றும் பெயர்பெறும். இவற்றின் உருபுகள் பல.

"பெயரே ஐ, ஆல், கு, இன், அது, கண்,
விளியென் றாகும் அவற்றின் பெயர் முறை" (நன். சூ. 292)

இச்சூத்திரத்தால் வேற்றுமைகளின் பெயர் களையும், முறையினையும் அறியலாம்.

முதல் வேற்றுமை:

1. வேலன் வந்தான்
   மாடு வந்தது } வினைப்பயனிலை
2. அவர் யார்?
   நீ வருவாயா? } வினாப் பயனிலை
3. அவர் அரசர்
   இது பனைமரம் } பெயர்ப் பயனிலை

இவற்றுள் வேலன், மாடு, அவர், நீ, இது என்பன எழுவாய்ப் பொருளில் உள்ளன. இவை **முதல்வேற்றுமை. எழுவாய் வேற்றுமை** என்றும் இவை கூறப்படும். திரிபு இல்லாமல் இயல்பாய் நிற்கும் பெயர்ச்சொல் முதல் வேற்றுமை எனப்படும். இது வினை, வினா, பெயர் என்பவைகளைப் பயனிலையாகக் கொண்டு முடியும்.

"அவற்றுள்,
எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே"
(நன். சூ. 295)

முதல் வேற்றுமைச் சொற்கள் சிலவற்றைக் காண்க:—

கோவலனானவன் வந்தான்.
கோவலனென்பவன் மடிந்தான்.
அரசரானவர் ஆள்வார்.
யானையானது வந்தது.

இவற்றுள் **ஆனவன், என்பவன், ஆனவர், ஆனது** என்னும் சொற்கள் உருபுகளாய் வந்துள்ளன. முதல் வேற்றுமைக்கு உருபுகள் இல்லையாயினும், சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்பவன் முதலிய ஐம்பாற் சொற்களும் உருபுகளாக வருதலுண்டு. இவை சொற்களாய் இருத்தலின், **சொல்லுருபுகள்** எனப்படும்.

இரண்டாம் வேற்றுமை:

அரசன் கோயிலைக் கட்டினான். (ஆக்கல்)
யானை காட்டை அழித்தது. (அழித்தல்)
பெண் வீட்டை அடைந்தாள். (அடைதல்)

துறவி நாட்டை வெறுத்தான். (நீத்தல்)
இது பொன்னை யொக்கும். (ஒத்தல்)
முருகன் அழகினை உடையவன். (உடைமை)

இவற்றுள் இரண்டாம் வேற்றுமை உருபினை ஏற்ற பெயர்ச்சொற்களைக் கவனியுங்கள். கோயில், காடு, வீடு, நாடு, பொன், அழகு என்னும் சொற்களின் பொருள்களை **ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை** என்னும் வேறுபாட்டோடுங் கூடிய செயப்படுபொருள்களாக வேறுபடுத்தியது, 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபே என்பதை அறியலாம். இவ்வாறு ஐ என்னும் உருபு, செயப்படுபொருளில் வருவதால் இது **செயப்படுபொருள் வேற்றுமை** என்றும் வழங்கப்படும்.

"இரண்டா வதனுருபு ஐயே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும்" (நன். சூ. 296)

மூன்றும் வேற்றுமை:

வாளால் வெட்டினன் **அறத்தான்** வருவதே இன்பம்	கருவி
அரசனல் ஆகிய கோயில் அரசனன் ஆகிய கோயில்	கருத்தா
தந்தையொடு மைந்தன் வந்தான் தாயோடு மகள் வந்தாள்	உடனிகழ்ச்சி

இவற்றுள் வாள், அறம், அரசன், தந்தை, தாய் என்னும் சொற்களின் பொருள்களைக் **கருவி கருத்தா, உடனிகழ்ச்சி** என்னும் மூன்றும் வேற்றுமைக்குரிய பொருள்களாக வேறுபடுத்தியவை **ஆல், ஆன், ஒடு, ஓடு** என்னும் உருபுகளேயாகும்.

ஆதலால் இவை மூன்ரும் வேற்றுமை உருபு களாகும்.

"மூன்ரு வதனுருபு ஆல்ஆன் ஓடுஒடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள்"

(நன். சூ. 297)

மரம் வாள்கொண்டு வெட்டப்பட்டது-(கருவி)
மகள் தாயுடன் வந்தாள்-(உடனிகழ்ச்சி)

இவற்றுள் கொண்டு, உடன் என்னும் சொற்கள், வாள், தாய் என்பனவற்ரேடு சேர்ந்து, மூன்ரும் வேற்றுமை உருபின் பொருள்களாகிய கருவி, உடனிகழ்ச்சிப் பொருள்களைத் தந்தமையால், இவை மூன்ரும் வேற்றுமைச் சொல்லுருபுகள் எனப்படும்.

நான்காம் வேற்றுமை:

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் (கொடை)
பாம்புக்குப் பகை கருடன்—(பகை)
கபிலருக்கு நண்பர் பரணர்—(நேர்ச்சி-நட்பு)
அரசருக்கு உரியது முடி—(தகவு)
வளையலுக்குப் பொன் தேவை—(அதுவாதல்-முதற்காரணம்)
கூலிக்கு வேலை செய்தான்—(பொருட்டு-நிமித்த காரணம்)
தசரதனுக்கு மகன் இராமன்—(முறை)

இவற்றுள் இரவலர், பாம்பு, கபிலர், அரசர், வளையல், கூலி, தசரதன் ஆகிய பெயர்ச்சொற்களின் பொருளைக் கொடை, பகை, நேர்ச்சி (நட்பு), தகவு, அதுவாதல் (முதற்காரணம்),

பொருட்டு (நிமித்தகாரணம்), முறை முதலிய நான்காம் வேற்றுமைக்குரிய பொருள்களாக வேறு படுத்தியது 'கு' என்னும் உருபேயாகும். ஆதலால் இது நான்காம் வேற்றுமை உருபாம்.

" நான்கா வதற்குருபு ஆகும் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவு அதுவாதல்
பொருட்டுமுறை ஆதியின் இதற்கிதெனல் பொருளே "
(நன்.சூ.298)

கூலியின் **பொருட்டு** வேலை செய்தான்—(நிமித்த காரணம்)

வேலையின் ***நிமித்தம்*** படித்தான்—(நிமித்த காரணம்)

காப்புக்**காகப்** பொன் தேவை—(முதற் காரணம்)

இவற்றுள் **பொருட்டு, *நிமித்தம்*, ஆக** என்பன நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளன. ஆதலால், இவை இவ்வேற்றுமையின் சொல்லுருபுகளாம்.

ஐந்தாம் வேற்றுமை :

மலை***யின்*** வீழருவி (நீங்கல்)
காக்கை***யின்*** கரிது களம்பழம் (ஒப்பு)
மதுரை***யின்*** வடக்குச் சிதம்பரம் (எல்லை)
கல்வி***யில்*** பெரியவர் கம்பர் (ஏது)

இவற்றுள் மலை, காக்கை, மதுரை, கல்வி ஆகிய பெயர்ச் சொற்களின் பொருளை, நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்களாக வேறுபடுத்தியவை **இன், இல்** என்ற வேற்றுமை உருபுகளேயாம். ஆதலால், இவை ஐந்தாம் வேற்றுமை உருபுகளாம்.

"ஐந்தாவதனுருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பெல்லை ஏதுப் பொருளே" (நன். சூ. 299)

துன்பத்தினின்று நீங்கினன் (நீங்கல்)
மதுரையிலிருந்து வந்தான் (,,)

இத்தொடர்களுள் *நின்று*, *இருந்து* என்னும் சொற்கள் ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்திருப்பதை அறியலாம். ஆதலால், இவை ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபுகள்.

ஆறும் வேற்றுமை:

முருகனது வீடு
எனது புத்தகம்
உனது மோதிரம்.

இவற்றுள் முருகன் முதலிய பெயர்ச் சொற்களின் பொருளை, ஆறும் வேற்றுமைக்குரிய கிழமை (உரிமை)ப் பொருளாக வேறுபடுத்தியது '*அது*' என்னும் உருபாகும்.

'தனது கை'—என்பதில் *ஆது* என்பதும் ஆறும் வேற்றுமையின் உருபே ஆயினும், இவ்வுருபு உரைநடையில் வராது.

'தன கைகள்'—என்பதில் '*அ*' என்பது பன்மையில் வரும் ஆறும் வேற்றுமையின் உருபு. இவ்வுருபும் பெரும்பாலும் செய்யுட்களிலேதான் வரும். உரைநடையில் சிறுபான்மையாகவே வரும்.

இதனுல், ஆறும் வேற்றுமை உருபுகள் *அது*, *ஆது*, *அ* என்பனவாகும்.

மேலும் இவ்வுருபுகள்,

முருகனது கை—(தற்கிழமை - முருகனேடு பிரிக்க முடியாத ஒற்றுமை உடையது.)

முருகனது வீடு—(பிறிதின் கிழமை - கையிணைப் போன்று முருகனோடு ஒற்றுமையுடையதன்றி வேறுபட்டு நிற்பது.)

எனத் தற்கிழமைப் பொருளிலும், பிறிதின் கிழமைப் பொருளிலும் வருவனவாகும். தற்கிழமை—**பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம்** என்னும் பொருள்களிலும், பிறிதின்கிழமை - **பொருள், இடம், காலம்** என்னும் பொருள்களிலும் வரும். இவற்றின் விரிவினை மேல்வரும் வகுப்புக்களில் கற்றுணர்க.

"ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்புறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபி னாக்கம் ஆம்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே"

(நன். சூ. 300)

மன்னனு**டைய** மாளிகை

கண்ணனு**டைய** குழல்

இவற்றில் '**உடைய**' என்னும் சொல் மன்னன், கண்ணன் என்னும் பெயர்ச் சொற்களின் பொருளை வேறுபடுத்தியது. ஆதலால், இஃது ஆறும் வேற்றுமையின் **சொல்லுருபாகும்.**

குறிப்பு: எனது புத்தகம்—'அது' ஒருமையில் மட்டும் வரும்; பன்மையில் வராது.

என்னுடைய புத்தகம்
என்னுடைய புத்தகங்கள் } 'உடைய' ஒருமை, பன்மை இரண்டிலும் வரும்.

ஏழாம் வேற்றுமை:

மணியின்**கண்** ஒளி இருக்கிறது.

(தற்கிழமை)

மரத்தின்கண் கிளி இருக்கிறது

(பிறிதின் கிழமை)

இத்தொடர்களுள் மணி, மரம் என்னும் பெயர்ச் சொற்களின் பொருளை ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளாக வேறு படுத்தியது, 'கண்' என்னும் உருபாகும். ஆதலால் இஃது ஏழாம் வேற்றுமை உருபாம். இவற்றுள் 'மணியின் கண் ஒளி'—என்புழி மணியை விட்டு ஒளியைப் பிரிக்க முடியாது. ஆதலால் மணி, ஒளிக்குத் தற்கிழமையில் இடமாயிற்று. மரத்தின் கண் கிளி'—என்புழி மரத்தை விட்டுக் கிளி பிரிந்தும் செல்லும். ஆதலால் மரம், கிளிக்குப் பிறிதின்கிழமையில் இடமாம்.

இவ்வெட்டாம் வேற்றுமைக்கு மேற்குறிப்பிட்ட 'கண்'ணேயன்றிக் கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் என்பனவும் இடப்பொருளைச் சுட்டும் உருபுகளாய் வரும்.

"ஏழன் உருபுகண் ஆதி யாகும்
பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப"

(நன். சூ. 301)

"கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உழைவழி உழியுளி
உள் அகம் புறம்இல் இடப்பொருள் உருபே"

(நன். சூ. 302)

எட்டாம் வேற்றுமை :

முதல் வேற்றுமை	எட்டாம் வேற்றுமை	
முருகன்	முருகன்	— ஈறு இயல்பாயிற்று.
நண்பன்	நண்ப	— ஈறு கெட்டது. (அண்மைவிளி)
தம்பி	தம்பீ	— ஈறு நீண்டது.
வேலன்	வேலா	— ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது.
குழந்தை	குழந்தாய்	— ஈற்று 'ஐ'......'ஆய்' எனத் திரிந்தது.
மக்கள்	மக்காள்	— ஈற்றயல் நீண்டது. (சேய்மைவிளி)

இத்தொடர்களைக் கவனிக்க. முருகன்முதல் மக்கள்வரை உள்ள முதல் வேற்றுமைச் சொற்கள் பொருளில் மாறுபட்டிருத்தலேயன்றி, முருகன் ஒழிந்தவை உருவத்திலும் மாறுபட்டிருக்கின்றன. எட்டாம் வேற்றுமைக்கும், முதல் வேற்றுமையைப் போல உருபில்லையாயினும் இது விளித்தற் (அழைத்தல்) பொருளில் வரும் என்பதை அறிந்து கொள்க.

ஒரு பெயர்ச்சொல் **ஈறுமிகுதல், ஈறுதிரிதல், ஈறுகெடுதல், ஈற்றயல் எழுத்துத் திரிதல்** ஆகிய வற்றுள் ஒன்றோ பலவோ பெற்று எட்டாம் வேற்றுமையில் வரும். அண்மை விளியில் மட்டும் '**முருகன்**' என்பது போன்று இயல்பாய் நின்றும் எட்டாம் வேற்றுமையைக் காட்டுவதுண்டு.

இவற்றுள் **முருகன், நண்ப** என்பன போன்றவை, அண்மையில் (பக்கத்தில்) இருப்ப

வரை விளிக்க (அழைக்க) வருவதால், இவை ***அண்மைவிளி*** என்று சொல்லப்படும்.

தம்பி, வேலா என்பன போன்றவை, சேய்மை யில் (தூரத்தில்) இருப்பவரை விளிக்க வருவதால், இவை ***சேய்மைவிளி*** என்று சொல்லப்படும். எட்டாம் வேற்றுமையை ***விளிவேற்றுமை*** என்றும் சொல்வதுண்டு.

> "எட்ட னுருபே எய்துபெய ரீற்றின்
> திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
> திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
> தன்முக மாகத் தானழைப் பதுவே" (நன். சூ. 303)

பயிற்சி

1. இரண்டாம் வேற்றுமை உருபு எப்பொருளில் வரும்? உதாரணங்கள் தருக.

2. ஆல், ஓடு, உடன்—இவை எப்பொருள்களில் வரும்?

3. சென்னைக்கு வடக்கே ஒற்றியூர், கோயிலில் இறைவன் உளன், வீட்டில் அறைகள் உள்ளன, முருகனது கண், கந்தனது பை, ஆறுமுகனில் பெரியவன் ஆனைமுகன்—இவற்றில் வந்துள்ள வேற்றுமை உருபுகள் எப்பொருள்களில் வந்துள்ளன என்பதை விளக்கிக் கூறுக.

4. நான்காம் வேற்றுமையுருபு எப்பொருள்களில் வரும் என்பதை மேற்கோள் காட்டி விளக்குக.

5. எனது பைகள், எனது பை, என பை, என பைகள்—இவற்றில் எவை சரி, எவை தவறு என்பதைக் காரணத்தோடு விளக்கிக் காட்டுக.

6. எட்டாம் வேற்றுமைக்கு வரும் பொருள் யாது? இவ்வேற்றுமையில் இயற்பெயர் அடையும் மாறுதல்களைத் தக்க உதாரணங்களால் விளக்குக.

7. எட்டாம் வேற்றுமைக்குரிய உருபுகள் யாவை?

8. அண்மைவிளி, சேய்மைவிளி என்றால் என்ன?

13. வினைச்சொல் இலக்கணம்

வினைமுற்று - வினையெச்சம் - பெயரெச்சம்

1. கந்தன் கடைக்குப் **போனான்.**
முருகன் வள்ளியை **மணந்தான்.**
நான் சோற்றை **உண்டேன்.**

இவற்றுள் '**போனான், மணந்தான், உண்டேன்**' என்னும் சொற்கள் முறையே **கந்தன், முருகன், நான்** என்னும் பெயர்ச்சொற்களின் தொழிலை (வினையை) உணர்த்துகின்றன. ஆதலால் இவை **வினைச்சொற்கள்** எனப்படும். 'வினைச்சொல்' என்பதற்குத் 'தொழிலைத் தெரிவிக்கும் சொல்' என்பது பொருள். வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றைக் காட்டும்; வேற்றுமை உருபை ஏலா.

முருகன் **வந்தான்.**
வந்த முருகன்.
வந்து போனான்.

இம்மூன்று சொற்றொடர்களில் **வந்தான், வந்த, வந்து** என்பன வினைச்சொற்கள். இவை காட்டும் வேறுபாடு யாது? **வந்தான்** என்னும் வினைச்சொல் முடிந்த தொழிலை உணர்த்தி நிற்கிறது. இங்ஙனம் பொருள் முற்றி (முடிந்து) **நிற்கும் வினைச்சொல் முற்றுவினை அல்லது வினைமுற்று** என்று கூறப்படும்.

2. **வந்த, வந்து** என்னும் இருவினைகளும் தொழில் முற்றுப்பெற்றதைக் குறிக்கவில்லை. முன்னது **முருகன்** என்னும் பெயரைக்கொண்டு முடிகிறது. பின்னது **போனான்** என்ற மற்றொரு

வினையைக்கொண்டு முடிகிறது. இங்ஙனம் **வினைச் சொற்கள்** பொருள் முடியாது பெயரையோ, வினையையோ கொண்டு முடியுமாயின் அவை **எச்சவினைகள்** என்று கூறப்படும்.

(1) '**வந்த முருகன்**'—என்பதில் **வந்த** என்னும் எச்சவினை 'முருகன்' என்னும் பெயரைக் கொண்டு முடிதலால் (பெயர் எஞ்ச நிற்றலால்) இது **பெயரெச்சம்** எனப்படும்.

(2) '**வந்து** போனான்'—என்பதில் **வந்து** என்னும் எச்சவினை 'போனான்' என்னும் வினை முற்றைக்கொண்டு முடிதலால் (வினை எஞ்ச நிற்றலால்) இது **வினையெச்சம்** எனப்படும்.

முருகன் **வந்தான்**—இதில் 'வந்தான்' என்னும் வினைமுற்று, **உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கையிடம், இறந்த காலம்** என்பனவற்றைக் காட்டினமையும், வேற்றுமை யுருபினை ஏலாமையும் காண்க. இவ்வாறே,

1. அறுமுகன் அருள் **புரிந்தான்**—உயர் திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம்.
2. திருமகள் **வருகின்றாள்**—உயர்திணை, பெண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், நிகழ்காலம்.
3. அறிஞர் **வருவார்**—உயர்திணை, பலர் பால், பன்மை எண், படர்க்கை இடம், எதிர்காலம்.
4. மயில் **வந்தது**—அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம்.

5. குயில்கள் **பறந்தன**—அஃறிணை, பலவின் பால், பன்மை எண், படர்க்கை இடம், இறந்த காலம்.
6. நான் **வந்தேன்**—ஒருமை எண், தன்மை இடம், இறந்த காலம்.
7. நீ **சென்ருய்**—ஒருமை எண், முன்னிலை இடம், இறந்த காலம்.

என்பனவற்றுள் **புரிந்தான்** முதலிய வினை முற்றுக்கள் **திணை, பால், எண், இடம், காலம்** ஆகியவற்றைக் காட்டியவாறும், உருபினை ஏலா வாறும் காண்க.

[குறிப்பு: தன்மை, முன்னிலை வினைமுற்றுக்கள், திணை பால்களைக் காட்டமாட்டா. 'நான் வந்தேன்'—என்பதில் உள்ள 'வந்தேன்' என்னும் தன்மை வினைமுற்று உயர் திணையையோ, அஃறிணையையோ உணர்த்தாது; அவ் விரண்டிற்கும் பொதுவாய் நிற்கும். சொல்லுகின்றவன் குறிப்பைக்கொண்டு அஃது உயர்திணையா அன்றி அஃறிணையா என்று அறிதல் வேண்டும். முன்னிலை வினைமுற்றும் அத்தன்மையதே.]

14. தெரிநிலை வினைமுற்று

ஒரு பொருளினது வினையை (தொழிலை) உணர்த்தும் சொல், வினைச்சொல் என்பதை முன்னரே அறிந்தோம். அவ்வினைச் சொற்கள் '**தெரிநிலை வினை, குறிப்பு வினை**' என்று இரு வகைப்படும். அவற்றுள் தெரிநிலை வினையைப் பற்றி ஈண்டு ஆராய்வோம்.

"*தச்சன் நாற்காலியைச் செய்தான்*"

இவ்வாக்கியத்தில் **செய்தான்** என்பது வினை முற்று. இவ்வினைமுற்று, செய்பவன், காலம் முதலியவற்றைக் காட்டுவதைக் கீழே காண்க:

தச்சன்—(நாற்காலியைச்) செய்பவன்.

மரம், உளி, வாள் முதலியன—(நாற்காலியைச் செய்வதற்குரிய) கருவி.

தச்சுப்பட்டறை—(நாற்காலியைச் செய்யும்) நிலம் அல்லது இடம்.

செய்தான்—(நாற்காலியைச் செய்தலாகிய) செயல், காலம்.

நாற்காலி—(நாற்காலியாகிய) செய்பொருள் அல்லது செயப்படு பொருள்.

செய்தான் என்னும் தெரிநிலை வினைமுற்று, செய்பவனாகிய தச்சனையும், செய்தற்குரிய கருவியையும், செய்யும் இடத்தையும், செயலையும், செய்த காலத்தையும், செய்யப்பட்ட பொருளாகிய நாற்காலியையும் காட்டிற்று. அஃதாவது, வினைமுற்றின் பகுதியால் செயலும், விகுதியால் செய்பவனும், இடைநிலையால் காலமும் வெளிப்படையாகத் தெரிய (தோன்ற அல்லது நிற்க), மற்றவை குறிப்பாகத் தோன்றியதைக் காண்க. காலத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கும் வினை தெரிநிலை வினையாம்.

(சில தெரிநிலை வினைமுற்றுக்களில் பகுதியேனும், விகுதியேனும் காலம் காட்டும் என்பதையும், சில வினைமுற்றுக்கள் செயப்படு பொருளைக் காட்டா என்பதையும் அறிக.)

''செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே''

(நன். சூ. 320)

15. குறிப்பு வினைமுற்று

(1) இவன் **செல்வன்** (செல்வத்தை உடையவன்—பொருள்.)

(2) இவன் **மதுரையான்** (மதுரையில் இருப்பவன்—இடம்.)

(3) இவன் **சித்திரையான்** (சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவன்—காலம்.)

(4) இவன் **பல்லன்** (பல்லை உடையவன்—சினை.)

(5) கண்ணன் **கரியன்** (கருமை நிறம் உடையவன்—குணம்.)

(6) யானை தூங்கு **நடையது** (நடத்தலை உடையது—தொழில்.)

மேற்கண்டவைகளில், செல்வன், மதுரையான், சித்திரையான், பல்லன், கரியன், நடையது என்பன குறிப்பு வினைமுற்றுக்கள். இவை முறையே **பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்** என்ற அறுவகைப் பெயர்களினடியாகப் பிறந்தவை. ஆகவே, இவை பெயர்ச் சொற்களைப் போலத் தோன்றும். ஆனால் இவை யாவும் குறிப்பு வினைமுற்றுக்கள். இவை விகுதியினால் கருத்தாவைக் காட்டின; மற்றையவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

எனவே, **செயலும் காலமும் வெளிப்படையாகத் தெரிதலின்றி, சொல்லுவானுடைய குறிப்பால் தெரியலுறும் வினைச்சொல் குறிப்பு வினையாகும். இதனை வினைக் குறிப்பு** என்றும் கூறலாம்.

'இவன் செல்வன்' என்றவிடத்து, 'செல்வன்' என்பது பொருளடியாகப் பிறந்த குறிப்பு வினை முற்று. அது, செல்வத்தை உடையவனு யிருந் தான்—இருக்கிறுன்—இருப்பான்' எனப் பொருள் பட்டு, தொழிலும் காலமும் குறிப்பாகத் தோன்றி, 'இவன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நிற்றலை அறிக. மற்றவற்றையும் இவ்வாறே ஆராய்ந்து அறிக.

"பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே"
(நன். சூ. 321)

16. செய்யும் என்னும் வினைமுற்று

அவன் உண்ணும்.
அவன் செல்லும்.
அஃது ஓடும்.
மயில் அகவும்.

மேலே உள்ள எடுத்துக்காட்டுகளில் இருக் கும் உண்ணும், செல்லும், ஓடும், அகவும் என்பன வினைமுற்றுக்கள். அவை **செய்யும்** என்னும் ஓசைக்கு ஏற்ப நிற்கின்றன. ஆகவே, அவை **செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக் கள்** எனப்படும்.

அவன் உண்ணும் அவன் செல்லும்	படர்க்கை ஆண்பாலில் வந்தன.
அவள் உண்ணும் அவள் செல்லும்	படர்க்கைப் பெண்பாலில் வந்தன.
அஃது உண்ணும் அது செல்லும்	படர்க்கை ஒன்றன்பாலில் வந்தன.

அவை உண்ணும் } படர்க்கைப் பலவின்
அவை செல்லும் } பாலில் வந்தன.

செய்யும் என்னும் வினைமுற்று, படர்க்கையில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்களில்தான் வரும். அது படர்க்கைப் பலர்பாலிலும், தன்மை முன்னிலையாகிய இடங்களிலும் வராது.

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே" (நன். சூ. 348)

பயிற்சி

1. வினைச்சொல் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

2. எச்சவினைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? உதாரணம் தந்து விளக்குக.

3. வினை முற்றுக்கள் எவ்வெவற்றைக் காட்டும்?

4. தெரிநிலை வினைமுற்று என்றால் என்ன? அதற்கு ஏன் அப்பெயர் வந்தது?

5. குறிப்பு வினைமுற்று என்று ஏன் பெயர் வந்தது? அஃது எவற்றினடியாகப் பிறக்கும்? மூன்றிற்கு உதாரணம் தருக.

6. செய்யும் என்னும் வினைமுற்று என்றால் என்ன? அஃது எவ்வெப்பால்களில் வரும்? எங்கெங்கு வராது?

7. உண்டான், ஓடார்—இவ்விரு வினைமுற்றுக்களுக்குமுள்ள வேறுபாடு யாது?

17. இடைச்சொல்

கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகளைப் படித்துப் பாருங்கள்:

(1) ஐ, ஆல், ஆன், ஒடு, ஓடு, கு, இன், இல், அது, அ, இல், இடம், கண் முதலியவை—வேற்றுமை உருபுகள்.

(2) அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் முதலியன—விகுதிகள்.

(3) த், ட், ற், இன், ப், வ், கிறு, கின்று, ஆநின்று முதலியன—இடைநிலைகள்.

(4) இன், அன், அத்து முதலியன—சாரியைகள்.

(5) போல, ஒப்ப, நிகர, அன்ன, இன்ன முதலியவை—உவம உருபுகள்.

(6) அ, இ, உ என்பன (சுட்டுப் பொருளில் வருபவை)—சுட்டெழுத்துக்கள்.

(7) எ, யா, ஆ, ஓ, ஏ என்பன (வினாப் பொருளில் வருபவை)—வினா எழுத்துக்கள்.

(8) கலீர் கலீர், கொல், திடுக்கென, சரேரென, சீச்சீ, ஏயோ, நெறுநெறென முதலியன—குறிப்பால் பொருள் தருவன.

(9) செய்யுளில் வேறு பொருளைத் தராது, இசைக்காக வரும் எழுத்துக்களாகிய ஏ, ஓ முதலியன—இசைநிறை.

(10) பொருள் உணர்த்தாது அசைநிலையாகச் செய்யுளில் வருவனவாகிய ஏ, ஓ, ஆல் முதலியன —அசைநிலை.

(11) வேறு பொருளை உணர்த்தாது தமக்குரிய பொருளை உணர்த்தவரும் ஏ, ஓ, உம், மற்று, மன் முதலியன—தத்தம் பொருளைத் தருவன.

இவற்றை ஆராயின், இவை பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும்போல் இராமை தெரிய வரும்.

இவை பெயர் வினைகளைப்போல் தனித்து இயலும் ஆற்றல் அற்றவை. அதனால் இவை பெயரையேனும், வினையையேனும் சார்ந்து அவற்றினிடமாக வருகின்றன. மேலும் இவை பெயர்ச்சொல்லும் ஆகாமல், வினைச்சொல்லும் ஆகாமல், அவற்றின் வேறுமாகாமல் நடுநிலைத் தன்மையை அல்லது இடைப்பட்ட தன்மையை உடையனவாய் உள்ளன. எனவே இவை இடைச்சொற்கள் என்று சொல்லப்பெறும். பெரும்பாலும் இவை பெயர் வினைகளின் இடையில் (இடத்தில்; இடை - இடம்) வருவதால் இடைச்சொல் எனப்பட்டன எனினும் பொருந்தும்.

இனித் தத்தம் பொருளை உணர்த்தி வரும் இடைச்சொற்களுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

18. ஏ-ஓ-உம்-கொல் என்னும் இடைச்சொற்கள்

1. ஏகார இடைச்சொல்

(1) இம்மாணவர்களுள் இவனே பரிசு பெற்றவன்.

நூல்களுக்குள் திருக்குறளே சிறந்தது.

மேலே உள்ளவற்றில் 'ஏ' என்னும் இடைச்சொல் வந்துள்ளது. அவ்விடைச்சொல், பல பொருள்களிலிருந்து ஒரு பொருளைப் *பிரிக்க* உதவுகின்றது. ஆகவே, ஏகார இடைச்சொல் இவ்விடங்களில் *பிரிநிலைப் பொருளில்* வந்துள்ளது.

(2) நீயே கொண்டாய்?

முருகனே வந்தவன்?

மேலே வந்துள்ள ஏகார இடைச்சொல், 'நீயா கொண்டாய்', 'முருகனா வந்தவன்' என்று பொருள்பட்டு, **வினாப்பொருளை** உணர்த்திற்று. ஆதலால் இவ்விடங்களில் ஏகார இடைச்சொல் **வினாப்பொருளில்** வந்துள்ளது.

(3) குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில் நெடிலே.

முருகனே கந்தனே கடம்பனே மூவரும் வந்தார்.

மேலே வந்துள்ள ஏகார இடைச்சொல், 'குறிலும், நெடிலும், குறில் நெடிலும்' என்றும், 'முருகனும், கந்தனும், கடம்பனும் என்றும் பொருள் பட்டு **எண்ணுப் பொருளை** உணர்த்திற்று. ஆதலால் இவ்விடங்களில் ஏகார இடைச்சொல், **எண்ணுப் பொருளில்** வந்துள்ளது.

(4) நெல் விளையுமே.

வாழ்க வாழ்கவே.

மேலே வந்துள்ள ஏகார இடைச்சொல் ஒரு பொருளும் தராமல் நின்றது. இவ்வாறு ஒரு பொருளும் தராமல் வருவது **அசை** எனப்படும். ஆகவே, இவ்விடங்களில் ஏகார இடைச்சொல் **அசைநிலைப் பொருளில்** வந்தது. இவ்வசைநிலை ஏகாரம் பெரும்பாலும் ஈற்றில் வருதலால், இஃது **ஈற்றசை** என்றும் சொல்லப்படும்.

(5) காந்தியடிகளே பெரியவர்.

இளங்கோவடிகளே பெரும்புலவர்.

மேலே உள்ளவற்றில் ஏகார இடைச்சொல் தரும் பொருளைக் கவனியுங்கள். அஃது ஒவ்வொரு பொருளையும் ஐயத்திற்கு இடமில்லாமல் **தெளிவாக** அல்லது தேற்றமாக விளக்குகின்றது. ஆகவே ஏகார இடைச்சொல் இவ்விடங்களில் **தேற்றப் பொருளில்** வந்துள்ளது.

(6) ஏஎ இவளொருத்தி பேடியோ என்றார்.

மேலே வந்துள்ள ஏகார இடைச்சொல் ஒரு பொருளையும் உணர்த்தவில்லை. ஆனால் செய்யுளில் **இசைநிறைத்து** நின்றது. ஆதலால் இங்கு வந்துள்ள ஏகாரம் **இசைநிறைப் பொருளில்** வந்த இடைச்சொல்லாகும்.

எனவே, ஏகார இடைச்சொல் **பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை** என்னும் ஆறு பொருள்களில் வரும் என அறிக.

> '' பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
> இசைநிறை எனஆறு ஏகா ரம்மே ''
>
> (நன். சூ. 422)

2. ஓகார இடைச்சொல்

(1) 'படிக்கவோ வந்தாய்'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், 'படிக்க வரவில்லை; விளையாட வந்தாய்' என்னும் **ஒழிந்த பொருளைத்** தருதலால், இவ்வோகாரம் **ஒழியிசைப் பொருளில்** வந்தது.

'முருகனோ வந்தவன்'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், 'முருகனா வந்தவன்' என்னும் **வினாப்பொருளைத்** தருதலால் இது வினாப்பொருளில் வந்தது.

(3) 'ஓஓ காந்தியடிகள் மிகப் பெரியவர்'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், காந்தியடிகளின் பெருமையாகிய *உயர்வினைச் சிறப்பித்தலால்,* இஃது *உயர்வு சிறப்புப் பொருளில்* வந்தது.

'ஓஓ இவன் மிகக் கொடியவன்'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், ஒருவனது கொடுமையாகிய *இழிவினைச் சிறப்பித்து* (மிகுத்து) உரைத்தலால், இஃது *இழிவுச் சிறப்புப் பொருளில்* வந்தது.

(4) 'நானோ கொடுப்பேன்'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல் 'நான் கொடுக்க மாட்டேன்' என்னும் *எதிர்மறைப் பொருளைத் தருதலால்* இஃது *எதிர்மறைப் பொருளில்* வந்தது.

(5) 'பொன்னோ அதுவுமன்று; பித்தளையோ அதுவுமன்று'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், 'பொன்னும் பித்தளையும் அல்ல' என்று *தெரிவித்து நிற்றலால்,* இது *தெரிநிலைப் பொருளில்* வந்தது.

(6) 'பாரிவள்ளலோ இறந்துவிட்டான்'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், *இறந்துபோன (கழிந்துபோன) பாரியைக் குறித்து இரங்குதலை உணர்த்தலால்* இது *கழிவிரக்கப் பொருளில்* வந்தது. (கழிவிரக்கம் - கழிந்துபோன அல்லது நடந்துபோன ஒன்றைக் குறித்து இரங்குவதாகும்.)

(7) 'காணிய வம்மினோ'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், யாதொரு பொருளு

மின்றி *அசைநிலையாக* நிற்றலால், இஃது *அசை நிலைப் பொருளில்* வந்தது.

(8) 'இவனே கொண்டான்'—இத்தொடரில் வந்துள்ள ஓகார இடைச்சொல், இங்குள்ள பலருள் இவன்தான் கொண்டான், எனப் பலபேருள் ஒருவனைப் *பிரித்துணர்த்தலால்*, இது *பிரிநிலைப் பொருளில்* வந்தது.

எனவே, ஓகார இடைச்சொல் *ஒழியிசை, வினு, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவிரக்கம், அசைநிலை, பிரிநிலை* என்னும் எட்டுப் பொருள்களில் வருமென அறிக.

> " ஒழியிசை வினுச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
> கழிவசை நிலைபிரிப் பெனஎட்டு ஓவே "

(நன். சூ. 423)

3. உம்மை இடைச்சொல்

(1) 'நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'—இத்தொடருள் 'நான் மறக்கினும்' என்பதில் உள்ள 'உம்மை', (மறப்பது அருமை) மறக்க முடியாது என்னும் எதிர்மறைப் பொருளைத் தருதலால் இஃது *எதிர்மறை உம்மை.*

(2) 'இது செல்வரும் வாங்கமுடியாத சேலை' —இத்தொடருள் வந்துள்ள உம்மை சேலையின் *உயர்வைச் சிறப்பித்தலால்* இஃது *உயர்வு சிறப்பும்மை.*

'நாயும் தின்னுத சோறு'—இத்தொடரில் வந்துள்ள உம்மை, சோற்றின் இழிவைச் *சிறப்பித்தலால்* (மிகைப்படுத்திக் கூறுதலால்,) இஃது *இழிவு சிறப்பும்மை.*

இதனால், சிறப்பும்மை, உயர்வு சிறப்பு என்றும், இழிவு சிறப்பு என்றும் இருவகைப்படும் என அறிக.

(3) 'கலகம் அடங்கினாலும் அடங்கும்'—இத் தொடருள் வந்துள்ள உம்மை, 'கலகம் அடங் குமோ அடங்காதோ' என்ற ஐயத்தை உணர்த்து தலால், இஃது ஐய உம்மை.

(4) 'தலைவரும் வந்துவிட்டார்'—இத்தொட ருள் வந்துள்ள உம்மை, 'மன்றத்து உறுப்பினர் எல்லாம் வந்துவிட்டமையேயன்றித் தலைவரும் வந்துவிட்டார்' என்று முன்வந்தோரை உணர்த் தின், அஃது இறந்தது தழுவிய எச்சமாம். அவ்வா றன்றி, 'இனி மன்றத்து உறுப்பினரும் வருவர்' என்று இனி வரவேண்டியவரை உணர்த்தின், அஃது எதிரது தழுவிய எச்சமாம்.

இதனால் எச்சவும்மையும் இறந்தது தழுவிய தும், எதிரது தழுவியதும் என இருவகைப்படும் என அறிக.

(5) 'முடியுடை வேந்தர் மூவரும் வந்தனர்'— இத்தொடருள் மூவரும் என்பதில் உள்ள உம்மை முற்றுப் பொருளை உணர்த்துதலால் இது முற்றும்மையாகும்.

(6) 'ஆசிரியரும் மாணவரும் வந்தனர்'— இத்தொடரில் வந்துள்ள உம்மை எண்ணுப் பொருளை உணர்த்துதலால், இஃது எண்ணும்மை யாகும்.

(7) 'இச்செய்கையைச் செய்தது நானும் அல்லன்; நீயும் அல்லை'—இத்தொடரில் வந்துள்ள உம்மை, 'நான், நீ அல்லாத வேறொருவன் செய்

திருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்து நிற்றலால், இது தெரிநிலை உம்மை யாகும்.

(8) 'ஆட்டுப்பால் மருந்தும் ஆயிற்று'—இத் தொடரில் வந்துள்ள உம்மை, 'பால் உணவாக ஆனதேயன்றி மருந்தும் ஆயிற்று' என ஆக்கப் பொருளை உணர்த்துதலால், இஃது ஆக்க வும்மையாகும்.

எனவே, உம்மை இடைச்சொல், எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்களில் வரும் என அறிக.

"எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை எட்டே" (நன். சூ. 425)

4. கொல் என்னும் இடைச்சொல்

(1) "வருவார் கொல்லோ தோழி"—இத் தொடரில் கொல் என்னும் இடைச்சொல், "அவர் வருவாரோ வரமாட்டாரோ" என்ற ஐயப்பொரு ளில் வந்துள்ளது.

(2) "கற்றதனால் ஆய பயனென் கொல்"— இத்தொடரில் கொல் என்பது யாதொரு பொருளை யும் தராது அசைநிலையாக வந்துள்ளது.

எனவே, 'கொல்' என்னும் இடைச்சொல் ஐயம், அசைநிலை என்னும் இரு பொருள்களில் வரும் என அறிக.

"கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே" (நன். சூ. 435)

19. உரிச்சொல் இலக்கணம்

அவன் **சாலப்** பேசினுன்	(சால - மிகுதி)
நனி பேதை	(நனி - மிகுதி)
கடி மணம்	(கடி - புதுமை)
கடி மிளகு	(கடி - கரிப்பு)

மேலே தடித்த எழுத்துக்களில் காட்டப்பட்ட சொற்களைக் கவனியுங்கள். அவை பெயர், வினைகளின் **பண்பை** விளக்கி நின்றன. இவையும், இடைச்சொற்களைப்போலத் தனித்து வாரா. இச் சொற்கள் பெயர் வினைகளின் பண்பை உணர்த்துவதுடன், அவற்றுக்கு உரிமை பூண்ட சொற்களாக உள்ளன. ஆகவே, இவற்றிற்கு **உரிச் சொற்கள்** என்பது பெயர்.

உரிச்சொல் என்பது, (1) தனித்து வராது; (2) பெயர்வினைகளைவிட்டு நீங்காது; (3) பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிற்கு உரிமை பூண்டு நிற்கும் என அறிந்துகொள்க.

இவ்வுரிச்சொற்களில், ஒரு குணம் குறித்த **பல உரிச்சொல்** என்றும், **பல குணம் குறித்த ஓர் உரிச்சொல்** என்றும் இரு பிரிவுகள் உண்டு. அவற்றுள் சில உரிச்சொற்களைப்பற்றி ஈண்டுக் காண்போம்.

20. ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

1.	அவன் **சாலச்** சிரித்தான்	(மிகுதி)
2.	**உறு**துயர் நீங்க	,,
3.	**தவச்** சிறியராயினும்	,,
4.	**நனி** பேதையே நயனில் கூற்றம்	,,

5. மகிழ்கூர் முகம் (மிகுதி)
6. கழிபெருங் கண்ணோட்டம் ,,

மேற்காட்டிய உதாரணங்களிலுள்ள சால, உறு தவ, நனி, கூர், கழி என்னும் ஆறும் உரிச் சொற்களாம். அவை யாவும் 'மிகுதி' என்னும் ஒரே குணத்தைத் தந்தன. இவற்றை ஒரு குணம் குறித்த பல உரிச்சொல் என்பர்.

'' சால உறுதவ நனிகூர் கழிமிகல் (நன். சூ. 456)

21. பல குணம் தழுவிய உரிச்சொல்

1. கடிமனை —காப்பு (காவல்)
2. கடிமுனை வாள் —கூர்மை
3. கடிமலர் —விரை (மணம்)
4. கடிமார்பன் —விளக்கம்
5. கடிப் பேய் —அச்சம்
6. கடிநகர் —சிறப்பு
7. கடிவிடுதும் —விரைவு
8. கடியுண் கடவுள் —மிகுதி
9. கடிமணச்சாலை —புதுமை
10. கடிமுரசு —ஆர்த்தல்(ஒலித்தல்)
11. கடிமது உண்ணும்—வரைவு (நீக்கம்)
12. கடிவினை —மன்றல் (திருமணம்)
13. கடிமிளகு —கரிப்பு (காரம்)

மேற்காட்டிய உதாரணங்களிலிருந்து கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, விரை, விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு என்னும் பதின்மூன்று குணங்களை உணர்த்தி

நின்றமை காண்க. இதனைப் பல குணம் குறித்த ஓர் உரிச்சொல் என்பர்.

" கடிஎன் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும் " (நன். சூ. 457)

பயிற்சி

1. இடைச்சொல், உரிச்சொல்—இலக்கணம் எழுதுக.

2. பின்வருவனவற்றிலுள்ள இடைச்சொற்களைக் குறிப்பிட்டு, அவை காட்டும் பொருள்களையும் எழுதுக.

(1) தருமனே, வீமனே, விசயனே, நகுலனே, சகாதேவனே எனப் பாண்டவர்கள் ஐவர்.

(2) கடவுளைத் தொழவே வந்தாய்!

(3) இவ்வளவிற் செல்லுங்கொல்! இவ்வளவிற் காணுங்கொல்!

(4) இச்சோற்றினை நாயும் உண்ணுது.

3. ஏகார ஓகார இடைச்சொற்கள் எவ்வெப்பொருள்களில் வரும்?

4. புலி கொல் யானை, என்னை கொல் அவர் எண்ணியது—இவற்றில் 'கொல்' என்பது ஈரிடங்களில் வந்துள்ளது. அவ்விரண்டிடங்கட்குமுள்ள வேறுபாடு யாது?

5. (1) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

(2) நற்றவ வானினும் நனிசிறந் தனவே

(3) கடிமிளகு தின்ற கல்லா மந்தி

மேலே உள்ளவற்றுள் அமைந்த உரிச்சொற்கள் யாவை? அவை உரிச்சொற்கள் என்று கூறப்படுவதன் காரணம் யாது?

III. பொது

1. வழக்கு

நாம், முன்னோரைப் பின்பற்றிச் சொற்களை இருவகையாக வழங்குகின்றோம். (1) ஒரு பொருளை, அதனை உணர்த்துதற்கு இயல்பாய் அமைந்த சொல்லால் கூறுவது ஒருவகை. (2) ஒரு பொருளை உணர்த்துதற்கு இயல்பாய் அமைந்த சொல்லை, ஏதேனும் ஒரு காரணம்பற்றி நீக்கிவிட்டு, வேறொரு தகுதி வாய்ந்த சொல்லால் அப் பொருளைக் கூறுவது இரண்டாம் வகையாகும்.

இவற்றுள், (1) முன்னது இயல்பு வழக்கு என்றும், (2) பின்னது **தகுதி வழக்கு** என்றும் பெயர் பெறும். இவை இரண்டும் **வழக்கு** என்பதனுள் அடங்கும். (வழக்கு - சொல்நடை.)

2. இயல்பு வழக்கு, தகுதி வழக்கு

1. இயல்பு வழக்கு

1. மலையில் மரங்கள் வளர்கின்றன.
   வானம் மக்கட்கு வழங்கி வருகிறது.
   கல்லும் சிற்றுளியால் தகரும்.

நாம், மேற்கண்ட எடுத்துக்காட்டுகளைக் கவனித்தால், இவை இலக்கணமுடைய சொற்களாகவும், சொற்றொடர்களாகவும் இருப்பதை அறிவோம். இலக்கண நெறிபற்றி வழங்கி வரும் சொல்லை **இலக்கணம் உடையது** என்று முன்னோர் வழங்கினர்.

2. இலக்கணப் போலி	இலக்கண முடையது
முன்றில்	இல்முன்
வாயில்	இல்வாய்
புறநகர்	நகர்ப்புறம்
மீகண்	கண்மீ
சதை	தசை
கோயில்	கோவில்
ஞிமிறு	மிஞிறு

மேற்கண்ட சொற்களைக் கவனிக்க. முன்றில், வாயில், புறநகர், மீகண், சதை, கோயில், ஞிமிறு என்ற சொற்களில் சொல்லும், எழுத்தும் முன் பின்னாக மாறுபட்டு வந்துள்ளன. இவை இலக்கணம் இல்லாத சொற்களாகும். ஆனால் அறிவுடையோர் இவற்றைத் தொன்றுதொட்டு நூல்களில் வழங்கி வந்துள்ளனர். இவை இலக்கணமில்லாதவையாயினும், இலக்கணமுடையவைபோல் தோன்றுகின்றன. ஆதலால், இவைபோன்ற சொற்களை ஆன்றோர் இலக்கணப் போலி என்பர். இலக்கணப் போலியாக உள்ள சொற்களின் எதிரில் இலக்கணமுடைய சொற்கள் கொடுக்கப் பட்டிருப்பதைக்கொண்டு, இவற்றின் வேறுபாடுகளை உணர்க.

3. இலக்கண வழக்கு	மரூஉ வழக்கு
தஞ்சாவூர்	தஞ்சை
யானை	ஆனை
பெயர்	பேர்
கோயம்புத்தூர்	கோவை
உறையூர்	உறந்தை

இலக்கண வழக்கு	மரூஉ வழக்கு
வாயில்	வாசல்
அருமருந்தன்ன	அருமந்த

இங்கு, முதல் வரிசையில் உள்ள சொற்கள் இலக்கண முறைப்படி இருப்பவை. இரண்டாம் வரிசையில் உள்ள சொற்கள் இலக்கணத்தினின்றும் சிதைந்து உருமாறி, வேறு உருவங்களை மருவி (பொருந்தி) நிற்பவை. இவ்வாறு சொற்கள் **தம் இலக்கணத்தினின்றும் திரிந்து வேறு உருவங்களை மருவி நிற்பின் அவை மரூஉச் சொற்கள்** எனப்படும். இவ்வாறு மருவுவதனையே **மரூஉ வழக்கு** என்பர்.

இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ ஆகிய மூவகையும், எப்பொருட்கு எச்சொல் இயல்பில் அமைந்ததோ, அச்சொல்லாலேயே அப்பொருளைக் கூறுகின்றன. ஆதலால் இவை மூன்றும் **இயல்பு வழக்கு** என்று கூறப்படும்.

2. தகுதி வழக்கு

(1) **கால் கழுவி** வந்தேன்.

(2) அவள் தாலி பெருகிற்று.

(3) **கறுப்பும் வெள்ளையும்** கலந்து போடு.

என்ற எடுத்துக்காட்டுகளை நோக்குங்கள்.

(1) இவற்றுள், **கால் கழுவி** வந்தேன் என்பதில், 'கால் கழுவி' என்பது, 'மலங் கழுவி' என்பதைக் குறிக்கின்றது. ஏன் இவ்வாறு சொல்ல வேண்டும்? சில இயல்பான செயல்களையும், நல்லோர் அவையில் சொல்லுதல் கூடாது. ஆனால், அவற்றை அவர்க்கு அறிவித்தல் இன்றியமையாத

தாக இருக்கலாம். அந்நிலையில் அத்தகைய செயல்களை அப்படியே கூருமல் வேறு வகையாகக் கூற வேண்டும். அவ்வாறு கூறுவதை அறிஞர் **இடக்கர் அடக்கல்** என்பர். இடக்கர் என்பது சொல்லத்தகாதது. அடக்கல் என்பது மறைத்துக் கூறுதல். கொல்லைக்குப் போனுன், வெளிக்குப் போய் வந்தான், வாய்பூசி வந்தான் என்பனவும் இவ்வாறு மறைத்துக் கூறப்பட்டனவே. இடக்கரான சொற்களை இவ்வாறு மறைத்துக் கூறுவதே தகுதியாகும். இதனை **அவையல் கிளவி** என்றும், **மறைத்துமொழி கிளவி** என்றும் கூறுவர்.

(2) இரண்டாவது எடுத்துக்காட்டிலுள்ள "*தாலி பெருகிற்று*" என்பதற்குத் தாலி அறுந்தது என்பதே பொருள். ஆயினும் அவ்வாறு கூறுவது மங்கலமன்மையால், அதனை ஒழித்துத் தாலி பெருகிற்று என மங்கலமாகக் கூறப்பட்டது. இவ்வாறு மங்கலமல்லாத சொற்களை ஒழித்து மங்கலமாகக் கூறும் வழக்கினை நாம் பழந்தமிழ் நூல்களுள் பலவிடங்களிற் காணலாம். இவ்வாறு கூறுவது **மங்கலம்** என்று கூறப்படும். கீழே காட்டப்படும் வழக்குகளிலிருந்தும் சில மங்கலமல்லாத சொற்களை மங்கலமாகக் கூறும் முறையினைக் காண்க.

'செத்தார்' என்பதைத் **துஞ்சினுர்** என்றும், 'சுடுகாடு' என்பதனை **நன்காடு** என்றும், நஞ்சுடைய பாம்பை **நல்ல பாம்பு** என்றும், பொய்யாகிய உடலை **மெய்** என்றும் கூறுவதனை அறிக.

(3) 'கறுப்பும் வெள்ளையும்' என்ற மூன்றும் வகை எடுத்துக்காட்டு, 'சாராயமும் கள்ளும்'

என்று பொருள்படும். இது கட்குடியர்களிடத்தே மட்டும் காணப்படும் ஒரு வகை வழக்கு. இஃது அவர்களுக்குள் வழங்கப்படும் குறிப்பு மொழி. அஃதாவது தங்களையன்றிப் பிறர் யாரும் அறியாத வாறு பேசும் ஒரு வகை அடையாள மொழியாம். இவ்வாறு ஒரு குழுவினர் (கூட்டத்தார்), ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொற்களை ஒழித்து, பிறர் அறியாதபடி, தமக்குள்மட்டும் பொருள் விளங்குமாறு பேசும் சொற்களுக்குக் *குழூஉக்குறி* என்பது பெயர்.

இக்காலத்தில் இவ்வழக்கினை வணிகர்களிடத்தில் மிகுதியாகக் காணலாம்.

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகிய மூவகையும், ஒரு பொருளை அதற்கமைந்த சொல்லால் கூறுவது தகுதியன்று என்று விலக்கி, தகுதி வாய்ந்த வேறு சொற்களால் கூறப்படுவன வாதலின், இவை *தகுதி வழக்கு* என்று அழைக்கப்பட்டன.

"இலக்கண முடையது இலக்கணப் போலி
மரூஉஎன் றாகும் மூவகை இயல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோடு ஆறும் வழக்கியல்." (நன். சூ. 267)

பயிற்சி

1. இயல்பு வழக்கிற்கும், தகுதி வழக்கிற்கும் உள்ள வேறுபாடு யாது?

2. 'கோவில்'—இஃது இலக்கணம் உடையதாகும்; எவ்வாறு? காரணம் காட்டுக.

3. கீழ்வருவன எவ்வெவ்வாறு மருவி வரும் என வரைக:—யாறு, பொழுது, வடக்குள்ளது, ஆற்றூர், யாமை, உவகை.

4. இடக்கரடக்கல், குழூஉக்குறி — இவற்றிற்குப் பொருள் எழுதி, ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டும் தருக.

3. தொகைநிலைத் தொடர்

(1) வேற்றுமைத் தொகை

பால் குடித்தான்—இது பாலைக் குடித்தான் என விரியும். இதில் ஐ என்னும் வேற்றுமை உருபு, தொக்கு (மறைந்து) நிற்கின்றது. இவ்வாறு வேற்றுமை உருபுகள் இடையில் தொக்கு (மறைந்து) நிற்க, சொற்கள் தம்முள் தொடர்ந்து நின்றால், அவை **வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்** எனப்படும். இவ்வேற்றுமைத் தொகை ஆறு வகைப்படும்.

(1) நூல் கற்றான்—நூலைக் கற்றான்; (ஐ-இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.)

(2) கல் எறிந்தான்—கல்லால் எறிந்தான்; (ஆல்-மூன்றாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.)

(3) வீடு சென்றான்—வீட்டிற்குச் சென்றான்; (கு-நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.)

(4) மலைவீழ் அருவி—மலையினின்றும் வீழும் அருவி; (இன்-ஐந்தாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்.)

(5) முருகன் வேல்—முருகனது வேல்; (அது-ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.)

(6) வழி நடந்தான்—வழியின்**கண்** நடந்தான்; (**கண்** ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.)

மேலே காட்டப்பட்ட 'நூல் கற்றான்' முதலிய ஆறு தொடர்களும், முறையே ஐ முதலிய

வேற்றுமை உருபுகள் தொக்கு நிற்கப் புணர்ந்து நின்றமையால், இவையாறும் வேற்றுமைத்தொகை நிலைத் தொடர்களாம். இவ்வாறன்றி 'நூலைக் கற்றான்' முதலியன போன்று வேற்றுமையுருபு தொகாது, விரிந்து நிற்கத் தொடருமாயின், அவை வேற்றுமைத் தொகாநிலைத் தொடராகும்.

(2) வினைத்தொகை

ஆடு பாம்பு—இது ஆடின பாம்பு, ஆடுகின்ற பாம்பு, ஆடும் பாம்பு என விரியும். இதனுள் வினைப் பொருளை உணர்த்தும் இடைநிலையும், விகுதியுமாகிய வினை உறுப்புக்கள் தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து நின்றமையால், இது **வினைத் தொகை நிலைத் தொடர்** எனப்படும்.

(3) பண்புத் தொகை

கருங்குதிரை—இது கருமையாகிய குதிரை என விரியும். இதனுள் கருமை என்னும் பண்புப் பெயரின் இறுதியில் உள்ள *மை* என்னும் பண்பு விகுதியும், *ஆகிய* என்னும் பண்பு உருபும் தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து நின்றமை யால் இது **பண்புத் தொகைநிலைத் தொடர்** எனப்படும்.

(4) உவமைத் தொகை

மதிமுகம்—இது மதிபோன்ற முகம் என விரியும். இதனுள் *போன்ற* என்னும் உவம உருபு தொக்கு நிற்க, '*மதி*' '*முகம்*' என்னும் இரு சொற்களும் தொடர்ந்து நின்றமையால் இது **உவமைத் தொகைநிலைத் தொடர்** எனப்படும்.

(5) உம்மைத் தொகை

கபிலபரணர்—இது கபிலரும் பரணரும் என விரியும். இதனுள் '**உம்**' என்னும் எண்ணிடைச் சொல் இடையே தொக்கு நிற்க, இரு சொற்களும் தொடர்ந்து நின்றமையால், இஃது **உம்மைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

(6) அன்மொழித் தொகை

பொற்றொடி வந்தாள்—இது பொன்னாலாகிய தொடியினை (வளையலை) அணிந்தவள் வந்தாள் என விரியும். இதனுள் 'பொற்றொடி' என்பது 'பொன்னாலாகிய தொடி' என்றுமட்டும் விரிந்தால், அது வேற்றுமைத் தொகையாகும். ஆனால் இங்கு அது, 'பொன்னாலாகிய தொடியினை *அணிந்தவள்*' என்று விரிந்து பொருள் படுகின்றது. பொற்றொடி என்னும் இத்தொகையில் அமைந்துள்ளவை *பொன், தொடி* என்னும் இரு சொற்களாகும். ஆனால் அது தரும் பொருள் *பெண்* என்பதாகும். இப்பெண் என்னும் பொருள் பொன், தொடி என்னும் இரு சொற்களிலும் தொக்கு (அடங்கி) நிற்கவில்லை. இவ்விரண்டும் அல்லாத *அணிந்தவள்* என்னும் மற்றொருமொழியில் தொக்கு நிற்கின்றது. இவ்வாறு ஒருவனால் சொல்லப்பட்ட சொல் அல்லாத வேறு மொழியில், அவன் கருதிய பொருள் தொக்கு நிற்கப் பெறின், அஃது **அன்மொழித் தொகை** எனப்படும்.

'பொற்றொடி' என்பது 'பொன்னாலாகிய தொடி' என்று விரியும்போது, வேற்றுமைத் தொகையாகின்றது. அதுவே, 'பொன்னாலாகிய

தொடியினை அணிந்தவள்' என்று விரியும் போது அன்மொழித் தொகையாகின்றது. இவ்வாறு **'பொற்றொடி' என்னும் வேற்றுமைத் தொகையிலிருந்து அன்மொழித் தொகை பிறந்தமையால், இது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை** எனப்படும்.

இவ்வாறே இவ்வன்மொழித் தொகையானது, வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை என்னும் ஐந்து தொகைகளின் அடியாகவும் பிறக்குமென அறிக. அதனால், வேற்றுமைத் தொகை முதல் அன்மொழித் தொகை ஈருகத் தொகைநிலைத் தொடர் ஆருதல் காண்க.

''வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை
அன்மொழி யெனஅத் தொகையா றுகும்''

(நன். சூ. 362)

4. தொகாநிலைத் தொடர்

முருகன் வந்தான்—இத்தொடரில் உள்ள இரு சொற்களும், தமக்கிடையே ஒன்றும் தொகுதலின்றித் தொடர்ந்து நின்றமையால், இது **தொகா நிலைத் தொடர்** எனப்படும். இத்தொடரில் முதலில் நிற்கும் **முருகன்** என்னும் சொல் எழுவாய். இதனுல் இத்தொடர் எழுவாய்த் தொடர் எனப்படும். இவ்வாறே தொகாநிலைத் தொடர்களுக்கு, அவற்றின் முதலில் நிற்கும் சொல்லைக்கொண்டே அவற்றின் பெயர்கள் அமைவனவாகும்.

(1) **வந்தான்** முருகன்—**வினைமுற்றுத்தொடர்.**
(2) **வந்த** முருகன்—**பெயரெச்சத் தொடர்.**

(3) வந்து போனுன்—வினையெச்சத் தொடர்.

(4) முருகன் வந்தான்—எழுவாய்த் தொடர்.

(5) முருகா வா—விளித்தொடர்.

(6) முருகனைக் கண்டேன் முருகனுல் அறிந்தேன் முருகனுக்குக் கொடுத்தேன் முருகனினின்று வந்தது முருகனது வேல் முருகன்பால் உள்ளது	வேற்றுமைத் தொடர் அல்லது வேற்றுமை விரி

(7) மற்றென்று—இடைச்சொல் தொடர்.

(8) நனி தின்ருன்—உரிச்சொல் தொடர்.

(9) பாம்பு பாம்பு—அடுக்குத் தொடர்.

மேலே காட்டப்பட்ட ஒன்பதும் தொகாநிலைத் தொடர்கள். இவற்றுள் முதலில் நிற்கும் சொல்லைக் கொண்டே அத்தொடர்களின் பெயர் அமைந்திருத்தல் காண்க.

''முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுருபு இடையுரி அடுக்கிவை தொகாநிலை''

(நன். சூ. 374)

பயிற்சி

1. தொடர் என்பது யாது?

2. அன்மொழித் தொகை—பொருள் என்ன?

3. தொகை நிலைக்கும் தொகாநிலைக்கும் உள்ள வேற்றுமை யாது?

4. கீழ்க்கண்ட தொகைநிலைத் தொடர்களுள் தொக்கு நின்ற சொற்கள் யாவை என எழுதுக:—

புலிப் பாய்ச்சல், பவளவாய், ஆடுபாம்பு, கருமேகம், சேரசோழர், பொற்றெடி, தாழ்குழல் வந்தாள்.

5. கீழ்க்கண்டவை என்னென்ன தொடர்கள் என்பதைக் குறிப்பிடுக :—

முருகன் வந்தான்.	வந்து போ.
வந்தான் முருகன்.	நல்ல பையன்.
கண்ணனைக் கூப்பிடு.	தீத்தீ
கண்ணு வா.	

IV. புணர்ச்சி

1. புணர்ச்சி இன்னதென்பது

கண்ணன் உண்டான்—இச்சொற்றொடரைக் கவனிக்க. இத்தொடரில் இரண்டு சொற்கள் இருக்கின்றன. இவை ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வந்துள்ளன. இவற்றுள் முதலில் நிற்கும் ***கண்ணன்*** என்னும் சொல் நிலைத்து நிற்கிறது. அதனோடு ***உண்டான்*** என்னும் சொல் வந்து சேர்கின்றது. இதனால், (முதலில்) நிற்குஞ் சொல் *நிலைமொழி* என்றும், அதனோடு சேர **வரும்சொல்** *வருமொழி* என்றும் வழங்கப்படுகின்றன.

கண்ணன்	***உண்டான்***
↓	↓
நிலைமொழி	வருமொழி

புணர்ச்சியைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டுமாயின், முதலில் நிலைமொழி வருமொழிகளைப்பற்றித் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஆதலால் இவற்றை நாம் நன்கு ஆராய்ந்து தெரிந்துகொள்வோமாக.

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றுபடப் புணர்வதே புணர்ச்சியாகும். இப்புணர்ச்சி வேற்றுமைப்

புணர்ச்சி என்றும், அல்வழிப் புணர்ச்சி யென்றும் இருவகைப்படும். அவற்றின் விரிவை அடுத்த வகுப்பில் அறிவீர்கள்.

2. இயல்பு புணர்ச்சி - விகாரப்புணர்ச்சி

புணர்ச்சி

இயல்பு புணர்ச்சி விகாரப் புணர்ச்சி

தோன்றல் திரிதல் கெடுதல்

இயல்பு புணர்ச்சி :

மரம்+வெட்டு=மரம் வெட்டு. இப்புணர்ச்சியில் நிலைமொழியாகிய 'மரம்' என்னும் சொல்லும் வருமொழியாகிய 'வெட்டு' என்னும் சொல்லும் சேரும்பொழுது, அவை இயல்பாகவே சேர்கின்றன. அச்சேர்க்கையால் யாதொரு வேறுபாடும் உண்டாகவில்லை. ஆகையால் இத்தகைய புணர்ச்சியை ***இயல்பு புணர்ச்சி*** என்பர்.

விகாரப் புணர்ச்சி :

1. வாழை+பழம்=வாழைப் பழம்—**தோன்றல் விகாரம்.** இதில் '*ப்*' என்னும் மெய்யெழுத்துத் தோன்றிற்று.

3. பல்+பொடி=பற்பொடி—***திரிதல் விகாரம்.*** இதில் நிலைமொழி ஈற்றிலுள்ள 'ல்'—'ற்' ஆகத் திரிந்தது.

8. மரம்+வேர்=மரவேர்—கெடுதல்விகாரம். இதில் நிலைமொழி ஈற்றிலுள்ள '*ம்*' கெட்டது.

இவ்வுதாரணங்களால், விகாரப்புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும் என்பது விளங்கும்.

3. மெய்யீற்றின் முன் உயிர்

மெய்யீற்றின் முன் உயிர் - பொது:

கந்தன் + ஓடினான் = கந்தனோடினான்.
புயல் + எழுந்தது = புயலெழுந்தது.
மான் + ஓடிற்று = மானோடிற்று.
வாள் + அரிந்தது = வாளரிந்தது.

மேற்காட்டப்பட்ட உதாரணங்களைக் கவனிக்க. இவற்றுள் 'கந்தன்' முதலிய நிலைமொழிகளின் ஈற்றில் உள்ள ('ன்' முதலிய) மெய்களின் மேல், 'ஓடினான்' முதலிய வருமொழிகளின் முதலில் உள்ள ('ஓ' முதலிய) உயிரெழுத்துக்கள் ஏறிப் புணர்ந்துள்ளமை காண்க. இதனால் **மெய்யீற்றின்முன் உயிர் வந்தால், அவ்வுயிர் அம்மெய்யின்மேல் ஏறிப் புணர்ந்து நிற்கும்** என அறியலாம்.

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"
(நன். சூ. 204)

மெய்யீற்றின் முன் உயிர்—சிறப்பு:

மண் + உதிர்ந்தது = மண்ணுதிர்ந்தது.
பொன் + அரிது = பொன்னரிது.
கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.
முள் + உடைந்தது = முள்ளுடைந்தது.
பொய் + ஒழிந்தது = பொய்யொழிந்தது.
தெவ் + அகன்றது = தெவ்வகன்றது.

மேலே காட்டப்பட்ட உதாரணங்களைக் கவனிக்க. இவற்றுள் மண், பொன், கல், முள், பொய், தெவ் என்னுஞ் சொற்கள் நிலைமொழிகளாக நிற்கின்றன. இச்சொற்களின் முதலில் உள்ள எழுத்துக்கள் ம, பொ, க, மு, பொ, தெ என்னும் தனிக் குற்றெழுத்துக்கள். இவ்வாறு தனிக் குற்றெழுத்தை அடுத்து வரும் ஒற்றின்முன் உயிர் வந்தால் அவ்வொற்று, (மண் + இடிந்தது = மண் + ண் + இடிந்தது, என்பது போன்று) இரட்டிக்கும். அவ்வாறு இரட்டித்த மெய்யின்மேல் வருமொழி முதலில் உள்ள உயிர் ஏறி (மண் + இடிந்தது = மண்ணிடிந்தது, என்பது போன்று) முடியும்.

இதனால் **கல், முள் போன்ற தனிக் குறில் முன் ஒற்றுக்கள், உயிர் வருங்கால் இரட்டிக்கும் என்பதும், அவ்வாறு இரட்டித்த ஒற்றின் மீது வந்த உயிர் ஏறி முடியும் என்பதும்** பெற்றாம்.

" தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் "

(நன். சூ. 205)

4. உடம்படுமெய்

1. கிளி + அழகு = கிளி(ய்)அழகு = கிளியழகு
   தீ + எரியும் = தீ(ய்)எரியும் = தீயெரியும்
   பனை + ஓலை = பனை(ய்)ஓலை = பனையோலை

இவைகளில் நிலைமொழியின் ஈற்றில் இ-ஈ-ஐ என்னும் உயிர் எழுத்துக்கள் இருக்கின்றன. வருமொழி முதலிலும் உயிர் எழுத்துக்கள் உள்ளன. இவையிரண்டும் புணரும்போது, இவற்றை உடம்படுத்த இடையில் 'ய்' என்னும் மெய் தோன்றுகின்றது. இது **யகர உடம்படுமெய் எனப்படும்**

2. பல + ஆடுகள் = பல(வ்)ஆடுகள்
= பலவாடுகள்

பலா + இலை = பலா(வ்)இலை = பலாவிலை

என்று இவ்வாறு, முன் சொன்ன இ-ஈ-ஐ ஒழிந்த ஏனைய உயிர்களின் முன், வருமொழி முதலில் உயிர் வந்தால் இடையில் 'வ்' என்னும் உடம்படு மெய் தோன்றும். இது **வகர வுடம்படு மெய் எனப்படும்.**

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்
சே + அடி = சே + ய் + அடி = சேயடி
சே + அடி = சே + வ் + அடி = சேவடி

'ஏ' என்னும் உயிர் ஈற்றின்முன், வருமொழி முதலில் உயிர் வந்தால், சில இடங்களில் வகர உடம்படுமெய்யும், சில இடங்களில் யகர உடம்படு மெய்யும் தோன்றும் என்பது, மேலே கொடுக்கப் பட்ட எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

இதனுல், இ, ஈ, ஐ, என்னும் மூன்று உயி ரெழுத்துக்களுக்குப் பின் ய கரமும், அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ என்னும் ஏனை உயிர் எழுத்துக் களுக்குப் பின் வ கரமும், 'ஏ' என்னும் உயிர் எழுத்துக்குப்பின் யகர வகரங்களாகிய இரண்டும், வருமொழி முதலில் உயிர் வந்தால் உடம்படு மெய் யாக வரும் என்பது பெற்றும்.

இவ்வாறு *நிலைமொழியின் ஈற்றிலும், வருமொழியின் முதலிலும் உள்ள (உடம்படாத) உயிர்களை உடம்படுத்துதற்கு, அவற்றின் இடையில் வரும் மெய் "உடம்படு மெய்"* எனப்படும்.

"இ ஈ ஐவழி யவ்வும், ஏனை
உயிர்வழி, வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்." (நன். சூ. 162)

5. உயிர்முன் வல்லினம்

உயிர் ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் மிகுதல்:—

(இயல்பீறு)

ஆட +சொன்னான் = ஆடச்சொன்னான்
வர +செய்தான் = வரச்செய்தான்

—செயவெனெச்சத்தின் முன் வலி மிக்கது.

பலா +காய் =பலாக்காய்
களா +காய் =களாக்காய்
ஈ +கால் =ஈக்கால்
வாழை +காய் =வாழைக்காய்
வாழை +பழம் =வாழைப்பழம்

—ஆறும் வேற்றுமைத் தொகையில் மிக்கது.

ஆணி +பொன் =ஆணிப்பொன்

—இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் மிக்கது.

பாடி +காட்டு =பாடிக்காட்டு

—செய்தெனெச்சத்தின் முன் மிக்கது.

தீ +கடைகோல் = தீக்கடைகோல்

—இரண்டாம் வேற்றுமைத் தொகை முன் மிக்கது.

மேலே காட்டப்பட்டுள்ள தொடர்களில், நிலைமொழியின் ஈற்றில் (இயல்பாக) உள்ளவை உயிரெழுத்துக்கள். அவை வல்லின முதன் மொழிகளுடன் புணரும்பொழுது, அவ்வல்லினம் மிகுந்தது.

ஒரு சொல்லின் இறுதியில் இயல்பாக இருக்கும் எழுத்து **இயல்பீறு.**

அவ்வாறின்றி வேறோர் எழுத்தை இறுதியாகக் கொண்டிருப்பின் அது **விதியீறு.**

உ-ம்: மரம்—இதில் மகரம் இயல்பாக இருப்பது; ஆகவே இஃது இயல்பீறு.

மர—இதில் அகரம் வேறோர் எழுத்து. ஆகவே இது விதியீறு.

மரம் + கிளை = மர + கிளை = மரக்கிளை
பழம் + சுவை = பழ + சுவை—பழச்சுவை

மரம், பழம் என்பனவற்றில் 'மகரம்' இயல்பீறு. இவை புணர்ச்சியில் மகரம் கெட 'மர', 'பழ' என அகர ஈருக நின்றன. இவ்வகரம் விதியீறு எனப்படும். இவ்விதியீருக வந்த உயிர் முன்னும் வல்லினம் மிகுதலை மேற்காட்டிய உதாரணங்களால் அறிக.

உண்ட + பையன் = உண்டபையன்—
(பெயரெச்சத்தொடர்)
உண்ணிய + சென்ருன் = உண்ணிய சென்ருன்
(செய்யிய என்னும் வினையெச்சத் தொடர்)
ஓடின + குதிரைகள் = ஓடின குதிரைகள்
படர்ந்தன + கொடிகள் = படர்ந்தன கொடிகள்
வினைமுற்றுத் தொடர்
ஆ + பெரியது = ஆ பெரியது
யானை + கரியது = யானைகரியது
எழுவாய்த்தொடர்.
எனது + கை = எனதுகை
(ஆரும் வேற்றுமைத் தொடர்)
அவனொடு + செல் = அவனொடு செல்
(மூன்ரும் வேற்றுமைத் தொடர்)

அவனு + கொண்டான் = அவனு கொண்டான்
(இடைச்சொற்றொடர்)

மேலே காட்டிய உதாரணங்களிலிருந்து, பெயரெச்சத் தொடர் முதலிய சில உயிரீற்றின்முன் வரும் வல்லினம் மிகாமையும் உண்டு என்பதை அறியலாம்.

இதனால், *நிலைமொழிகளின் இறுதியில் இயல்பாகவேனும், விதியாகவேனும் நிற்கும் உயிர்களின் முன்வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என்பதும், சிறுபான்மை மிகா என்பதும் அறியலாம்.*

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே" (ந. சூ. 165)

6. குற்றியலுகரப் புணர்ச்சி—குற்றியலிகரப் புணர்ச்சி

(1) குற்றியலுகரப் புணர்ச்சி:

குற்றியலுகரத்தின் முன் உயிர்

ஆடு + ஓட்டினன் = ஆடோட்டினன்
பட்டு + ஆடை = பட்டாடை
பஞ்சு + எடு = பஞ்செடு

மேற்கண்டவற்றுள் நிலைமொழிகள் குற்றியலுகர மொழிகள். வருமொழிகளின் முதலில் உயிரெழுத்துக்கள் உள்ளன. இங்குப் புணர்தற்கு உரியவை குற்றுகர ஈறும், வருமொழி முதலில் உள்ள உயிருமாகும். இவை புணர்ந்துள்ள விதத்தைக் கவனிப்போம்.

ஆடு + ஓட்டினன் = ஆட் + உ + ஓட்டினன்
= ஆட் + ஓட்டினன்
= ஆ(ட் + ஓ)ட்டினன்
= ஆடோட்டினன்

இதனால், வருமொழி முதலில் உயிர் வந்தால், குற்றுகர மொழியில் உள்ள குற்றுகரம், தான் ஏறி நின்ற மெய்யை விட்டு நீங்கும். பின் வருமொழி முதலில் உள்ள உயிர், அந்த மெய்யின்மேல் ஏறி நிற்கும் என்பது விளங்குகின்றது. இதுபோலவே பிறவும் புணரும்.

அல்வழியில் குற்றியலுகரப் புணர்ச்சி

ஆறு + தலை = ஆறுதலை (நெடிற்றொடர்)
எஃகு + சிறிது = எஃகுசிறிது (ஆய்தத்தொடர்)
விறகு + பெரிது = விறகுபெரிது (உயிர்த்தொடர்)
உண்டு + செல் = உண்டு செல் (மென்றொடர்)
செய்து + கொடு = செய்துகொடு (இடைத்தொடர்)

வன்றொடர்க் குற்றியலுகரம் ஒழிந்த ஏனைய குற்றியலுகரங்களுக்கு முன் வந்த வல்லினம் அல்வழியில் இயல்பாயின.

வேற்றுமையில் குற்றியலுகரப் புணர்ச்சி

மார்பு + கடுமை = மார்பு கடுமை (இடைத்தொடர்)
எஃகு + பெருமை = எஃகு பெருமை (ஆய்தத்தொடர்)
நாகு + தீமை = நாகு தீமை (நெடிற்றொடர்)
வரகு + தாள் = வரகு தாள் (உயிர்த்தொடர்)

இடைத்தொடர் முதலிய நான்கு தொடர்க் குற்றியலுகரங்கட்கு முன்னும் வருமொழி முதலில் வந்த வல்லினம் வேற்றுமையிலும் இயல்பாயின.

ஒற்றிரட்டிக்கும் குற்றியலுகரப் புணர்ச்சி

ஆறு +பெருக்கு = ஆற்றுப் பெருக்கு (நெடிற்றொடர்)

ஆடு +தலை = ஆட்டுத் தலை (நெடிற்றொடர்)

கயிறு +கட்டில் = கயிற்றுக் கட்டில் (உயிர்த்தொடர்)

நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களில் உள்ள டகர, றகரங்கள் இரட்டித்தபோது வலி மிக்கது.

மென்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி

குரங்கு +மனம் = குரக்கு மனம்
இரும்பு +உலக்கை = இருப்புலக்கை
சிலம்பு +அதிகாரம் = சிலப்பதிகாரம்
கரும்பு +வில் = கருப்புவில்

அல்வழி வேற்றுமை இரண்டிலும் மென்றொடர்க் குற்றியலுகரங்கள் வன்றொடர்க் குற்றியலுகரங்களாகத் திரிந்து புணர்ந்தன.

ஐகாரம் பெறும் குற்றியலுகரப் புணர்ச்சி

பண்டு +காலம் = பண்டைக் காலம்
இன்று +நாள் = இற்றைநாள்
அன்று +திங்கள் = அற்றைத் திங்கள்
நேற்று +பொழுது = நேற்றைப்பொழுது

மென்றொடர், வன்றொடர்க் குற்றியலுகரங்கள் ஐகாரச் சாரியை பெற்றுப் புணர்ந்தன.

(2) குற்றியலிகரப் புணர்ச்சி:

நாடு +யாது=நாடியாது
விளக்கு +யாது=விளக்கியாது
குரங்கு +யாது=குரங்கியாது
வரகு +யாது=வரகியாது

இவற்றுள் நிலைமொழியின் ஈற்றில் உள்ள குற்றியலுகரங்கள், வருமொழியின் முதலில் உள்ள யகரத்தைக் கண்டதும் இகரமாகத் திரிகின்றன. இவ்விகரம் குற்றியலிகரமாகும். இவ்வாறு குற்றியலுகரம் யகரத்தோடு புணரும்போது குற்றியலிகரமாகத் திரிந்து புணரும் புணர்ச்சியே குற்றியலிகரப் புணர்ச்சியாகும்.

பயிற்சி

1. நிலைமொழி, வருமொழி—இவற்றை விளக்குக.
2. புளியங்காய்—இப்புணர்ச்சியில் உள்ள பதங்களைப் பிரித்து, அவை புணருங்கால் உண்டான விகாரங்களை வரைக.
3. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? வகைக்கு ஒருதாரணம் தந்து விளக்குக.
4. மெய்யீற்றின்முன் உயிர்வருங்கால் எங்கு ஒற்று இரட்டிக்கும்? எங்கு இரட்டிக்காது? உதாரணத்தோடு விளக்குக.
5. உடம்படுமெய்—பொருள் எழுதி விளக்குக.
6. உடம்படு மெய்கள் யாவை? அவை எவ்வெவ்வாறு வரும்?
7. பின்வருவனவற்றைப் புணர்த்திக் காட்டுக:—
   உலகு + அறியும், பூ + செடி, வட்டம் + கால், குளம் + கரை, பூ + அழகு, பூ + எங்கே, கல் + எறி, மணி + அடி, வால் + அறிவன், வாழை + குலை, மரம் + இலை.

8. பிரித்துக் காட்டுக:—
கோயில், வருவதியாது, தீதாகும், பத்தானுல், பூட்டுடைந்தது, குருட்டுக்கண், வண்டியோட்டினுன், பலாவிலே, மனத்துயர்.

9. கீழ்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ளவை தவருகப் புணர்ந்துள்ளன. அவற்றைத் திருத்தி எழுதுக:—

(1) என்னைக் கண்டப்பையன் ஓடினுன்.
(2) நான் வாழைகாய் வாங்கினேன்.
(3) என் தங்கை பூயெடுக்க தோட்டத்திற்கு சென்ருள்.
(4) காணுமற்போனக் குழந்தையை என் நண்பன் தேடிபிடித்து அழைத்து வந்தான்.

V. யாப்பு

முன்னுரை

யாப்பு என்பதற்கு 'யாத்தல்' என்பது பொருள். யாத்தல் - கட்டுதல். இது தொழிலாகு பெயராய் யாக்கப்படும் (கட்டப்படும்) செய்யுளை உணர்த்தி நின்றது. *யாப்பு, பாட்டு, பா, கவி* என்பன 'செய்யுள்' என்னும் ஒரு பொருளை உணர்த்தி நிற்கும் சொற்களாகும்.

தோல், இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, நரம்பு முதலிய பொருள்களால் நம் உடம்பு யாக்க (கட்ட)ப்பட்டிருத்தலால், அது *யாக்கை* என்னும் பெயர் பெற்ருற்போல, செய்யுளும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்புக்களாலும் யாக்கப்பட்டிருத்தலால், இஃதும் *யாப்பு* என்னும் பெயர் பெறுவதாயிற்று.

1. யாப்பின் உறுப்புக்கள்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

இச்செய்யுளில்

(1) குறில், நெடில், ஒற்று முதலிய எழுத்துக்கள் இருக்கின்றன.

(2, 3) ஒவ்வொரு வரியும் இடைவெளி பெற்றுப் பிரிந்திருத்தல் காண்க. அவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதிகளே சீராகும்.

அசையினால் ஆக்கப்பட்டது சீராதலால், அச்சீரிலேயே அசைகளும் அடங்கியுள்ளன.

(4) ஒரு சீரோடு மற்றொரு சீரை இணைத்து நிற்கும் ஓசையே தளையெனப்படுவது.

(5) இச்செய்யுள் இரண்டு அடிகளால் ஆனது. இதில் உள்ள ஒவ்வொரு வரியும் ஒவ்வோர் அடியாம்.

(6) தொடை, எதுகை, மோனை முதலாகப் பலவகைப்படும். இப்பாவிலும் 'எண்ணென்ப-கண்ணென்ப' என எதுகையும், 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்' என மோனையும் வந்துள்ளமை காண்க.

இதனால், (1) எழுத்து, (2) அசை, (3) சீர், (4) தளை, (5) அடி, (6) தொடை என்னும் ஆறும் செய்யுட்களின் உறுப்புக்களாகும் என அறியலாம்.

2. அசை, சீர்

(1) அசை :

குறில், நெடில், ஒற்று முதலிய எழுத்துக்கள் முன்னமே நீங்கள் அறிந்திருப்பவை. அவ் வெழுத்துக்களால் ஆவதே அசை. அது **நேரசை, நிரையசை** யென இருவகைப்படும்.

நேரசைகள் நான்கு

க—குற்றெழுத்துத் தனித்து வந்த நேரசை.

கண்—குற்றெழுத்து ஒற்றடுத்து வந்த நேரசை.

கா—நெட்டெழுத்துத் தனித்து வந்த நேரசை.

காண்—நெட்டெழுத்து ஒற்றடுத்து வந்த நேரசை.

இவ்வாறு ஒரு குற்றெழுத்துத் தனித்தோ **அன்றி ஒற்றடுத்தோ, ஒரு நெட்டெழுத்துத் தனித்தோ அன்றி ஒற்றடுத்தோ வருமாயின், அவை நான்கும் நேரசை எனப்படும்.**

நிரையசைகள் நான்கு

இற—குறில் இணைந்து வந்த நிரையசை.

இறல்—குறில் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரையசை.

இரு—குறில் நெடில் இணைந்து வந்த நிரையசை.

இருல்—குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரையசை.

இவ்வாறு இரு குறில்கள் இணைந்தோ **அன்றி ஒற்றடுத்தோ, ஒரு குறிலும் நெடிலும்**

இணைந்தோ அன்றி ஒற்றடுத்தோ வரின், அவை நான்கும் நிரையசை எனப்படும்.

இதனால், அசை நேரசை, நிரையசையென இருவகைப்படும் என்பதும், அவை ஒவ்வொன்றும் நந்நான்காய் எட்டாகி வரும் என்பதும் அறியலாம்.

(2) *சீர்* :

எழுத்துக்களால் **அசை** ஆவதுபோல, அசைகளால் ***சீர்*** ஆகும். அஃது (1) ***ஓரசைச் சீர்,*** (2) ***ஈரசைச் சீர்,*** (3) ***மூவசைச் சீர்,*** (4) ***நாலசைச் சீர்*** என நான்கு வகைப்படும்.

ஓரசைச்சீர்-2

(1) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்."

இக்குறளில் உள்ள **கடைசிச்** *சீர்* 'நீர்' என்பது. இது நேரசையாய் வந்த ஓரசைச் சீர். இதனை **'நாள்'** என்னும் வாய்பாட்டால் புலவர் வழங்குவர்.

(2) "நன்றாற்றி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர்."

இக்குறளில் உள்ள கடைசிச்சீர் 'இலர்' என்பது. இது நிரையசையாய் வந்த ஓரசைச் சீர். இதனை *மலர்* என்னும் வாய்பாட்டால் புலவர் வழங்குவர்.

இதனால் ***நேரசையோ நிரையசையோ ஓரசையே, ஒரு சீராக நிற்கும்போது, அது 'அசைச்சீர்' எனப்படும் என்பதும், அது நேர***

சைச் சீராயின் 'நாள்' என்ற வாய்பாட்டாலும், நிரையசைச் சீராயின் 'மலர்' என்ற வாய்பாட்டாலும் வழங்கப்படும் என்பதும் அறியலாம்.

ஈரசைச் சீர்—4

(1)	(2)	(3)	(4)
கந்-தன்	கடம்-பன்	கரு-தரும்	சீ-ரினன்
↓ ↓	↓ ↓	↓ ↓	↓ ↓
நேர் நேர்	நிரை நேர்	நிரை நிரை	நேர் நிரை

இவற்றை இவ்வாறு அசைகளாகப் பிரித்தால்,

(1) முதற்சீரில் நேரசையும் நேரசையும் (நேர் நேர்),

(2) இரண்டாம் சீரில் நிரையசையும் நேரசையும் (நிரைநேர்),

(3) மூன்றும் சீரில் நிரையசையும் நிரையசையும் (நிரை நிரை),

(4) நான்காம் சீரில் நேரசையும் நிரையசையும் (நேர் நிரை) இருத்தலைக் காணலாம்.

இந்த நான்கு சீரிலும் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு அசைகள் வந்திருத்தல் காண்க. ஆதலால் இவை நான்கும் ஈரசைச் சீர்களாகும். இச்சீர்களை முறையே *தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்* என்னும் *வாய்பாடுகளாற்* புலவர் கூறுவர்.

(1) நேர்நேர்—*தேமா* }
(2) நிரைநேர்—*புளிமா* } இவ்விரண்டும் *மா*வென்னும் ஈற்றால் முடிதலின், இவை *மாச்சீர்* என்று கூறப்படும்.

(3) நிரைநிரை—*கருவிளம்* }
(4) நேர்நிரை—*கூவிளம்* } இவ்விரண்டும் *விளம்* என்னும்

ஈற்றுல் முடிதலின், இவை **விளச்சீர்** என்று கூறப் படும்.

இவ்வீரசைச் சீர் நான்கும் பெரும்பாலும் அகவற்பா (ஆசிரியப்பா)வில் வருதலால், இவை **அகவற்சீர்** என்றும், **ஆசிரியவுரிச்சீர்** என்றும் பெயர் பெறும். மேலும் இவை இயற்கையாக வரும் சொற்களில் அமைந்திருத்தலால், இவற் றிற்கு **இயற்சீர்** என்ற பெயரும் உண்டு.

மூவசைச்சீர்—8

(காய்ச்சீர்-4)

(அ) (1) வந்தானை—வந்-தா-னை
↓ ↓ ↓
நேர் நேர் நேர் (தேமாங்காய்)

(2) வருவானை—வரு-வா-னை
↓ ↓ ↓
நிரை நேர் நேர் (புளிமாங்காய்)

(3) அருளுடையோன்—அரு-ளுடை-யோன்
↓ ↓ ↓
நிரை நிரை நேர்-
(கருவிளங்காய்)

(4) போற்றிடுவார் —போற்-றிடு-வார்
↓ ↓ ↓
நேர் நிரை நேர்-
(கூவிளங்காய்)

மேற்காட்டிய சீர்கள் ஒவ்வொன்றிலும் மும் மூன்று அசைகள் அமைந்திருத்தலால், இவை நான்கும் **மூவசைச்சீர்கள்** எனப்படும். இவற்றிற்கு முறையே **தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங் காய், கூவிளங்காய்** என்பன **வாய்பாடுகளாம்.**

இச்சீர்கள் நான்கும் பெரும்பாலும் வெண்பாவில் வருதலால் இவை *வெண்சீர்* என்றும், ***வெண்பாவுரிச்சீர்*** என்றும் பெயர் பெறும். இவற்றின் வாய்பாடுகள் *காய்* என்னும் ஈற்றுல் முடிதலின், இவற்றிற்குக் *காய்ச்சீர்* என்ற பெயரும் உண்டு.

(கனிச்சீர்-4)

(ஆ) (1) கானக்குயில் — கா - னக் - குயில்
↓ ↓ ↓
நேர் நேர் நிரை
(தேமாங்கனி)

(2) வனமாலிகை — வன - மா - லிகை
↓ ↓ ↓
நிரை நேர் நிரை
(புளிமாங்கனி)

(3) நலனுறுமொழி — நல - னுறு - மொழி
↓ ↓ ↓
நிரை நிரை நிரை
(கருவிளங்கனி)

(4) பால்மொழியினள் —பால்-மொழி-யினள்
↓ ↓ ↓
நேர் நிரை நிரை
(கூவிளங்கனி)

இந்நான்கு சீர்களிலும் ஒவ்வொன்றிலும் மும்மூன்று அசைகளே அமைந்திருத்தலால், இவையும் **மூவசைச்சீர்களே**. ஆனல் இவை நிரையசையை இறுதியில் பெற்றிருத்தலால், இவற்றிற்கு முறையே ***தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி*** என்பன ***வாய்பாடு***களாகும்.

இவை பெரும்பாலும் வஞ்சிப்பாவிற்கு உரியனவாய் வருதலின், *வஞ்சியுரிச்சீர்* என்றும், இவற்

றின் வாய்பாடுகள் **கனி** என்னும் ஈற்றால் முடிதலின் ***கனிச்சீர்*** என்றும் பெயர் பெறும்.

மூவசைச் சீர்களுள், காய்ச்சீர் நான்கும், கனிச்சீர் நான்குமாய் வருதலின் அவை மொத்தம் எட்டாதல் அறிக.

நாலசைச்சீர்-16

நாலசைச்சீர்	வாய்பாடு
1. நேர்நேர் நேர்நேர்	—தேமாந்தண்பூ
2. நிரைநேர் நேர்நேர்	—புளிமாந்தண்பூ
3. நிரைநிரை நேர்நேர்	—கருவிளந்தண்பூ
4. நேர்நிரை நேர்நேர்	—கூவிளந்தண்பூ
5. நேர்நேர் நிரைநேர்	—தேமா நறும்பூ
6. நிரைநேர் நிரைநேர்	—புளிமா நறும்பூ
7. நிரைநிரை நிரைநேர்	—கருவிள நறும்பூ
8. நேர்நிரை நிரைநேர்	—கூவிள நறும்பூ
9. நேர்நேர் நேர்நிரை	—தேமாந் தண்ணிழல்
10. நிரைநேர் நேர்நிரை	—புளிமாந் தண்ணிழல்
11. நிரைநிரை நேர்நிரை	—கருவிளந் தண்ணிழல்
12. நேர்நிரை நேர்நிரை	—கூவிளந் தண்ணிழல்
13. நேர்நேர் நிரைநிரை	—தேமா நறுநிழல்
14. நிரைநேர் நிரைநிரை	—புளிமா நறுநிழல்
15. நிரைநிரை நிரைநிரை	—கருவிள நறுநிழல்
16. நேர்நிரை நிரைநிரை	—கூவிள நறுநிழல்

இச்சீர்கள் ஒவ்வொன்றிலும் நந்நான்கு அசைகள் வந்திருத்தலால் இவை பதினாறும் ***நாலசைச் சீர்கள்*** எனப்படும். இவற்றுள் நேரசையால் முடியும் எட்டும் **பூச்சீர்** என்றும், நிரையசையால் முடியும் எட்டும் ***நிழற்சீர்*** என்றும் சொல்லப்பெறும்.

இந்நாலசைச் சீர்கள் வெண்பாவில் வாரா; ஆசிரியப்பாவிலும், கலிப்பாவிலும் மிகக் குறைவாகவே வரும்; வஞ்சிப்பாவினுள் ஓரளவு மிகுதியாக வரும்.

பயிற்சி

1. யாப்பு என்பதன் பொருள் யாது?
2. 'அசை' என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்?
3. ஆசிரிய வுரிச்சீர், வெண்பாவுரிச்சீர், வஞ்சியுரிச்சீர்—பெயர்க் காரணத்தை விளக்குக.
4. மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர்—ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.
5. நாள், மலர் என்னும் வாய்பாடுகள் எவற்றிற்கு வரும்?
6. ஈரசைச் சீருக்கு உரிய வாய்பாடுகள் யாவை?
7. மூவசைச் சீருக்கு உரிய வாய்பாடுகள் யாவை?
8. " ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு "

இச்செய்யுளில் வந்துள்ள சீர்களை அசைகளாகப் பிரித்து, ஒவ்வொரு சீருக்கும் உரிய வாய்பாட்டைக் கூறுக.

VI. அணி

முன்னுரை

மகளிர்க்கு அழகு தருகின்ற அணிகலங்களை போன்று, செய்யுட்களுக்கு அழகு தருவது அணியாகும். பெரியோர்களின் பாடல்களில் இவ்வணிகள் இயல்பாகவே நன்கு அமைந்திருக்கும். அவை **இயல்பு நவிற்சியணி** முதலாகப் பலவகைப்படும் அவற்றுள் ஈண்டுச் சில அணிகளைப் பார்ப்போம்.

1. இயல்பு நவிற்சியணி

"இவ்வீடு மிக அழகாக இருக்கின்றது. இஃது ஏழடுக்குகளைக் கொண்டிருத்தலால், இது பார்ப்பதற்கு மிகவும் உயரமாகத் தோன்றுகின்றது. இதன் சுவர்களில் பூசப்பட்டுள்ள சுண்ணம்பு மிக்க வெண்ணிற ஒளிபெற்று விளங்குகின்றது.

இதில் ஒரு வீட்டின் சிறப்பினைப் பெருக்கியோ சுருக்கியோ கூறுதலின்றி, அஃது உள்ளது உள்ள படியே இயல்பாக நவில (கூற)ப்பட்டிருத்தலால், இஃது இயல்பு நவிற்சியணியாகும். (நவிலுதல்-கூறுதல்.)

இதனால் **யாதேனும் ஒன்றை, அஃது உள்ளது உள்ளபடியே அழகுற எடுத்துக் கூறின், அஃது இயல்பு நவிற்சி அணியாகும்.**

2. உயர்வு நவிற்சியணி

(1) இவ்வீடு மேகமண்டலத்தை அளாவி நிற்கின்றது.

(2) இம்மதில் தன் உயரத்தால் சூரிய சந்திரர்களுடைய போக்குவரவினைத் தடுக்கின்றது.

(3) கண்மூடித் திறப்பதற்குள் யான் இக்கட்டுரையை எழுதி முடிப்பேன்.

(4) இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ—சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்.

இங்கு வீட்டின் உயரம், மதிலின் உயரம், கட்டுரை எழுதும் ஆற்றல், கவி புனையும் வன்மை ஆகியவற்றை மிகவும் உயர்த்தி அழகுறக் கூறியிருத்தலால், இவையெல்லாம் **உயர்வு நவிற்சியணிகள்.**

இதனால், ***யாதேனும் ஒன்றன் சிறப்பினை மிகவும் உயர்த்தி அழகுறக் கூறின், அஃது உயர்வு நவிற்சியணி என்று கூறப்படும்.***

3. (1) உவமையணி (பொது)

"மதிபோன்ற ஒளிமுகம்"

இவ்வுவமையில்,

(1) மதி —உவமை அல்லது உவமானம்
(2) முகம் —பொருள் அல்லது உவமேயம்
(3) போன்ற—உவம உருபு
(4) ஒளி —பொதுத்தன்மை

என்னும் நான்கு உறுப்புக்கள் அமைந்திருத்தலைக் காண்க. இதனால் உவமையணி, **உவமை, பொருள், உவமவுருபு, பொதுத்தன்மை** என்னும் நான்கு உறுப்புக்களோடு வரும் என்பதை அறியலாம்.

இவ்வுவமையணி சில இடங்களில், '**மதி போன்ற முகம்**' எனப் பொதுத்தன்மைமட்டும் குறைந்தும், '**மதிமுகம்**' எனப் பொதுத்தன்மையும், உவமவுருபுமாகிய இரண்டும் குறைந்தும் வருதலும் உண்டு.

"பால்போலும் இன்சொல் பவளம்போல் செந்துவர்வாய்,
சேல்போற் பிறழும் திருநெடுங்கண்—மேலாம்,
புயற்போற் கொடைக்கைப் புனல்நாடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ தவர்"

இச்செய்யுளில் நான்கு உறுப்புக்களோடுங் கூடிய உவமையணி அமைந்திருத்தலைக் காண்க.

(2) உருவகவணி (பொது)

"முகமதி தோன்றிற்று"

இங்கு, 'முகமதி' என்பது, 'முகமாகிய மதி' என விரியும். இவற்றுள், முகம்-பொருள்; மதி-உவமை. ஆனால் இவ்விரண்டினையும் வேறுபடக் கூறுது, 'முகமே மதி' என அவை ஒற்றுமைப்படக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு பொருள் வேறு, உவமை வேறு என்றுக்காது, பொருளையே உவமையாக்கி ஒற்றுமைப்படக் கூறுவதுதான் உருவகவணியாகும்.

"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

இச்செய்யுளில் இன்சொல்லை விளைநிலமாகவும், ஈதலை வித்தாகவும், வன்சொல்லைக் களையாகவும், வாய்மையை எருவாகவும், அன்பை நீராகவும், அறத்தைக் கதிராகவும் உருவகம் செய்துள்ளமை காண்க.

உவமை அணிக்கும் உருவக அணிக்கும் உள்ள வேறுபாடுகள்:

உவமையணி	உருவக அணி
(1) உவமை முன்னும் பொருள் பின்னுமாக நிற்கும்.	(1) பொருள் முன்னும் உவமை பின்னுமாக நிற்கும்.

உவமையணி

(2) உவமை வேறு, பொருள் வேறு என்பது தெரியுமாறு கூறுவது.

(3) போல, அன்ன முதலிய உவம உருபுகளுள் ஒன்று, உவமைக்கும், பொருளுக்கும் இடையில் மறைந்தோ வெளிப்பட்டோ நிற்கும்.

உருவக அணி

(2) உவமையும் பொருளும் ஒன்றென்று எண்ணுமாறு கூறுவது.

(3) உவமவுருபுகளே வரமாட்டா. ஆனல், 'ஆகிய', 'என்னும்' என்பன போன்ற சொற்கள் இடையே மறைந்தோ வெளிப்பட்டோ நிற்கும்.

இவ்வேறுபாடுகளோடு உவமை அணிகளும், உருவக அணிகளும் வருதலை உங்கள் செய்யுட் பாடங்களிற் கண்டுகொள்க.

பயிற்சி

1. அணியாவது யாது?

2. உவமை, உருவகம்—இவை ஒவ்வொன்றுக்கும் இலக்கணம் வரைக.

3. உவமைக்கும், உருவகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

4. உவமவுருபுகளில் இரண்டினை எழுதிக் காட்டுக.

5. பின்வரும் உவமைகளை உருவகமாக மாற்றுக:—

(1) மேகம்போன்ற பாரி, (2) புலிபோலப் பாயும் வீரன், (3) சிங்கம்போன்ற சீவகன், (4) யானைபோன்ற கட்டியங்காரன்.

6. கீழ்வரும் குறட்பாக்களுள் உள்ள அணிகளைக் கூறித் தனித்தனியே விளக்குக:—

(1) "குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது."

(2) "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்."

இரண்டாம் பாகம்

கட்டுரை

கட்டுரை—(1) வருணனைக் கட்டுரை, (2) விளக்கக் கட்டுரை, (3) எடுத்தியம்பும் கட்டுரை, (4) வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை, (5) நடைமுறைச் சமுதாய இயல் கட்டுரை, (6) நடைமுறைப் பொருளியல் கட்டுரை, (7) நடைமுறைக் கல்வியியல் கட்டுரை எனப் பல வகைப்படும். இவற்றை ஒவ்வொன்றாக இங்குக் காண்போம்.

1. வருணனைக் கட்டுரை

ஒன்றை உள்ளவாறு வருணித்துரைத்தல் வருணனைக் கட்டுரை எனப்படும். மாமல்லபுரம், காஞ்சிபுரம், செஞ்சிக்கோட்டை, கங்கைகொண்ட சோழபுரம் போன்ற வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களை வருணித்துக் கூறலாம்; தஞ்சைப் பெரிய கோயில், மாமல்லபுரத்துத் தேர்கள், தஞ்சை அரண்மனை போன்ற பொருள்களை உள்ளவாறு வருணித்துக் கூறலாம்; புகைவண்டிச் செலவு, கப்பற் செலவு, வான்வழிச் செலவு, படகுச் செலவு முதலிய செலவு(யாத்திரை)களை வருணித்துக் கூறலாம்; இயற்கைப் பொருள்களான கடல், வானம், மலை, ஞாயிறு, திங்கள், விண்மீன்கள், ஆறு போன்றவற்றை வருணித்துக் கூறலாம்; நெசவுத் தொழில் முதலிய தொழில்கள் நடைபெறும் முறைகளை வருணித்துக் கூறலாம். இவையனைத்தும் வருணித்தலில் அடங்கும்.

வரலாற்றுப் புகழ்பெற்ற செஞ்சியைப்பற்றிய கட்டுரை இங்குத் தரப்படுகின்றது. வருணனைப் பகுதிகளைக்கொண்ட பல நூல்களைப் படித்து, இதுபோன்ற வருணனைக் கட்டுரைகளை எழுதப் பழகுக.

செஞ்சிக்கோட்டை

குறிப்புக்கள் :

(1) இருப்பிடம், (2) கோட்டைப் பிரிவுகள், (3) கோட்டை வாயில்கள், (4) கோட்டைக் குன்றுகள், (5) செஞ்சிநகரம், (6) சிங்கபுரம், (7) இராஜகிரி, (8) அம்மன் கோயில்கள், (9) இராஜகிரி மேலிடம், (10) மலை அடிவாரம், (11) கிருஷ்ணகிரி, (12) வரலாற்றுச் சிறப்பு.

கட்டுரை

1. தென்னிந்தியாவிலுள்ள வரலாற்றுச் சின்னங்கள் பலவற்றுள் செஞ்சிக்கோட்டை முக்கியமானதாகும். தென்னிந்திய வரலாற்றின் ஒரு பகுதி இதனுள் புதைந்து கிடக்கின்றது என்று சொல்லலாம். இன்று இக்கோட்டை அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கி, ஒரு பழைய காட்சிப் பொருளாகவே இருக்கிறது. இது தென்னார்க்காட்டு மாவட்டத்தில் வடமேற்கு மூலையில் இருக்கின்றது. இஃது ஏறக்குறையப் பதினைந்து கல் நீளம் பரவியுள்ளது.

இஃது அமைந்துள்ள இடம் வரண்டிருப்பது; குன்றுகளும் பாறைகளும் நிறைந்தது. இதன் குன்றுகளும், செங்குத்தான பாறைகளும், ஆழ்ந்த மலைப் பிளவுகளும் மனிதனது முயற்சியின்றியே இயற்கை அரண்களாக உருப் பெற்றவை. இதனை

ஆண்ட அரசர்கள், இந்த இயற்கை அரண்களை வலிமைப்படுத்தினரேயன்றி வேறொன்றும் செய்ய வில்லை.

2. இக்கோட்டை முக்கோண வடிவில் மூன்று குன்றுகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. இது வெளிக்கோட்டை, உள்கோட்டை என இரு பிரிவுகளை உடையது. வெளிக்கோட்டை, மேற் சொன்ன முக்கோண வடிவில் மூன்று மூலைகளாக அமைந்த குன்றுகளை உள்ளடக்கி அவற்றை இணைத்து நிற்பது. அஃது ஏறக்குறைய இருபத்து நான்கு கல் சுற்றளவுடையது. மதிற் சுவர்கள் கருங்கற்களால் கட்டப்பட்டவை. அவை அறுபது அடி வரை அகலம் உடையவை. அவற்றைச் சூழ்ந்து எண்பது அடி அகலம் உள்ள ஆழமான அகழி இருக்கின்றது. உள்கோட்டை ஏறக்குறைய மூன்று கல் சுற்றளவு உடையது.

3. இந்த இரண்டு கோட்டைகளிலும் கோட்டை வாயில்கள் இருந்தன. வெளிக்கோட்டை யின் வாயில்கள் அடைக்கப்பட்டுவிட்டன. இப் பொழுது இருப்பவை இரண்டு வாயில்கள். அவை திண்டிவனத்திலிருந்து திருவண்ணுமலைக்குப் போகும் பாதைக்காக மதிலை இடித்து அமைக்கப் பட்டவை; அவற்றின் வழியாகவே இப்பொழுது கோட்டைக்குள் போகமுடியும். உள்கோட்டையில் இருந்த இரண்டு வாயில்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அவற்றில் ஒன்று வடக்கில் உள்ள ஆர்க்காட்டு வாயில் என்பது; மற்றொன்று புதுச் சேரி வாயில் என்பது.

4. கோட்டையின் மூன்று கோடிகளிலும் உள்ள குன்றுகள், முறையே பெரியமலை அல்லது

இராஜகிரி, வடகோடியில் உள்ள கிருஷ்ணகிரி, தெற்கில் உள்ள சந்திராயன துர்க்கம் என்பவை. சக்கிலி துர்க்கம் என்பது நான்காம் குன்ருகும். இவற்றில் மிகப் பெரியதும் சிறந்ததும் இராஜகிரி; மிகச் சிறியது சக்கிலி மலை. இக்குன்றுகள் அனைத்தும் மதில்களாலும் அகழிகளாலும் வலுப் படுத்தப்பட்டவை.

ஒவ்வொரு குன்றின் நடு இடமும் தலையைச் சுற்றச் செய்யும் செங்குத்தான கற்பாறைகளாக இருக்கின்றன. சுற்றிலும் உள்ள பகுதிகளும் எவரும் எளிதில் ஏற முடியாத பெரிய கற்பாறை களாக அமைந்துள்ளன. இந்த இயற்கைப் பாது காப்புகளுடன் ஆங்காங்குப் பெரிய மதில்களும் எழுப்பப்பட்டுள்ளன. துப்பாக்கி வைத்துச் சுடு வதற்கான கண்ணறைகளும் அமைக்கப்பட் டுள்ளன. ஒவ்வொரு குன்றிலும் படைத்தளங்கள், கொலு மண்டபங்கள் முதலியனவும், கோயில்களும் இருக்கின்றன. மலை அடிவாரங்களில் வீரர்கள் தங்குவதற்கான இடங்கள் இருக்கின்றன.

5. இம்மலையை அடுத்துள்ள இன்றைய செஞ்சிப் பகுதியில் பழைய கால மக்கள் வாழ வில்லை. அவர்கள் அரங்கநாதர் கோயில் உள்ள சிங்கபுரம் என்னும் இடத்தில் வாழ்ந்தனர்; அதற் கும் அப்பால் இருந்த மேலைச்சேரி என்ற பழைய செஞ்சியிலும் வசித்தனர். தேஜஸ்சிங்கிற்கு முற் பட்ட அரசர் காலங்களில் பழைய செஞ்சியே தலை நகரமாக இருந்தது. பழைய செஞ்சியும் புறக் கோட்டை ஒன்ருல் இணைக்கப்பட்டிருந்தது. சிங்கபுரம் '*விஷ்ணு செஞ்சி*' எனப்பட்டது. செஞ்சி '*சிவசெஞ்சி*' என வழங்கியது.

6. சிங்கபுரம் பழைய காலத்தில் செஞ்சி நகரத்தின் ஒரு பகுதியாக இருந்தது. செஞ்சி அரசர்களுக்கு அரங்கநாதர் விருப்பக் கடவுளாக விளங்கினர். இன்னும் அவ்வூர் சிறந்த வைணவத் தலமாக இருந்து வருகிறது. அரங்கநாதர் சிலை இருபத்துநான்கு அடி நீளமுள்ளது. இது திருவரங்கத்தில் உள்ள சிலையினும் பெரியது. அது முஸ்லிம் படையெடுப்பின் போது திருவரங்கத்திலிருந்து கொண்டுவந்து வைக்கப்பட்டதாம்.

7. இராஜகிரி ஏறக்குறைய ஐந்நூறு அல்லது அறுநூறு அடி உயரமுள்ளது; மிகவும் செங்குத்தானது. நாற்புறங்களிலிருந்தும் எளிதில் நெருங்க முடியாதது; மூன்று புறங்களிலும் ஏறமுடியாத பாறைகள் நிறைந்த பாதுகாப்பை உடையது; நான்காம் பக்கத்தில் செங்குத்தான மலைப்பிளவு ஒன்றை இயற்கை அகழியாக உடையது. இந்தப் பிளவு இருபத்துநான்கு அடி அகலமும் அறுபது அடி ஆழமும் உடையது. கோட்டையை ஆண்ட அரசர்கள் அதனை மேலும் ஆழமாக்கிவிட்டனர்.

8. இராஜகிரியின் அடிவாரத்தில் சோலை ஒன்று உண்டு. அதன் நடுவில் கமலக்கண்ணி அம்மன் கோயில் இருக்கின்றது. கோட்டையின் மற்ருெரு பகுதியில் **செஞ்சி அம்மன்** கோயில் உள்ளது. இந்த அம்மன் பெயரே கோட்டைக்கும் நகரத்திற்கும் பெயராக அமைந்திருக்கலாம். அம்மன் கோயிலுக்குமுன் பெரிய கல் ஒன்று இருக்கிறது. அதன்மீது வில், அம்பு, வாள், எருமைத் தலை, ஆட்டுத்தலை, மனிதர் தலைகள் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. அம்மனுக்கு இந்த உயிர்கள் பலியிடப்பட்டன போலும்! கோட்டையில் இத்

தகைய தெய்வங்களின் கோயில்கள் ஏழு இருக்கின்றன. அவை 'ஏழு கன்னிமார் கோயில்கள்' எனப்படுகின்றன.

9. கமலக்கண்ணி அம்மன் கோயிலுக்கு அப்பால் இராஜகிரிமீது செல்ல, ஏழு வாயில்களைக் கடக்க வேண்டும். மலை உச்சியில் அரங்கநாதர் கோயில் ஒன்று உண்டு. அதன் எதிரில் மண்டபம் ஒன்று இருக்கிறது. அம்மண்டபம் சிறப்ப அழகுடன் கூடியது. கோயிலில் சிலை ஒன்றும் இல்லை. செங்கற்களால் கட்டப்பட்ட தானியக் களஞ்சியங்கள் இரண்டும், கொடிமேடை ஒன்றும் இருக்கின்றன. மிக உறுதியான சுவர்களைக் கொண்ட அறை ஒன்று காணப்படுகிறது. அது 'செல்வ அறை' போலும்! அதற்கு அப்பால் உள்ள மண்டபத்தில் பதினோரடி நீளமும், ஏழடிச் சுற்றளவும் உள்ள பீரங்கி ஒன்று இருக்கிறது.

10. இராஜகிரி அடிவாரத்தில் மசூதிகள், கோயில்கள், கொலுமண்டபங்கள் முதலியன காணப்படுகின்றன. வெளிக்கோட்டையில் வேங்கட ரமணசாமி கோயில் ஒன்று இருக்கின்றது. அது மிக அழகான வேலைப்பாடுகொண்ட கோயில். அதன் செதுக்குக் கற்கள் புதுச்சேரி, சிற்றூர் முதலிய ஊர்களில் கட்டடம் கட்டக் கொண்டு செல்லப்பட்டனவாம். பட்டாபி ராமசாமி கோயில் என்பது ஒன்று. அதன் மண்டபம் பன்னிரண்டு தூண்களை உடையது. அத்தூண்கள் அழகு மிகுந்த வேலைப்பாடு கொண்டவை. அக்கோயிலுக்கு மேற்கே யானைக்குளம், சக்கரக்குளம், செட்டி குளம் என்னும் குளங்கள் இருக்கின்றன.

செட்டி குளத்துக்கு அருகில்தான் தேஜஸ்சிங்கின் உடல் கொளுத்தப்பட்டதாம்.

உள்கோட்டையில் பெரிய களஞ்சியங்களும், பயிற்சிக் கூடமும் இருக்கின்றன. சிறிது கிழக்கில் அரசனும் அரசியும் நீராடப் பயன்பட்ட இரண்டு பெரிய சதுரக் கற்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கு வடக்கே சிறிய கட்டடங்கள் உள்ளன. அவை குதிரை கட்டும் இடங்களாகப் பயன்பட்டவை. அக்கட்டடங்களுக்குக் கிழக்கில் அரசன் கொலு மண்டபம் இருக்கிறது; அதன் பெயர் கலியாண மகால்; அந்தப்புர மாதர்க்கு அமைந்த அறைகளும் நடுவில் எட்டு அடுக்குகளைக் கொண்ட கோபுரமும் உள்ளன. கோட்டையில் சிறந்த பகுதி இதுதான்.

11. கிருஷ்ணகிரிமீது ஏற ஒழுங்கான படிக் கட்டுகள் உள்ளன. இங்கும் ஒரு கொலு மண்டபம் இருக்கிறது. அது மசூதி போன்ற கோபுர அமைப்பை உடையது. அம்மண்டபம் நாற்புறமும் காற்றோட்டம் உடையதாய் உள்ளது. இம்மலை மீதும் களஞ்சியங்கள், எண்ணெய்க் கிணறு முதலிய கட்டடங்கள் காணப்படுகின்றன. இந்த மலைகளில் நல்ல நீர்ச்சுனைகள் இருக்கின்றன. கீழேயிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டிய தேவையே இல்லை. சந்திராயன துர்க்கமும், சக்கிலி மலையும் கோட்டை மதில்களை யுடையன வாயினும் போர்ச்சிறப்புப் பெற்றவை அல்ல.

12. தென்னிந்திய வரலாற்றில் செஞ்சிக் கோட்டை சிறப்பான இடம் பெற்றுள்ளது. அஃது இன்று அழிந்து கிடக்கின்றது. ஆயினும் சரித்திர சம்பந்தமான அந்த இடத்திற்கு இன்றும் மக்கள்

சென்று வருகின்றனர். செஞ்சி வீரன் பிறந்து வளர்ந்து அரசாண்ட அக்கோட்டை, இன்று தன்னைக் காணவரும் மக்களுக்குத் தன் பழைய வரலாற்றைப் புன்முறுவலோடு உணர்த்தி நிற்கின்ற காட்சி காணத்தக்கது.

2. விளக்கக் கட்டுரை

மனிதருடைய எண்ணங்கள், பொதுக் கருத்துக்கள், கொள்கைகள், நோக்கங்கள் முதலிய நுண்பொருள்களைத் தக்க சான்றுகளுடன் விளக்கிக் கூறுதல் விளக்கக் கட்டுரை ஆகும். கல்வி, நாகரிகம், பெருந்தன்மை முதலிய பண்புகளை விளக்கி வரைதலும் இப்பகுதியில் அடங்கும். நிலக்கரியின் உபயோகம் போன்ற பல திறப்பட்ட பொருள்களை விளக்கி வரைதலும் இப்பகுதியிற் சேர்ந்ததாகும். மனக்கண்முன் பொருளை நிறுத்திப் படிப்பவர்க்கு விளங்க வரையப்பட வேண்டுதலின் இக்கட்டுரை விளக்கக் கட்டுரை எனப் பெயர் பெற்றது.

இங்கு 'நாகரிகம்' என்னும் பொருள்பற்றிய விளக்கக் கட்டுரை தரப்படுகிறது. அதுபோன்ற விளக்கக் கட்டுரைகள் பலவற்றை எழுதிப் பழகுக.

நாகரிகம்

குறிப்புக்கள்:

(1) நாகரிகம் இன்னதென்பது, (2) நாகரிகச் செயல், (3) நாகரிகத்தின் உயிர் நாடி, (4) செல்வமும் ஒழுக்கமும், (5) நாகரிகச் சின்னங்கள்.

கட்டுரை

1. **நாகரிகம்** என்னும் சொற்பொருள் நாட்டுக்கு ஏற்றாற்போல வேறுபடுகின்றது; மக்கள் அறிவு நிலைக்கு ஏற்றவாறும் வேறுபடுகிறது. மேல் நாடுகளில் இச்சொல் நாகரிக உடை, உணவு, இயந்திரப் பெருக்கம், செல்வச் செருக்கு ஆகியவற்றின் திரட்சியைக் குறிக்கின்றது. ஆனால், நம் தாய்நாட்டில் இச்சொல் மெய்யான மனிதத் தன்மையைக் குறிக்கின்றது. **அன்பு, அருள், அறிவு, அடக்கம்** இவற்றின் திரட்சியே 'நாகரிகம்' என்று நம் முன்னோர் நவின்றுள்ளனர். இவை இல்லாமலே மனிதன் உடை, உணவு, இயந்திரப் பெருக்கம், செல்வம் இவற்றை எளிதில் எய்துதல் கூடும். ஆனால் அந்நிலையில் அவன், 'நாகரிக மனிதன்' என்று கருதப்படுதல் யாங்ஙனம் இயலும்? இவை நாகரிகச் சின்னங்கள் ஆகா. நாகரிகம் என்பது உயிர்த் தொடர்பு உடையதேயன்றி, இயந்திரப் பெருக்கத்தின் தொடர்புடையது அன்று. இயந்திரப் பெருக்கமும் செல்வப் பெருக்கமும் மனித முன்னேற்றம் என்றும், அம்முன்னேற்றமே 'நாகரிகம்' என்றும் மேனாட்டு மக்களால் கருதப்படுகின்றன. ஆனால் இவை உயிர்த்தொடர்புடையன அல்ல! அல்ல!!

2. 'வலியச் சென்று உதவி புரிதல்' என்பது நாகரிகத்தின் பண்புகளில் ஒன்றாகும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டால் நன்கறியலாம். பகைவர் ஒரு கிராமத்தின்மீது வானவூர்தியினின்றும் குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களது வானவூர்தி ஒன்று இயந்திரம் கெட்டுக் கீழே வீழ்ந்தது. அதி

லிருந்த பகைவர் கீழிறங்கினதும் அந்தக் கிராமத்துப் பெண்கள் சிலர் உடைவாளை ஏந்தி அவர்களைக் குத்த நின்றனர். அவ்வமயம், நங்கை ஒருத்தி அவண் தோன்றி, அப்பகைவரை இன்முகத்தோடு வரவேற்று ஒரு குகைக்கு அழைத்துச் சென்றாள். அங்ஙனம் செல்லும்போதும் பகைவருடைய வெடிக் குண்டுகள் வீழ்ந்த வண்ணமாகவே இருந்தன. நங்கை அப்பகைவரை—தன் கிராமத்தையே அழிக்கும் தொண்டில் ஈடுபட்டிருந்த கூட்டத்தினருள் சிலரை—அன்றிரவெல்லாம் அக்குகையில் இருக்கச் செய்தாள்; உண்டி வழங்கினாள். இச்செயல் எதனைக் குறிக்கின்றதென்பதை எண்ணிப் பார்மின்; இதுவே மனிதத் தன்மை. 'பகைவனையும் நண்பனாக நினை' என்னும் பெரியோர் வாக்குக்கு இணங்க நடந்த எழிலுடை நங்கையே நாகரிகத்தை உள்ளவாறு உணர்ந்தவள் ஆவாள். அவள் பகைவர்க்கு உதவி செய்துகொண்டிருக்கையிலும், அப்பகைவரைச் சேர்ந்தோர் விடாமல் குண்டுமாரி பொழிந்துகொண்டிருந்தமை, எதனை உணர்த்துகின்றது என்பதையும் நீங்களே எண்ணிப்பாருங்கள். மனச்சான்று, மனிதத்தன்மை என்பவற்றையும் கடந்த நிலையில் உள்ள இயந்திரப் பெருக்கம் நாகரிகம் ஆகுமா? எளிய நிலையுடைய எழிலுறு நங்கை, மனிதத் தன்மையோடு பகைவரிடம் நடந்துகொண்ட பான்மை நாகரிகம் ஆகுமா? கூறுமின்.

3. கிராம மக்கள் வறுமையில் வாடியிருப்பினும் எத்துணைப் பேரன்புடன் புதியவரோடு பழகுகின்றனர்! உபசரிக்கின்றனர்! நகர மக்கள் ஒருகுடம் தண்ணீருக்கும் காலணா வாங்காமல்

விடார்; ஆனுல் எளிய கிராம மக்களோ குடம் குடமாகத் தண்ணீர் தந்து, மலர்ந்த முகத்தோடு வறிதே செல்வர்; பணம் தரினும் பெற மறுப்பர். 'ஆபத்தில் உதவி', 'விருந்தோம்பல்' என்னும் உயரிய பண்புகள் அவ்வேழை மக்களிடம் குடி கொண்டுள்ளன. கல்வியற்ற—செல்வமற்ற எளிய கிராம மக்களின் 'வெளிய மனப்பான்மை'யே நாகரிகத்தின் உயிர்நாடியாகும். மக்கள் இதனைப் பிறவியிலேயே பெற்றிருத்தல் வேண்டும். இது பிறரைப் பார்த்துக் கொள்ளத் தக்கதன்று.

அன்பு, அருள், அடக்கம், ஆன்மவுணர்வு என்பன மேனுட்டு மக்கள் வாழ்க்கையில் குடி கொண்டிருந்த காலம் ஒன்றுண்டு. அந்நாடுகளில் அவை குடிகொண்டிருந்தவரை இரக்கம், ஈதல் முதலிய நல்லியல்புகள் மேனுட்டு மக்களைப் பிணித்துக்கொண்டிருந்தன. மக்கள் அவற்றைக் கைவிட்டபின்னர், அந்நாடுகளில் இயந்திர மனப் பான்மை குடிகொண்டுவிட்டது. அதன் பயனுக அவை பிறநாடுகளை இயந்திரப் பலத்தால் அடக்கி ஆளத் தலைப்பட்டன. இப்பேராசையே இன்றைய உலகத் துன்பங்கட்கெல்லாம் அடிப்படையாகும். பேராசை என்னும் அடிப்படைமீதுதான் இன்றைய உலகத் துன்பங்கள் என்னும் 'கோர மாளிகை' கட்டப்பட்டுள்ளது.

4. பேராசை மக்கள் தொகுதிக்கே தீமை யானது. அதனை அறவே நீக்குதல் நன்மக்கள் கடனுகும். நிறத்திமிர், செல்வப்பெருக்கம் முதலி யவை உண்மை நாகரிகக் குறிகள் ஆகா. ஆன்ம அமைதியும் நேரிய வாழ்க்கையுமே நாகரிகச் சின்னங்கள் ஆகும். பணப்பித்து மக்கள் மனத்தை

விட்டு அகலும் நாளே உண்மை நாகரிகம் உதய மாகும் நன்னாளாகும். நமது தாய்நாட்டில் பண் டைக் காலத்தில் பணத்துக்குத் 'தனி மதிப்பு' இல்லை. அது மக்கட்கு வேண்டியதே; ஆயினும், அதற்கெனத் தனி இடம் ஒன்று சமூகத்தில் உண்டு. அதற்கு 'முதல் இடம்' இல்லை. ஆனால், இன்று அப்பணமே 'முதல் இடம்' பெற்றுள்ளது. இம்மாறுதலே இந்தியர் வீழ்ச்சிக்கு உள்ளதொரு காரணம் ஆகும். செல்வம் ஒருபோதும் ஆன்ம வளர்ச்சிக்கு உதவி புரிந்ததில்லை! உதவி புரியவும் அதற்கு ஆற்றல் இல்லை. இதனை நம் முன்னோர் நன்கறிந்திருந்தனர். அதனாற்றான் அப்பேரறிஞர் ஆன்ம சிந்தனை உடையவரைப் பெருமைப்படுத் திப் பேசினர்; அவர்களைத் தம் சமூகத்து உயர் மக்களாகக் கருதினர். அப்பேரறிஞரும் இழிந்த மனப்பான்மை அற்றவராய், வாழ்க்கையின் மேலான குறிக்கோளைப் பின்பற்றி வாழ்ந்து வந்தார்கள்; 'உயரிய கொள்கைகள்' என்னும் அடிப்படைமீது 'நாகரிக வாழ்க்கை' என்னும் தங்கள் கவினுறு மாளிகையைக் கட்டினார்கள். அப் பேரறிஞரே 'நாகரிகம் முற்றிய மனிதர்' எனப் படுவர். அப்பேரறிஞர் இந்நாட்டில் வாழ்ந்தமை யாற்றான் நம் தாய்நாடு உலக நாகரிகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்கியது; இவ்வுண்மை யைப் பல நாட்டுப் பண்டை அறிஞர் எழுதி வைத்த குறிப்புக்களால் அறியலாம்.

5. இத்தகைய உயரிய நிலையில் இருந்த இந்தியா, இன்று தனது பழைய பெருமையை இழந்திருப்பதன் காரணம் என்ன? இன்றுள்ள இந்தியரிடை எளிய வாழ்க்கை, ஆன்ம சிந்தனை,

உயர் குணங்கள், ஒழுக்க மேம்பாடு, சமத்துவம் முதலிய *நாகரிகச் சின்னங்கள்* வலிமை யிழந்து வாடலேயாகும். இவை யாவும் நன்முறையில் அமையப்பெறும் நாளே 'இந்தியர் நாகரிகம் உடையவர்' என உலக அறிஞரால் மீண்டும் அழைக்கப்பெறும் நன்னாளாகும்.

3. எடுத்தியம்பும் கட்டுரை

ஒருவர் ஒரு பொருளைப்பற்றித் தம் உள்ளத்தில் இருப்பதை எடுத்து விளக்கிப் பிறர்க்குக் கூறுவதாக எழுதும் கட்டுரை எடுத்தியம்பும் கட்டுரை எனப்படும்.

(1) ஒரு பெருங்கதையை எடுத்துக்கொண்டு அதிலுள்ள முக்கியமான நீதிகளைமட்டும் விளக்கிச் சொல்லலாம். உதாரணம்: இராமாயணம், பாரதம் போன்ற கதைகள்.

(2) வாழ்க்கை வரலாறு: ஒருவர் வாழுங் காலத்தில் அவரிடம் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுதல்: உ-ம். சிவாஜி, பாபர் போன்றாரின் தனிப்பட்ட வாழ்க்கை வரலாறு.

(3) நிகழ்ச்சி: தெருச் சண்டை, திருவிழா, திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுங்கால், அவற்றைக் காண்போர், தம் உள்ளத்தில் எழும் கருத்துக்களை விளக்கி வரைவது.

(4) ஆபத்து அல்லது இயற்கை ஆற்றலின் எதிர்ப்பு: வெள்ளம், நெருப்பு, கப்பல் மூழ்குதல், நிலநடுக்கம் போன்றவை ஏற்படுங்கால் நடந்த நிகழ்ச்சிகளை விளக்கி வரைவது.

(5) தரை அல்லது கடற் பயணம்: உண்மை

யில் நடைபெற்றதோ அன்றிக் கற்பனையாகப் புனைந்தோ வரைவது.

நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வரிசையாக முறைப்படுத்தித் தொகுத்துக்கொள்ளுதல் வேண்டும்; தேவையற்ற சிறு செய்திகளைத் தள்ளிவிடுதல் வேண்டும். வாழ்க்கை வரலாறு எழுதுங்கால் எடுத்துக்கொண்ட தலைவனின் ஒழுக்கத்தைப்பற்றிய ஆராய்ச்சியுரையையும் அமைத்தல் வேண்டும். நிகழ்ச்சிகள், கதைகள் போன்றவற்றிலிருந்து அறியப்படும் நீதிகள் புலப்படுத்தப்படுதல் வேண்டும்.

தில்லைத் திருவாதிரை விழா

குறிப்புக்கள்: (1) முன்னுரை, (2) பொன்னம்பலம், (3) திருவிழா, (4) முடிவுரை.

கட்டுரை

முன்னுரை:

உழைத்து ஓய்ந்த உள்ளம் களிப்பெய்துதற்காகவும், மக்கள் மறத்தை மறந்து அறத்தைப் பெருக்குவதற்காகவும் இறை வழிபாடு இன்றியமையாதது. ஆதலால், ஒவ்வோர் ஊரிலும் திருவிழா கொண்டாடப்படுகின்றது. ஈண்டுத் தில்லையில் எழுந்தருளியுள்ள அம்பலவாணன் அடியவர்க்கருளும் பெருவிழாவாம் திருவாதிரை விழாவினைப் பற்றிச் சிறிது நோக்குவோமாக.

பொன்னம்பலம்:

குமரிமுதல் இமயம்வரை உள்ள சைவமக்கள் எல்லார்க்கும் சிறந்து விளங்குவது தில்லையம்பதியாகும். இது கொள்ளிடத்திற்கு வடபால் அமைந்துள்ளது. சோழ மன்னரால் அம்பலத்தின் கூரை பொன் வேயப்பட்டமையால், இது பொன்னம்பலம்

எனப்படும். அம்பலத்தே எழுந்தருளியிருப்பதால் இறைவன் அம்பலவாணன் எனப்பட்டான்; நடன மாடிக்கொண்டிருப்பதால் நடராசன் எனப்பட்டான்.

திருவிழா:

கோயிலில் நிகழும் திருவிழா இரண்டு: அவை ஆனித் திருமஞ்சனம், மார்கழித் திருவாதிரை என்பனவாம். இவற்றுள் திருவாதிரை விழாவே மிக்க புகழ்பெற்றது. குமரிமுதல் இமயம்வரை உள்ள மக்களை ஒன்றுதிரட்டுவது. மார்கழித் திங்களில் திருவாதிரைமீன் முழுமதியோடு சேருங்காலத்து அம்பலவாணன் அடியார்க்குக் காட்சி தருகுவன். இதுவே திருவாதிரைத் தரிசனம் என அழைக்கப்படுவது. இவ்விழா பத்து நாள் நடைபெறும்.

ஐந்தாம் நாள் தெருவடைத்தான் காட்சி மிக மிக அருமையான காட்சியாகும். மிக அகன்ற தேரோடும் திருவீதியை அடைத்துக்கொண்டு விமானம் செல்லும். விநாயகன், உமாதேவி, இறைவன், முருகன், சண்டீசன் ஆகிய ஐந்து மூர்த்திகளும், இணைக்கப்பட்ட தனித்தனி விமானங்களில் உலா வருவதும், விமானத்திற்கு மேலுள்ள தட்டியும் கண்கொள்ளாக் காட்சியாகும். பனை, தென்னைக் குருத்துக்களாலும், வண்ணத் தாள்களாலும் கத்தரிப்பு வேலைகள் செய்யப்பட்டு விளங்கும் தட்டியிலுள்ள பளபளக்கும் சித்திரங்களை நாளெல்லாம் கண்டாலும் காட்சிப் பசி தீராது. இவ்வரிய சித்திரக்கலை சோணாட்டுக்கே உரிய தனிச் சிறப்புடையது; வேறு நாடுகளில் இத்தகைய வேலைப்பாட்டினைக் காண இயலாது.

ஏழாம்நாள் இறைவன் ஒப்பனை அழகும், வாண வேடிக்கை, இசையரங்கு, நடனக்காட்சி ஆகியவற்றின் சிறப்பும் காண இருகண்கள் போதா. அன்று நகரமக்களின் நெரிசல் சொல்லுந் தரத்த தன்று.

எட்டாம் நாள் இறைவன் பிறந்த மேனியுடன் பிச்சையெடுக்கும் கோலத்தோடு, பொன்னும் மணியும் மின்னத் தங்கத் தேரில் உலாவருங் காட்சி, கண்டார் உளத்தைத் தன்பால் நிலைக்கச் செய்யுந் தகையது ; இறைவனது முகப் பொலிவும், கோலப் பொலிவும் நாத்திகரையும் வசப்படுத்துமெனில் அது மிகையாகாது.

இத்துணை நாளும் காட்சியளித்தவன் சந்திர சேகரன். ஒன்பதாம் நாள்தான் உலகம் உய்யப் பொன்னம்பலத்தே எழுந்தருளியுள்ள,

“ இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப்பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே ”

என்று உத்தமராம் நாவுக்கரசால் உளம் குழைந்து ஓதப்பெற்ற அம்பலவாணன், திருத்தேரின்மேல் திருவீதிக்கண் உலாவருவான். அன்று நகர் முழுதும் ஒரே மக்கள் கடலாக விளங்கும். பலப்பல ஊரிகளிலிருந்தும் வந்த பல்வேறு கடைகளின் பெருக்கமும், பலப்பல நாடுகளிலிருந்து வந்த பல்வேறு மொழி பேசும் மக்களின் கூட்டமும் சேர்ந்து முன்பு வெற்றெனத் தோன்றிய நகரைப் பெருஞ் சிறப்புறுத்தும்.

பத்தாம் நாள்தான் திருவாதிரைத் திருநாள் இறைவன் அம்பலவாணனும், அம்மை சிவகாமியும் ஆயிரக்கால் மண்டபத்தில்திருமஞ்சனமும், அலங்காரமும், ஆராதனையும் முடிக்கப்பெற்று முழுமதியும் திருவாதிரையும் கூடும் நேரத்தில் அன்பர்கட்

குக் காட்சி தந்துகொண்டே நடனக் கோலத்தில் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து புறப்பட்டுப் பொன்னம்பலத்திற்குள் புகுந்துவிடுவர். பத்து நாள் காட்சியிலும் இக்காட்சிதான் மிக முக்கிய மானது. ஆனல் அன்றுதான் இறைவன் திருவுரு வத்தை உளம் நிரம்பக் கண்ணுரக் காண முடிவ தில்லை; மக்கள் நெரிசலே அதற்குக் காரணமாகும். அப்பப்ப! அன்று மக்கட் கூட்டத்தினர், மண்ட பங்களின் மேலும், மதில்களின் மேலும், மரங் களின் மேலும், கோபுரங்களின் மேலும் காணப் படுவர்; கூட்டத்தால் நசுக்கப்படாமலிருப்பதற்கே அவ்வாறு செய்வர். கீழே உள்ளவரோ மிதிபட்டுப் புடைபட்டு நெரிபட்டு, வியர்வை கொட்டி, நாவரண்டு, மூச்சுத் திணறிப் படும் அவதி இயம்ப வொண்ணுதது. கள்ளர் திறமும் இப்போதுதான் காணப்படும்; ஆண்டவன் அருள்பெற வேண்டிய இடத்தில் மருள் நிரம்பிய மனமுடையாரால் அன் பர்க் குண்டாம் அவதி ஒருபுறம்; குழந்தைகளைத் தவறிவிட்டு அலைவார் அவதி ஒருபுறம்; நண்பரை, சுற்றத்தாரைக் காணுமல் தேடிச் சேர்வார் ஒரு புறம்; இவ்வாருக ஆண்டவன் அருட்காட்சி கண்ட பின்னர், அம்மாபெருங் கோயில் முழுதும் நிரம்பி வழிந்த மக்கள் வெளிவருங்காலும் நெருக்கப் படுவர்.

முடிவுரை :

எத்துணை நூறுகல் பயணம் செய்தேனும், எத்துணைத் தொல்லைக்குள்ளாகியேனும் அம்பல வாணன் அருட்காட்சி காணப்பெற்ருல் அத் தொல்லைகள் ஒரு தொல்லையாகப் படா.

அவன் திருவடி காணலே பிறவிப்பயனுகும்.

4. வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரைகள்

வருணிக்காமல், விளக்கிக் கூறுமல், கதை கூறுதல், ஒருவர் வாழ்க்கையைப்பற்றிக் கூறுதல், நிகழ்ச்சிகளைக் கூறுதல் முதலியன வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரைகளாம். ஒரு பொருளின் வாழ்க்கையைப்பற்றிக் கூறப்படுதலால், அது வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை எனப்பட்டது.

இங்குத் தரப்பட்டுள்ள மாதிரிக் கட்டுரையைக் கவனிக்க. இதுபோன்ற கட்டுரைகளை வரைந்து பயன் பெறுக.

காந்தியடிகள் வரலாறு

குறிப்புக்கள் :

(1) காந்தியடிகளின் இளமை, (2) காந்தியடிகளின் கல்விப் பருவம், (3) அவரது உத்தியோகப் பருவம், (4) அவரது அரசியல் தொண்டு, (6) அவர் குண நலன்கள்.

கட்டுரை

1. காந்தியடிகள் 'கத்தியவார்' பகுதியில் உள்ள போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தாயார் புத்தளிபாய் அம்மையார் ஆவர். தந்தையாராகிய காபா காந்தி ராஜ்கோட் நாட்டின் திவானுக இருந்தார். அவர் பெற்ருேர் சிறந்த ஒழுக்கமுடையவர் ; வைதிக நெறியினர். காந்தியார் அவர்களிடமிருந்து நல்ல பழக்கங்களை இளமையிலேயே பெற்று விளங்கினுர் ; தாயாருடன் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டார் ; நோன்புகள்—விரதங்கள் இவற்றின் விவரங்களை அறிந்தார்.

2. அவர் பள்ளிப் பருவத்தின் முதலில் தீய பிள்ளைகளுடன் பழகிப் புகை பிடித்தல், ஊன் உண்ணுதல் என்னும் தம் குலப் பழக்கத்திற்கு மாருன துறைகளில் இறங்கினுர். ஆனுல், சில நாட்களில் தாமே அறிவுபெற்று அவற்றை விட்டொழித்தார்; அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்து உள்ளம் உருகிப் 'பொய் சொல்லலாகாது' என்பதை விரதமாகக் கொண்டார். அவர் மேற்படிப்புக்கு இங்கிலாந்து சென்ருர்; தாயாருக்கு வாக்குக் கொடுத்தபடி அங்குப் புலால் உண்ணவில்லை; மது அருந்தவில்லை; தீய செயல்களில் ஈடுபடவில்லை. அவர் தம் படிப்பிற் கண்ணும் கருத்துமா யிருந்து பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியா மீண்டார்.

3. காந்தியார் பம்பாயில் பாரிஸ்டர் வேலை பார்க்கலானுர்; பின்னர் தென்னுப்பிரிக்காவில் அதே வேலை பார்க்கச் சென்ருர். அங்கு இந்தியர் சிறுமைப்பட்டதைக் கண்டு மனம் நொந்தார்; அவர்களை உணர்ச்சி கொள்ளச் செய்தார். அவர்கட்குத் தலைவராகித் தென்னுப்பிரிக்க அரசாங்கத்தாருடன் நியாயமான முறையில் போராடிச் சிறை சென்ருர். அவருடைய நல்ல ஒழுக்கங்களைப் பாராட்டிய அரசாங்கத்தார் அவரை மதித்தனர்; இந்தியர்க்குச் சில வசதிகளை அளித்தனர். காந்தியார் எளிய வாழ்க்கை வாழப் பழகினுர்; தம்மைப் பின்பற்றியவரையும் அத்துறையிற் பழக்கினுர்.

4. காந்தியார் பின்னர் இந்தியா மீண்டார்; இந்திய அரசியல் உரிமைக்குப் பாடுபட்டுவந்த காங்கிரசுக்கட்சியில் 1916இல் சேர்ந்தார்; இன்னு செய்யாமை (அகிம்சை), ஒத்துழையா இயக்கம், வெளிநாட்டுப் பொருட்கடைகளின் முன் மறியல்,

உப்பெடுக்கும் உரிமைபெறப் போராட்டம் முதலிய பல துறைகளில் போராடினர். அவரது எளிய வாழ்க்கை-தன்னலமற்ற தொண்டு-உயரிய குணங்கள் இவற்றில் ஈடுபட்ட இந்திய மக்கள் அவரைத் தலைவராக ஏற்றனர்; அவர் தொடங்கிய போராட்டங்களில் எல்லாம் மனமாரக் கலந்துகொண்டனர்; அரசாங்கத்தாருடைய பலவகைத் துன்பங்கட்கு ஆளாயினர். காந்தியார் ஆங்கில அரசாங்கத்தாருடன் போர்க்காலங்களில் ஒத்துழைத்தார்; போர் இல்லாத காலங்களில் அவர்களை நயமான முறைகளில் பணியவைத்தார்; இந்து—முஸ்லிம் ஒற்றுமை, தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றம் முதலியவை வெற்றிபெற 'உண்ணு நோன்'பினை மேற்கொண்டார். போர்க்கருவிகள் இல்லாமலேயே, போர்க்கருவிகளையுடைய வலிபொருந்திய ஆங்கில அரசாங்கத்தை நடுங்க வைத்தார்; இறுதியில் ஆட்சி உரிமையை ஆங்கிலேயரிடமிருந்து பெற்றார்; அவரது தலைமை இல்லாவிடில் இந்தியா இவ்வளவு விரைவில் ஆட்சி உரிமை பெற்றிருத்தல் இயலாது.

5. காந்தியடிகள் பொய் சொல்லாதவர்! தாம் செய்த குற்றங்களை ஒப்புக்கொள்ளும் பெருந்தன்மை வாய்ந்தவர்; எந்தக் காரியத்தில் இறங்கு முன்பும் தம் அகச்சான்றைக் கேட்டுச் செய்யும் பழக்கமுடையவர். அவர் இந்திய மக்களிடம் வேரூன்றியுள்ள சாதி வேறுபாடுகளை ஒழிக்கப் பாடுபட்டார்; தாழ்த்தப்பட்டோரை மேனிலைக்குக் கொண்டுவர முயன்றார். அவரது உழைப்பால்தான் தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவு பெற்றனர். கல்வி—கைத்தொழில்—சமூகம்—இவற்றில் ஓரளவு வளர்ச்சி பெற்றனர்; இன்றும் பெற்று வருகின்றனர்.

இந்து—முஸ்லிம்களை அவர் தம் இரு கண்கள் எனக் கருதினர்; அவர்கள் ஒற்றுமைக்காக இறக்கும்வரை பாடுபட்டார்; உண்ணு நோன்புகளை மேற்கொண்டார்; கிராமக் கைத்தொழில்கள் வளரப் பாடுபட்டார்; சிறப்பாக நெசவுத் தொழிலை வளர்த்தார். சுருங்கக் கூறின், காந்தியார் சிறந்த ஒழுக்கமுடையவர்; அரசியலறிஞர்; சீர்திருத்தக்காரர். 'இந்த மூன்று பண்புகளையும் ஒருங்கே பெற்ற பெரியவர் உலகில் வேறெவரும் இதுவரை தோன்றியதில்லை' என்று அறிஞர் கூறுகின்றனர்.

5. நடைமுறைச் சமுதாய இயல்

கட்டுரை

சமுதாய வாழ்வுக்குத் தேவையான பொருள்கள் யாவை? சமுதாய ஒற்றுமையைப் பலப்படுத்தத் தக்கவை யாவும் சமுதாய வாழ்வுத் தொடர்பானவையே. அவை தீண்டாமை, பெண்ணடிமை, சாதிப் பாகுபாடு, சமயப் பிணக்கு, மக்களின் ஏழ்மை போன்ற குறைகளை எடுத்துக் காட்டி அவற்றை ஒழிக்கப் பாடுபடுதல் சமுதாய இயல் பகுதியாகும். இளமை மண ஒழிப்பு, கைம்மை மண வளர்ப்பு, சமத்துவம், உடன்பிறப்பு நோக்கம் முதலியனவும் சமுதாய இயற்பகுதிகள் ஆகும். எனவே, சமுதாய இயற்பகுதிகள்பற்றி எழுதப்படும் கட்டுரைகள் எல்லாம் சமுதாய இயல் கட்டுரைகள் எனப்படும்.

நமது சமுதாய நலனுக்காகத் தேவைப்படும் வேலைகளைப்பற்றி இராஜா-ராம்மோகனர், ஈசுவர சந்திர வித்தியாசாகரர், கோபால கிருஷ்ண

கோகலே, பிரபுல்ல சந்திரராய், விவேகானந்த அடிகள், காந்தியடிகள், இராமலிங்க அடிகள் போன்ற பெருமக்கள் பலரும் எழுதியும் பேசியும் பாடியும் வந்துள்ளனர். அவர்களுடைய நல்லுரைகள் யாவும் பல நூல்களில் வந்துள்ளன. நீங்கள் அவற்றைப் படித்துக் குறிப்புக்களைத் திரட்டிக் கட்டுரைகள் வரையப் பழகவேண்டும். 'இந்தியச் சமூகம்' என்னும் தலைப்பில் இரவீந்திர நாத தாகூர் செய்த சொற்பொழிவு, இங்குக் கட்டுரையாகத் தரப்படுகின்றது. படித்து இது போன்ற கட்டுரைகள் எழுதப் பழகுக.

இந்தியச் சமூகம்

குறிப்புக்கள் :

(1) சமூகச் சீர்திருத்தம், (2) சமூகக் களைகள், (3) இந்துமதக் குறைபாடுகள், (4) சாதி வேற்றுமை, (5) ஒற்றுமையற்ற நிலைமை, (6) ஒற்றுமைக்கு வழி, (7) சமூக உரிமை, (8) முடிவுரை.

கட்டுரை

1. ***சமூகம்*** என்பது மக்கள் தொகுதியும் அதன் வலிமையுமே யாகும். மக்கள் தொகுதி ஒற்றுமையுடன் இருந்தால்தான் அது வலிமையுள்ள சமூகம் எனப்படும். மக்கள் ஒற்றுமையற்றுக் கண்டவாறு சிதறி இருப்பின், அவர் தொகுதி வலிமையுள்ள சமூகமாகக் கருதப்படாது. இந்திய மக்கள் தொகை முப்பத்தெட்டுக் கோடி என்னலாம். ஆயினும், ஏன் அது வலிமையுள்ள சமூகமாக இல்லை. அது தன்னைப் பல்வேறு சமயங்களால்—குலங்களால், உயர்வு தாழ்வுகளால் சின்ன

பின்னப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியா, உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தைக் கொண்டது; மிகப் பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. ஆயினும் அஃது ஒற்றுமையற்ற மக்களைக் கொண்டுள்ளது. அதன் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர் அதன் ஒற்றுமைக்கு வழிதேடல் வேண்டும். இந்தியாவுக்கு இப்போது வேண்டப்படுவது சமூகச் சீர்திருத்தமே; பின்னரே அரசியல் சீர்திருத்தம் வேண்டுவது. முன்னது வலுப்பெருமல், பின்னது பெறினும் பயனில்லை; நிலையாகவும் இருக்காது. ஒற்றுமையற்ற, ஏற்றத் தாழ்வுள்ள, பல்வேறுபட்ட மனநிலையுடைய மக்களிடம் அரசியல் உரிமை வழங்கித்தான் பயன் என்னை?

2. பழைய காலத்தில் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரோடு பழகப் பிரயாண வசதிகள் மிகுதியாக இல்லை. ஆதலின், அவர்கள் தம் நாட்டிற்குள்ளேயே ஒன்றுபட்டுக் கலந்து வாழ்ந்தனர்; தமக்கு உரிய கலைகள், நாகரிகம் முதலியவற்றை வளர்த்துத் தம்மையும் உயர்த்தி வந்தனர். ஆனால் இக்காலத்திலோ எனின், பற்பல நாட்டார் ஒன்று சேரவும், கூடிவாழவும், உறவுகொள்ளவும், பொருள்களையும் பிறவற்றையும் மாற்றிக்கொள்ளவும் வசதிகள் அமைந்துள்ளன. எனினும் பயன் என்? மனிதர் நெருங்கிப் பழகப்பழக வெறுப்பும், மனக்கசப்பும், ஐயமும், பழிவாங்கும் உணர்ச்சியும், வேறுபாடும் வளர்கின்றனவே அன்றி, ஆன்மநேய ஒருமைப்பாடு வளர்தல் இல்லை. இந்நிலை நீடித்து வருதலால் தான்—ஆன்ம உணர்ச்சி அற்றதால்தான்—நாகரிகச் சமூகங்கள் சீர்கெட்டு வருகின்றன; இந்தியச்

சமூகமும் இழிநிலையை அடைந்து வருகின்றது. இந்தியர்களுள் மொழி உணர்ச்சி, மாகாண உணர்ச்சி, பிறவியைப்பற்றிய உணர்ச்சி, உள்ள வன்—இல்லவன் என்னும் உணர்ச்சி முதலிய பலதிறப்பட்ட உணர்ச்சிகள் வேரூன்றியுள்ளன. அவை சமூகக் களைகள் ஆகும். அக்களைகள் முதற்கண் நீக்கப்படல் வேண்டும். இந்தியர் மன மாகிய வயலில் ஒற்றுமை என்னும் பயிர் வளர வேண்டுமாயின், 'வேறுபாடுகள்' என்னும் களையை முதலில் அகற்றுதல் வேண்டும். அது கல்லி எடுக்கப்படும் நாளே, 'இந்தியச் சமூகம் தலை நிமிரக்கூடும்' என்னும் நம்பிக்கை கொள்ள இடந்தரும் நன்னாள் ஆகும்.

3. இந்தியாவில் உள்ள மதங்களுள் பெரியது **இந்து மதம்**. அது பல நாட்டு மக்களின் கொள்கைகளைக் கொண்டுள்ளது; பல மதத்தார் பழக்க வழக்கங்களைப் பெற்றுள்ளது; ஒரு தெய்வ வணக்கம் முதல் பல தெய்வ வணக்கம் ஈறாகக் கொண்டிருப்பது; உள்ளத்தில் பிரார்த்தனை புரிதல் முதல் உயிர்க்கொலை ஈறாகவுள்ள வழிபாட்டு முறைகளைக் கொண்டிருப்பது. இம்மதம் முதலில் சாதிகள் அற்றது; பின்னர் இதில் அசைக்க முடியாத சாதிகள் நிலைபெற்றுவிட்டன. இச்சாதி முறையால் இந்து மதம், 'எல்லா உயிர்கட்கும் பிறப்பு ஒன்றே என்னும் உண்மைத் தத்துவத்தை இழந்துவிட்டது. பெரும் பகுதியினரைத் 'தீண்டத் தகாதவர்' என முடிவுசெய்து ஒதுக்கிவிட்டது. இக்கேடான முடிவு ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக இருந்துவருகிறது என்னலாம். சுமார் எட்டுக் கோடி மக்கள் தீண்டத் தகாதவர் எனப்பட்டு, பிறர்க்குரிய வசதி

கள் மறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டுத் துன்புறுத்தப் படுகின்றனர். இவ்விழி நிலைமை இப்பொழுது தான் சிறிது சிறிதாக மாறி வருகின்றது. இவ்விழி நிலைமை ஒன்றே இந்து மதத்திற்குப் பெருங் களங்கம் எனலாம்.

4. இந்துமதம் இக்களங்கத்தை உண்டாக்கிய தோடு சமூகத்தில் பல்வேறு சாதிகளையும் உண் டாக்கி விட்டது; 'ஒருவரை ஒருவர் பார்த்தல் ஆகாது; தொடுதல் ஆகாது; ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளலாகாது' என்றெல்லாம் வரம்பு கள் உண்டாக்கியது. இவை எல்லாம் அவ்வக்கால மனிதர் திருவிளையாடல்களாக இருப்பினும், இந்து மதத்தின் பெயராலே செய்யப்பட்டன. இக்கேடான பழக்க வழக்கங்களை உடையவர் 'இந்துக்கள்' என்றே இன்றுவரை கூறப்பட்டு வருகின்றனர். இந்துமதம் பிரிவுகளை உண்டாக்கியதே தவிர, மன ஒற்றுமையை உண்டாக்கத் தவறியது. உயர்வு தாழ்வுகள் உள்ள இடத்தில் மன ஒற்றுமை எப்படி உண்டாகும்? மன ஒற்றுமையே சமூகத்தை முன் னேற்றும் கருவியாகும். இவ்வுண்மையை இந்து மதம் அறவே மறந்துவிட்டது. ஒரே மாகாண மக்கள், ஒரே மொழியைப் பேசும் மக்கள், இச் செயற்கைச் சாதிகளால் தமக்குள் ஒற்றுமை அற்றுத் தவிக்கின்றனர்; மனக்கசப்பு, பொறுமை, ஐயங்கொளல் இவையே இன்றைய இந்திய மக்கள் உள்ளங்களில் குடிகொண்டுள்ளன. மன ஒற்றுமை இருக்க வேண்டிய இடத்தில் மன வேற்றுமையே தனியரசு செலுத்துகின்றது. சுருங்கக் கூறின், இச்சாதிகளால் இந்துமதச் சமூகம் தன் உயிர் நாடியை இழந்துவிட்டது. சாதிப் பூசல்களால்

தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 'இன்ன தொழிலை இன்னவரே செய்தல் வேண்டும்' என்னும் பழங்காலக் கோட்பாடு இன்னும் இந்நாட்டில் இருந்துகொண்டு தொழில்களை நாசமாக்கி வருகிறது. இதனால் தொழிலின் மேன்மை அறியப்படாது கீழ் நிலைமைக்குக் கொண்டு போகப்படுகிறது. 'திறமை' என்பது இயல்பானதேயன்றி ஒரு குலத்துக்கு உரியதன்று. ஆனால் இங்குத் 'திறமை' என்பது 'பரம்பரைக்கு உரியது' என்னும் நிலைமைக்குத் தாழ்ந்துவிட்டது.

5. ஒருநாட்டு மக்கள், இச்சாதிப் பிரிவுகளால் நீண்ட காலமாக வேறுபட்ட சமூகத்தினர் போல ஒதுங்கி வாழ்வதால், அவ்வச் சாதிப் பழக்க வழக்கங்கள் மாறுபட்டவை ஆகின்றன. இம்மாறுபாடுகள் நிலைத்துவிட்ட பிறகு இவை ஒன்று கூடல் இயலவில்லை; ஒற்றுமை உண்டாதலும் அரிதாகத் தோன்றுகிறது. இந்து மதத்தார் ஒருவரை ஒருவர் வேறுபட்டவராகக் கருதுகின்றனர். இக்குழப்ப நிலைமையால், மன ஒற்றுமையும் ஆன்ம வுணர்ச்சியும் அற்றுவிடுகின்றன. ஒருவரை ஒருவர் ஐயுறுகின்றனர். ஒற்றுமை அற்ற இடத்தில் 'சமூக ஒற்றுமை'யை எதிர்பார்த்தல் இயலாது.

6. சமூகம் பலம் பொருந்தியதாதல் வேண்டுமாயின், மக்களின் உணர்ச்சி, பேச்சு, செயல் இவையாவும் ஒன்றுபட்டனவாக இருத்தல் வேண்டும். அந்நிலையிற்றான் சமூகம் வலிவுடையதாகும். அப்பொழுதுதான் அச்சமூகம் உயரிய நோக்கங்களைக் கொண்டு ஒளிரும்; தனது முன்னேற்றத்தைக் கருதி இடைவிடாது உழைக்கும்.

7. இவ்வுயரிய நிலையை இந்தியச் சமூகம்

அடையவேண்டுமாயின் சமய ஒற்றுமை ஏற்படல் வேண்டும்; இந்து மதத்திற்குள் உள்ள சாதி வேறுபாடுகள் அழிதல் வேண்டும்; உயர்வு தாழ்வுகள் ஒழிதல் வேண்டும். மனிதன் மனிதனாக வாழ்தல் வேண்டும். மனிதன் உரிமையற்ற நிலையில் தவிக்கும்போது, மண்ணுக்கு உரிமை தேடல் அறமாகாது; இயற்கைக்கும் மாறாகும். தன்னளவில் உரிமையோடு வாழ வழியற்ற ஒருவன்—சமூக உரிமையற்ற ஒருவன்—நாட்டு உரிமைக்குப் பாடுபடுதல் நகைப்பிற்கிடமன்றோ? எனவே, இந்தியாவிற்கு இப்பொழுது வேண்டப்படுவது சமூக உரிமையேயாகும். மனிதன் மனிதனாக வாழும் உரிமையே முதலில் வேண்டற்பாலது. 'உரிமை' என்பது பிறர் தரத்தக்கது அன்று; கடைச் சரக்கும் அன்று. அஃது ஆன்ம வுணர்ச்சியால் உதயமாவது; உள் உணர்விலிருந்து வெளிப்பட்டு ஒளிர்வது; மனித சமூகத்தைத் தூய்மை யாக்குவது; சுகவாழ்வைத் தருவது. நச்சுக் காற்றுக்களோ, போர்க் கருவிகளோ மெய்யான உரிமையை ஒருபோதும் தாரா. மக்கள் நேரிய வாழ்க்கையை நடத்தத் தொடங்கும் பொழுதே, உரிமை அவர்களிடம் தோற்றமெடுக்கும்.

8. இந்தியச் சமூகம் முன்னேற வேண்டுமாயின், அஃது ஏனைய சமூக நிலைமைகளை நன்கு அறிதல் வேண்டும்; சாதிகள் அற்ற ஒரே மன நிலை கொண்ட ஏனைய சமூகங்களை எண்ணிப் பார்த்தல் வேண்டும்; அவற்றின் குறிக்கோள்களைத் தானும் கைக்கொண்டு, தன்னிடம் நிலைத்துள்ள கேடான வேறுபாடுகளை ஒழித்து ஆன்ம வுணர்ச்சியோடு ஒன்றுபட்டு உழைத்தல் வேண்டும். ஒன்றுபட்ட

இடத்திற்ருன் உண்மை ஞானம் உதயமாகும். இந் நிலைமை விரைவில் வந்து நமது தாய்நாடாகிய இந்தியா ஒரே சமூகமாய் ஒளிருமாக.

6. நடைமுறைப் பொருளியல் கட்டுரை

பொருள் வரும் வழிகள், அவ்வழிகளைப் பெருக்கும் முறைகள், நாணயமாற்று, கூட்டுறவு இயக்கம், கூட்டுறவுச் சங்கம், செல்வ நிலையங்கள் (பாங்குகள்), போக்குவரவுச் சாதனங்கள், அவற்றின் வரவு-செலவுகள், பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிகம் முதலியவை யெல்லாம் 'பொருளாதாரம்' என்னும் பகுதியைச் சேர்ந்தவை. ஆகவே, அவைபற்றிய கட்டுரைகள் பொருளாதாரக் கட்டுரைகள் அல்லது பொருளியல் கட்டுரைகள் எனப் பெயர் பெறும்.

(1) பொருள் நூல், (2) பொருளாதாரம், (3) கிராமப் பொருளாதாரம், (4) இந்தியப் பொருளாதாரம், (5) நாணயமாற்று, (6) கூட்டுறவு இயக்கம், (7) கூட்டுறவுச் சங்கம், (8) செல்வ நிலையங்கள், (9) போக்குவரவுச் சாதனங்கள், (10) போக்குவரவுச்சாதனங்களின்வரவு-செலவுகள், (11)பயிர்த்தொழில் வளர்ச்சி, (12) பெரிய கைத்தொழில் வளர்ச்சி, (13) நடுத்தரக் கைத்தொழில் வளர்ச்சி, (14) குடிசைத்தொழில் வளர்ச்சி, (15) உள்நாட்டு வாணிகம், (16) வெளிநாட்டு வாணிகம், (17) உழவர் கடன் தொல்லை, (18) தோட்டக்கலை, (19) பழத்தோட்டம், (20) கைத்தொழிலுக்குத் தேவைப் படும் பொருள்கள் என்னும் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்ட பல பொருள்களைப் பற்றிய கட்டுரைகள் வரையலாம். இவற்றிற்குரிய

விவரங்கள் உங்கள் பாட நூல்களிலும், பள்ளி நூல் நிலையத்திலுள்ள நூல்களிலும் விரவிக் கிடக்கும். அவற்றைப் படித்துக் குறிப்புக்கள் தொகுத்து வையுங்கள். வேண்டும்போது கட்டுரைகள் எழுத அவை பயன்படும். இங்குள்ள மாதிரிக் கட்டுரையைக் கருத்தூன்றிக் கவனிக்கவும்.

கிராமக் கைத்தொழில்கள்

குறிப்புக்கள்:

(1) பழைய கிராமக் கைத்தொழில்கள், (2) அவற்றை உயிர்ப்பித்தல், (3) புதிய கிராமக் கைத்தொழில்கள், (4) அவற்றைச் செய்யும் வழிகள், (5) முடிவுரை.

கட்டுரை

1. பண்டைக் காலத்தில் நமது நாட்டில் நகரங்கள் சிலவே இருந்தன; கிராமங்களே பல. கிராம வாழ்வே நம் நாட்டு வாழ்வாக இருந்தது. கிராம முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம் என்பதை நன்குணர்ந்த நம் அரசர்கள் கிராம ஆட்சிமுறையை ஏற்படுத்தியிருந்தனர்; கிராமங்களில் பயிர்த்தொழிலையும் கைத்தொழில்களையும் போற்றி வளர்த்தனர். கிராம வருவாய் கிராம மக்கட்குப் போதியதாய் இருந்ததுடன் அரசாங்கத்திற்கும் உதவி வந்தது. பண்டைக் கிராமங்களில் நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றது. மக்கள், கல், மரம், வெண்கலம், வெள்ளி, பொன் முதலியன கொண்டு வேலைப்பாடு மிக்க பொருள்கள் பலவற்றைச் செய்தனர்; பயிர்த் தொழிலுக்குரிய சிறிய கருவிகளைச் செய்தனர். வீடுகட்கு வேண்டிய மட்பாண்டங்களைச் செய்தனர்;

எண்ணெய் ஆட்டினர். சுருங்கக்கூறின், அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை யெல்லாம் செய்துகொண்டனர்.

2. நெசவுத் தொழில் இப்பொழுது நன்கு நடைபெறுவதில்லை. ஆலைத் துணிகள் வந்து குவிகின்றன. அதனால் நெசவுத்துணிகளை வாங்குவோர் தொகை குறைந்து வருகிறது. நெசவாளர் அரைப் பட்டினி கிடக்கின்றனர். ஆலைத் துணிகளின் இறக்குமதியைக் குறைத்து, நெசவுத் துணிகட்கு உரிய இடத்தைத் தந்து, விலையைக் குறைத்து, அவற்றையே மக்கள் வாங்கும்படி அரசாங்கம் செய்யுமாயின், நெசவுத் தொழில் வளர்ச்சி யடையும். நாகரிகம் என்று கருதி உலோகப் பாத்திரங்களைச் சமையல் பாத்திரங்களாகப் பயன் படுத்துதல் தவறு. மட்பாத்திரங்களே சமையலுக்கு ஏற்றவை; உடம்புக்கு ஊறு செய்யாதவை. ஆதலின் அவற்றையே மிகுதியாகப் பயன்படுத்துமாறு மக்களுக்கு உடல்நலத் துறையினர் அறிவுறுத்த வேண்டும். இங்ஙனம் செய்யின் மட்பாண்டத் தொழில் வளர்ச்சியுறும். செங்கல் அறுத்தல், சுண்ணம்பு செய்தல், விளையாட்டுக் கருவிகளைச் செய்தல் முதலிய தொழில்கள் இறந்தொழியாமல் பாதுகாக்கப்படல் வேண்டும்.

3. இப்பொழுது புதிய நாகரிகப் போக்கினால் எழுந்துள்ள புதிய கைத்தொழில்கள் பலவாகும். அரிசியாலை, பஞ்சாலை, சருக்கரை ஆலை, நெருப்புக் குச்சித் தொழிற்சாலை முதலிய தொழிற்சாலைகளில் கிராம மக்கள் சிலருக்கே தொழில் கிடைக்கின்றது. அதனால் காகிதம், எழுதுகோல், கண்ணாடிப் பொருள்கள் முதலியவற்றைச் செய்யும்

சிறிய இயந்திரத் தொழிற்சாலைகளைக் கிராமங்களில் அமைக்கவேண்டும். ஜெர்மனி நாட்டில் இத்தகைய சிறிய தொழில்கள் இலட்சக் கணக்கான கிராம மக்களைக் காத்து வருகின்றன. மேலும் நம் நாட்டுத் தானியங்கள், பழங்கள், கிழங்குகள் முதலியவற்றிலிருந்து நெடுநாள் வைத்து உண்ணத் தக்க உணவுப் பொருள்களை இக்கால அறிவியல் முறையில் தயாரிக்கச் சிறிய தொழிற்சாலைகளை அமைக்கலாம். மிகச் சிறிய கிராமங்களில் தென்னை மரத் தொழில், பனைவெல்லம், கற்கண்டு முதலியன தயாரித்தல் போன்ற சிறிய தொழில்களை வளர்க்கலாம்.

4. இத்தொழில்கட்கெல்லாம் முதற்பணம் தேவை. ஒரு கிராமத்தில் உள்ள செல்வர் பலர் சேர்ந்து முதல் போட்டுக் கூட்டுறவு முறையில் ஒன்று அல்லது இரண்டு தொழிற்சாலைகளை அமைக்கலாம். அரசாங்க உதவியும் ஒத்துழைப்பும் தேவை. கிராமத்தார் ஒத்துழைப்பு இருப்பின் எந்தக் காரியந்தான் செய்ய முடியாது? மனம் இருந்தால் வழி உண்டாகும்.

5. ஒவ்வொரு கிராமத்தாரும் குலம், சமயம் என்னும் வேறுபாடுகளை மறந்து, 'ஓர் ஊரினர், ஒரு தாயீன்ற பிள்ளைகள், அனைவர் முன்னேற்றமும் சேர்ந்ததே கிராம முன்னேற்றம்' என்னும் சிறந்த உண்மைகளை உளங்கொண்டு, ஊக்கத்துடன் வேலை செய்ய முன்வரின், பணம் கிடைக்கும்; அரசாங்க ஒத்துழைப்பும் கிடைக்கும்; கைத்தொழில்கள் வளர்ச்சியடையும்; கிராம வாழ்க்கை உயரும்; கிராம வாழ்க்கை உயரின், நாட்டு வாழ்க்கை நலனெய்தும்.

7. கல்வியியல் கட்டுரை

கல்வியின் இன்றியமையாமை, ஆடவர் கல்வி, பெண் கல்வி, முதியோர் கல்வி, ஆண் - பெண் சேர்ந்து கற்றல், கைத்தொழிற் கல்வி, ஒழுக்கக் கல்வி, சமயக் கல்வி முதலாகக் **கல்வித் தொடர்பான செய்திகள்பற்றிய கட்டுரைகள் 'கல்வியியல் கட்டுரைகள்'** எனப்படும். இதற்கு எடுத்துக்காட்டாகக் 'கல்விச் செல்வம்' என்பதுபற்றிய கட்டுரையைக் காண்க.

கல்விச் செல்வம்

குறிப்புக்கள்:

(1) கல்வியின் தேவைக்குக் காரணம், (2) பலவகைக் கல்வி, (3) கல்விக்கும் செல்வத்துக்கும் உள்ள வேறுபாடு, (4) கற்க வேண்டுவன.

கட்டுரை

1. கல்வி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகும். கல்வி என்பது எழுதவும் படிக்கவும் அறிவது மட்டுமன்று; நம் முன்னோர் வரலாறுகளையும், அவர்தம் அனுபவ மொழிகளையும், உலக அற்புத நிகழ்ச்சிகளையும், பிறவற்றையும் அறியவும் உதவுவதாகும். 'நன்மை இது; தீமை இது' என்பதை அறியவும் கல்வி தேவை. தன் ஒழுங்கு முறைகளை அறிந்து, குற்றமற்ற வாழ்வு நடத்தக் கல்வி இன்றியமையாதது; உணவு, உடை, வாழிடம் இவற்றை நன்னிலையில் வைத்துக்கொள்ளவும் கல்வி தேவையாகும்.

2. இக்காலத்தில் சில ஆண்டுகள் பொதுக் கல்வி கற்பிக்கப்படுகிறது. பின்னர் மருத்துவக்

கல்வி, சட்டக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, பொறியியற் கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, தொழிற் கல்வி முதலாகப் பலதிறப்பட்ட துறைகளில் சிறப்பு முறையிற் கல்வி அளிக்கப்படுகின்றது. மொழிப் புலமைபெற ஒவ்வொரு மொழிக்கெனக் கல்லூரிகள் பலவும் அக்காலத்தில் ஏற்பட்டுள்ளன.

3. 'உலகில் உயிர்வாழ உணவு தேவை. அதற்குச் செல்வப் பொருள் இருந்தால் போதாதா? அரும்பாடுபட்டுக் கற்க வேண்டுவதேன்?' என்று சிலர் நினைக்கலாம். கல்வி, செல்வம் ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை உணரின், அந் நினைப்புத் தவறு என்பது விளங்கும். பணம் முதலிய பொருள்கள் வெந்தழலால் வேகும்; வெள்ளத்தால் அழியும்; அரசர் கைப்பற்ற எண்ணின், எளிதில் பறிமுதல் செய்யப்படும்; பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையும்; கள்வராற் கவரப்படும். செல்வத்திற்குக் கடுமையான காவல் தேவை. இத்தகைய துன்பங்கள் கல்விக்கு இல்லை. கல்வி கட்புலனுக்குப் புலனாகாத நுண்பொருள். ஆதலால் இது நெருப்பால் அழியாது; மேற் சொன்ன வழிகளில் கேடுறாது. அதற்கு மாறாக, பிறர்க்குக் கற்பிக்கக் கற்பிக்க வளரும் இயல்புடையது. செல்வம் தன்னையுடையவனை விட்டு நீங்குதல்போலக் கல்வி நீங்காது. செல்வம் உடையவன், தன் செல்வம் போய்விடின் பொருளீட்ட வழியறியாது துன்புறுவான். ஆனால் கற்றவன் எளியனாக இருப்பினும் ஏற்ற தொழில் செய்து சிறப்பாக வாழ வழிதேடிக்கொள்வான்.

4. கல்வி கரையில்லாதது. ஆனால், நமது வாணாள் குறைந்த அளவையுடையது. ஆதலின்,

நாம் எல்லா நூல்களையும் கற்றல் இயலாது. நமக்கு விருப்பமான நூல்களையே தேர்ந்தெடுத்துப் படித்துப் பயன் எய்த வேண்டும். நாம் செய்ய இருக்கும் தொழிலுக்கேற்ற கல்வி கற்றுத் தொழிலில் அமர்ந்த பின்னர்ச் சமயக் கல்வியை நன்கு பயிலல் வேண்டும்; பயின்று, காலநிலைக்கு ஏற்ற சமய உணர்ச்சி பெற்றுவாழ அறிந்துகொள்ள வேண்டும்.

கட்டுரைப் பயிற்சி

1. நீ கண்ட ஓர் ஊர், ஓர் ஆறு, ஓர் ஏரி, ஒரு நகரம், ஒரு மலை, ஒரு கைத்தொழில், நீ செய்த ஒரு பிரயாணம், நீ கண்ட கடற்கரை, முழுமதி இரவு, நிலா அற்ற இரவு—இவற்றைப்பற்றி வருணனைக் கட்டுரை எழுதிப் பழகுக.

2. பெருந்தன்மை, அடக்கமுடைமை, முயற்சி திருவினையாக்கும், பொய்யாமை, மலையும் அதன் பயன்களும், காடுகளும் அவற்றின் பயன்களும்—இவற்றைப்பற்றி விளக்கக் கட்டுரை எழுதிப் பழகுக.

3. (அ) நாட்டுத் தலைவர் வரலாறு (பொது வாழ்க்கை பற்றி): அண்ணல் காந்தியடிகள், சுபாஷ் சந்திரபோஸ், வ. உ. சிதம்பரம் பிள்ளை, பாரதியார், மறைமலையடிகள், திரு. வி. கலியாணசுந்தரனார், விவேகானந்தர்போன்றோர்.

(ஆ) வாழ்க்கை வரலாறு (சொந்த வாழ்க்கை பற்றி): பாபர், ஷாஜஹான், புகழேந்தி, அந்தகக்கவி வீரராகவமுதலியார்போன்றோர்.

(இ) நிகழ்ச்சி: பொதுக்கூட்டம், திருமணம், திருவிழா, வண்டிகள் மோதல் போன்றவை.

(ஈ) இயற்கையின் எதிர்ப்பு: இடியோடு கூடிய பெருமழை, வெள்ளச் சேதம், நெருப்புச் சேதம், கடல் கொந்தளிப்பு, நிலநடுக்கம் போன்றவை.

(உ) தரை, கடல், வான்வழிப் பயணம்: (பயணக் கட்டுரை உண்மையாகவோ கற்பனையாகவோ இருக்கலாம்.)—இவற்றைப்பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

4. நீ பார்த்த ஒரு விழா, தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், இரம்சான் போன்ற பண்டிகைகளின் நிகழ்ச்சி, உன் பிரயாண நிகழ்ச்சி, ஜவஹர் போன்ற நாட்டுத் தலைவர் வரலாறு, பழந்தமிழ்ப் புலவர் வரலாறு, ஆராய்ச்சியாளரைப் பற்றிய வரலாறு—இவற்றைப்பற்றி வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை எழுதிப் பழகுக.

5. தீண்டாமை, பெண்ணடிமை, சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, சமூகச் சீர்திருத்தம்—இவற்றைப்பற்றிச் சமுதாய இயல் கட்டுரை எழுதிப் பழகுக.

6. கூட்டுறவு இயக்கம், கூட்டுறவுச் சங்கம், கூட்டுப் பால்பண்ணைத் தொழில், செல்வ நிலையங்கள், கிராமக் கைத் தொழில்கள், பயிர்த்தொழில் வளர்ச்சி—இவற்றைப்பற்றிச் சமுதாயப் பொருளியல் கட்டுரை எழுதிப் பழகுக.

7. பெண் கல்வி, முதியோர் கல்வி, தொடக்கக் கல்வி, தொழிற் கல்வி—இவற்றைப்பற்றிச் சமுதாயக் கல்வியியல் கட்டுரை எழுதிப் பழகுக.

8. இளைஞர் செயல் முறைகளும் இயக்கங்களும்பற்றிய கட்டுரை

மாணவர் தொடர்புகொண்ட சாரணர் இயக்கம், குருளையர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்க இயக்கம், குடிமைப் பயிற்சி இயக்கம், மாணவர் இலக்கியக் கழகங்கள், மாணவர் உடற்பயிற்சிக் கழகங்கள், சொற்பயிற்சிக் கழகங்கள், இளைஞர் படைக்கலப் பயிற்சி இயக்கம் (National Junior Cadet Corps) முதலியன இளைஞர் இயக்கங்கள் ஆகும். இக்கழகங்களின் வாயிலாக மாணவர் சிறந்த ஆக்க வேலைகளைச் செய்யலாம். மாணவர் இக்கழகங்களின் வாயிலாகப் பிறர்க்குப் பொது உதவிகள் செய்தல், கல்வித் தொண்டு புரிதல், ஆபத்தில் உதவிபுரிதல் முதலியனவும், மாணவர் தாமே உடற்பயிற்சி பெறுதல், போட்டிப் பேச்சு

களில் அறிவு வளர்ச்சி பெறுதல் முதலியனவும் செய்தலே, ஆக்க வேலைகள் ஆகும். மாணவர் தம் கழகச் சார்பில் பல ஊர்கட்குச் சென்று அறியத் தகுவனவற்றை அறிதல், சேரிகளிற் புகுந்து தொண்டுசெய்தல், நகரமக்களின் உடல் நலத்தைக் கவனித்தல், மக்கள் கணக்கெடுப்பில் அரசாங்கத் தாருடன் சேர்ந்து உதவிபுரிதல் முதலியனவும் ஆக்க வேலைகளே ஆகும். இத்தகைய ஆக்க வேலைகள் வலுப்பெற வேண்டுமாயின் இளைஞர் இயக்கங்கள் நன்கு வளரவேண்டும். அவை வளர வேண்டுமாயின் மாணவர் சாதிமத வேறுபாடுக ளின்றித் தம் வளர்ச்சியிலும், பொதுநல வளர்ச்சி யிலுமே கருத்தைச் செலுத்தவேண்டும். 'எல் லோரும் ஓரினம்' என்னும் எண்ணம் உள்ளத்தில் ஊன்றவேண்டும்; கனவிலும் சாதிமத வேறுபாடு கள் பற்றிய நினைவுகள் தோன்றலாகாது. அத் தகைய தூய நிலையால்தான் இயக்கங்கள் வளரும்; அவற்றின் வாயிலாக ஆக்க வேலைகள் வளர்ச்சி பெறும்.

மேற்சொன்ன இளைஞர் இயக்கங்களைப்பற்றிய கட்டுரைகள் 'இளைஞர் இயக்கம்பற்றிய கட்டுரை கள்' எனப்படும். இளைஞர் ஆக்க வேலைபற்றி மட்டும் குறிப்பிடும் கட்டுரைகள், 'இளைஞர் ஆக்க வேலைபற்றிய கட்டுரைகள்' எனப் பெயர் பெறும். இளைஞர் இயக்கங்கள்பற்றிய பாடல்களைக் கொண்ட நூல்கள் உங்கள் பாட நூல் நிலையத்தில் இருக்கும். உங்கள் பாட நூல் களிலும் சில பாடங்கள் அவைபற்றி இருக்க லாம். அவற்றைப் படித்துக் குறிப்புக்களைச் சேர்த்து வையுங்கள். மேனுடுகளில் உள்ள இளை

ஞர் இயக்கங்கள், அவை செய்யும் ஆக்கவேலைகள் பற்றிய நூல்களையும் படித்துக் குறிப்புக்கள் எடுங்கள். இவ்விருவகைக் குறிப்புக்களும் உங்கட்கு மிகுந்த உதவிசெய்யும். இவைகொண்டு வரையப் படும் கட்டுரைகள் பொருள் சிறந்த கட்டுரைகளாக விளங்கும். இங்குத் தரப்பட்டுள்ள மாதிரிக் கட்டுரையைக் கவனியுங்கள். இக்கட்டுரை எட்டாம் வகுப்பு மாணவன் நக்கீரனால் எழுதப்பட்டது.

எங்கள் ‘இளைஞர் கழகம்’

குறிப்புக்கள்:

(1) கழக நோக்கங்கள், (2) எங்கள் ஆக்க வேலைகள், (3) முடிவுரை.

கட்டுரை

1. எங்கள் கழகம் 8, 9, 10ஆம் வகுப்பு மாணவரைக் கொண்டது. எங்கள் கழகத்தில் அறுபதின்மர் உறுப்பினராக உள்ளனர். குலசமயவேறுபாடுகளை மறந்து மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும் என்பது எங்கள் கொள்கை. சமூகத்தில் தாழ்த்தப்பட்டுக் கீழ்நிலையில் இருப்பவர்க்குக் கல்வி கற்பித்தலும், உடல் நலவழி கற்பித்தலும், விழாக் காலங்களில் பொதுமக்கட்கு எங்களால் ஆகும் உதவி புரிதலும், அம்மை குத்துதல், மக்கள் தொகைக் கணக்கெடுத்தல் முதலிய வேலைகளில் நகராண்மைக் கழக அலுவலர்க்கு உதவி புரிதலும், ஒவ்வொருவரும் சிறந்த பேச்சாளராதலும் எங்கள் நோக்கமாகும்.

2. எங்கள் கழகம் தொடங்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. நாங்கள் நாள்தோறும் கழகக் கட்டடத்திற் கூடி உடற்பயிற்சி செய்கின்றோம்; செய்தித்

தாள்களைப் படித்து, அறிவை வளர்க்கிறோம்; பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பேசும் பயிற்சியும் பெற்று வருகின்றோம். நாங்கள் ஆறு பிரிவினராகப் பிரிந்து, ஆறு சேரிகளில் தொண்டு செய்கின்றோம். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை நேரங்களில் சேரி மக்களை ஒன்றுகூட்டி உலகச் செய்திகளைத் தெரிவிக்கிறோம்; சிறிய பள்ளியைத் துவக்கிச் சிறுவர் சிறுமியர்க்குக் கல்வி கற்பிக்கின்றோம்; பொதுமக்களிடம் பணம் திரட்டிச் சேரியின் நடுவில் பெரிய கிணறு ஒன்று வெட்டுவித்தோம். சிறிய கூரை வீட்டைக் கட்டிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினோம். ஓராண்டாக நாங்கள் செய்துவரும் ஆக்க வேலைகளைப் பார்த்து, நல்ல உள்ளம் படைத்த செல்வர்கள், சேரியில் படிப்பவர்கட்குத் தேவையான கற்பலகை, புத்தகங்களை வாங்கித் தந்தனர்; ஒருவர் சிறிய நூல் நிலையம் அமைத்துத் தந்தார். மற்றொருவர் படிப்பகம் ஒன்றை அமைத்துத் தந்தார். அதனில் மாதம் பத்து ரூபாய் மதிப்புள்ள செய்தித் தாள்கள் வருகின்றன. சேரி மக்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்கின்றனர்; நாடோறும் குளிக்கின்றனர்; தங்கள் வீடுகளையும் தெருக்களையும் தூய்மையாக வைத்துக்கொள்கின்றனர்.

நாங்கள் இவ்வாறு சேரி வேலைகளில் மிக்க ஊக்கங் காட்டுவதைத் தாழ்த்தப்பட்ட சமூகத் தலைவர்கள் கவனித்தனர்; நாங்கள் தொண்டு செய்துவரும் ஆறு சேரிகளையும் பார்வையிட்டனர்; ஆறு பள்ளிகளையும், படிப்பகங்களையும், நூல் நிலையங்களையும், வெட்டுவித்த கிணறுகளையும் பார்த்தனர்; வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்

தனர்; எங்களைப் பலவாறு பாராட்டினர். நாங்கள் தன்னலமின்றி—எதனையும் எதிர்பாராது—உள்ளத்து எழும் அன்புணர்ச்சியால் உந்தப்பட்டுப் பொதுநலத் தொண்டு செய்பவராதலின், அவர்கள் பாராட்டுரையைக் கேட்டுச் செருக்கோ மகிழ்ச்சியோ அடையவில்லை. நாங்கள் இன்றளவும் அந்த ஆறு சேரிகளிலும் ஆக்க வேலை செய்து வருகின்றோம். சேரிப் பிள்ளைகள் மிகுந்த ஊக்கமும் உணர்ச்சியும் கொண்டு படிக்கின்றனர். முதியவர் இளைஞர்களைப்போலக் கற்கின்றனர். அவர்கள் பழக்க வழக்கங்கள், எண்ணங்கள் முதலியன மாறுதல் அடைகின்றன. தாங்கள் முன்னேற வேண்டும் என்னும் ஆவல் அவர்களிடம் மிக்குள்ளது.

3. எங்களைப்போல ஊர்தோறும், கிராமந்தோறும் உள்ள இளைஞர்கள் இத்துறையில் உண்மையான, தன்னலமற்ற தொண்டு செய்வார்களாயின், ஐந்தாண்டுகட்குள் சேரிகள் எல்லாத் துறைகளிலும் உயர்வடையும்; அங்குள்ள மக்கள் அறிவுக் கண்ணையும், நாகரிகக் கண்ணையும் பெறுவார்கள். இதற்குத் தன்னலமற்ற இளைஞர் தொண்டும், செல்வர் துணையும் இருத்தல் போதுமானது. அனைவரும் உயர்ந்தால்தான் சமூகம் உயரும்.

9. சொற்பொழிவைக் கேட்டுக் குறிப்பெடுத்தல்

(இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள் தில்லிமா நகரில் 19-10-1958 அன்று பேசிய ஆங்கிலச் சொற்பொழிவின் தமிழ்ச் சுருக்கம்.)

குறிப்பு

இந்தியா சுதந்திரம் பெறுதல்—நல்வாழ்வுக்கு வழிகாண எண்ணுதல், இந்திய நாட்டின் இயற்கை வளம்—முதல் ஐந்தாண்டுத் திட்டம்—உணவுக்கு வழி—இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்—தொழிற் பெருக்கம்—விரைவான முன்னேற்றம்—முதல் குறிக்கோள் சுதந்திரம்—அது பெற்ருயிற்று—இரண்டாம் குறிக்கோள் வாழ்க்கை நிலையை உயர்த்துதல்—இடையூறுகள்—நாற்பது கோடி மக்களின் நம்பிக்கை அச்சத்தைப் போக்கும்—தோல்வியால் மனம் உளையாது ஊக்கங் கொள்ளல் வேண்டும்—தோல்வியே வெற்றிக்கு வழிகாட்டி—உள்ளத்தின் எழுச்சியே விதை—பலன் உறுதியாகக் கிட்டும்—ஐயம் வேண்டாம்.

முன்னேற்றப் பாதையில் இந்தியா
(சொற்பொழிவின் சுருக்கம்)

1947ஆம் ஆண்டு, இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு ஆகும். தன்னுட்சி பெற்ற இந்தியா, அதே ஆண்டில் மக்கள் ஆட்சியை நிலைநாட்டியது. நிலவளமும், நீர்வளமும் நிரம்பிய நாட்டில் மக்களைப் பசியும், பிணியும் வாட்டி நின்றன. அதனல் மக்கட்கு வாழ்க்கை வழி வகுக்க, 1951ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டமொன்றைத் தீட்டியது. அதன் நோக்கம் வேளாண்மையைப் பெருக்குவதே. தொழிற்சாலைகளைப் பெருக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க 1956இல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மேற்கொண்டது.

இதன் பின்பு இந்தியாவில் பல துறைகளிலும் முன்னேற்றம் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, அந்நாட்டு மக்களின் முன்னேற்றமேயாகும்.

"சுதந்திர இந்தியாவை அடைதல்" என்ற குறிக்கோள் முடிந்த பின்னர், மீண்டும் புதிய பயணத்தைத் துவக்கிவிட்டோம். அதுவே வாழ்க்கை நிலையை உயர்த்துதல் என்பதாம்.

கோடிக் கணக்கான மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல் என்பது எளிதான செயலன்று. எண்ணிலடங்காத் தடங்கல்கள் நம் வழியை மறைக்கும். ஆயினும் வருங்காலத்தைப் பற்றி அச்சப்படத் தேவையில்லை. நாற்பது கோடி மக்களின் நம்பிக்கையும், நமக்கு உறுதுணையாக உள்ளது.

இப்பாரதநாடு பரப்பில் மட்டுமன்று, வரலாற்றிலும், அறிவிலும், ஆற்றலிலும் பெரியது. காரிய முயற்சியில் வெற்றியும் தோல்வியும் கண்டுள்ளோம். தோல்வியே பல ஆக்க வேலைகட்கு ஊக்கமளிப்பதாகும்.

முன்னேற வேண்டுமென்ற உணர்ச்சி மக்கள் உள்ளத்தில் ஊன்றிவிட்டது. இது தளிர்விட்டுச் செழித்து வளர்ந்து பூத்துக் காய்த்து என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய பலன்களை அளிக்கத்தான் போகின்றது. இதில் எள்ளளவும் ஐயமில்லை.

10. பிறர் வானொலிப் பேச்சைக் கேட்டுக் குறிப்பெடுத்தல்

உயர்திரு பேராசிரியர் புலவர் மி. பொன். இராமநாதஞ் செட்டியாரவர்கள் சென்னை

வானொலி நிலையத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு.

முன்னுரை:

உலகில் பாவம் மிகுங்கால் நல்லோர் தோன்றுவர். உ-ம். புத்தர், சங்கரர், இராமலிங்க அடிகள்.

சாதி சமயப் பிணக்கு நீக்கி "ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்" என உணர்த்தி, அவ்வொருவனை அடையத் தக்க வழியினை விளக்கத் தோன்றினார் அடிகள் இராமலிங்கம்.

வாழ்க்கை வரலாறு:

சிதம்பரம்—மருதூர்—கருணீகர்குலம்—தந்தை இராமையாப் பிள்ளை—கணக்காயர்—ஊர்க்கணக்கு—பொன்னேரி சின்னம்மை—மக்கள்: சபாபதிப் பிள்ளை, பரசுராமப் பிள்ளை, சுந்தரம்மாள், உண்ணுமுலையம்மாள்—1823ஆம் ஆண்டு அக்டோபர்மீ 5ஆம் நாள் அடிகள் இராமலிங்கம்.

தந்தை மறைவு—சபாபதிப் பிள்ளை குடும்பத்துடன் பொன்னேரி சேருதல்—சென்னை வருதல்—காஞ்சி மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் சிதம்பரம் சபாபதிப் பிள்ளை, பரசுராமப் பிள்ளை கற்றல்—புராணப் பிரசங்கம்—அடிகள் தமையனிடம் கற்றல்—கற்றலின்றி இறைவழிபாடு—தமையனார் முனிதல்—இறையருளால் பல கலையும் ஓதாதுணர்தல்—9ஆம் வயதிலேயே கந்தன்மேல் கவி பாடல்.

தமையனார்க்குப் பதிலாகச் சொற்பொழிவு—அண்ணன் அண்ணி பெருமதிப்புக்கொளல்—ஒற்றியூர்சேறல்—தியாகேசனைப்பாடல்—தம் உடலழகை

மறைத்தல்—மாணுக்கர் பலர் சேர்தல்—அடிகள் நூல்: மனுமுறை கண்ட வாசகம், ஒழுவிலொடுக்க முதற் செய்யுளுரை, சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவ மாலே, இங்கித மாலே முதலாயின.

தாயின் வற்புறுத்தல்—தமக்கை உண்ணுமுலேயம்மையின் மகள் தனம்மாளே மணத்தல்—துறவு வாழ்க்கை—பெரியோர் வருந்தல்.

அடிகள் தில்லே செல்லல்—நடராசபதி மாலே, அம்மை திருப்பதிகம் பாடல்—காழி செல்லல்—கருங்குழியடைதல்—வேங்கட ரெட்டியார் வேண்டுகோளால் 16 ஆண்டுகள் அங்கேயே தங்கல்—வடலூர் செல்லல்—அங்கேயே தருமச்சாலே கட்டி நடத்துதல்—ஞானசபை கட்டல்—ஞான சபையில் கண்ணுடி திருவிளக்கு வழிபாடு.

ஸ்ரீமுகஞூ தைப்பூசத் திருநாள்—மேட்டுக்குப்பம்—சித்திவளாகம்—உட்காப்பிட்டு இறையடி சேறல்.

முடிவுரை :

அடிகள் வழிநின்று ஒழுகல் நம் கடன்.

அவ்வாஞெலிப் பேச்சை விரித்தெழுதுதல்.

முன்னுரை :

உலகில் புண்ணியம் குறைந்து பாவம் மேற்படுகின்றபோது அப்பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தை வளர்க்கும்பொருட்டு நல்லோர் தோன்றுவர் என்பது பெரியோர் கருத்து. அவ்வாறு தோன்றியவரே புத்தர், சங்கரர், இராமாநுசர், இராமலிங்க அடிகள் முதலியோராவர்.

தமிழ்நாட்டில் சாதி சமயச் சண்டை மிக்குத், தத்தம் சாதி சமயங்களே உயர்ந்தவையெனக், கற்றவரும் மற்றவரும் வாதிட்டு நின்றனர். அப்போது அவர்தம் மாறுபாட்டை நீக்கி 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனும் உண்மையை உணர்த்தி, 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை'யாக விளங்கும் அத்தேவனை அடைதற்குரிய வழியினைக் காட்டவே அடிகள் இராமலிங்கம் தோன்றினர்.

வாழ்க்கை வரலாறு:

சிதம்பரத்தை அடுத்த மருதூரில் கருணீகர் குலத்தில் நல்லொழுக்கமும் இறைவழிபாடும் உடைய இராமையாப் பிள்ளைக்கும், பொன்னேரி சின்னம்மைக்கும் 5-10-1823 இல் 5 ஆம் மகவாகத் தோன்றினர் அடிகள். இவர்க்கு மூத்தவர் சபாபதிப் பிள்ளை, பரசுராமப் பிள்ளை, சுந்தரம்மாள், உண்ணுமுலையம்மாள் என்போராவர். இராமையாப் பிள்ளை மருதூரிலும் பக்கத்தூர்களிலுமுள்ள சிறுவர்க்குக் கல்வி கற்பித்து வந்ததுடன் ஊர்க்கணக்கும் எழுதி வாழ்ந்து வந்தார்.

அடிகள் பிறந்த ஆறுந் திங்களிலேயே தந்தையார் இறையடி யெய்தினர். பின், மூத்த மகனுராகிய சபாபதிப் பிள்ளை தம் குடும்பத்துடன் பொன்னேரியில் உள்ள பாட்டியார் வீட்டையடைந்தார். சின்னுள் கழித்துச் சென்னை வந்து சேர்ந்தார். சென்னையில் பெரும் புலவராக விளங்கிய மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் சிதம்பரம் சபாபதிப்பிள்ளையும் பரசுராமப் பிள்ளையும் கல்வி பயின்றனர். சென்னை ஏழு கிணறு வீராசாமிப் பிள்ளைத் தெரு 38 ஆம் எண்

உள்ள இல்லத்தில் சபாபதிப் பிள்ளை குடியிருந்து கொண்டு ஆங்காங்குப் புராணச் சொற்பொழிவு கள் நடத்தி வாழ்ந்து வரலானர்.

அடிகள் தம் தமையனர் சபாபதிப் பிள்ளை யிடமே கல்வி பயின்று வந்தார். அடிகள் கற்பதில் ஊக்கமின்றி இறைவழிபாட்டிலேயே உள்ளம் ஒன்றி யிருந்தார். தம்பி கல்வியிற் கருத்துச் செலுத்தாமை கண்டு தமையனர் பெரிதும் உள்ளம் கவன்ருர். அக்கால் அடிகள் தம் இல்லத்தின் ஓர் அறை யில் ஒரு கண்ணுடியின்முன் அமர்ந்து உள்ளத்தை ஒருமைப்படுத்திப் பன்னுள் இருந்துவர, முருகன் திருவருளால் பாடலியற்றும் திறம் பெற்ருர். 9 ஆம் வயதிலேயே சென்னைக் கந்தகோட்டப் பெரு மானைக் கவிபாடித் துதித்தார்.

இங்ஙன மிருக்கையில் ஒருநாள் சபாபதிப் பிள்ளை, தமக்கு உடல்நல மின்மையால் தாம் சொற்பொழிவு நிகழ்த்துமிடம் சென்று, இரண் டொரு பாடல்களைப் பாடிவிட்டு வருமாறு அடிகளை அனுப்பினர். ஆண்டுச் சென்ற அடிகள் ஆண்டுள்ள அன்பர் விருப்பப்படி சொற்பொழிவு செய்யலானர். சொற்பொழிவு அவையினரைக் கொள்ளை கொண்டது. அன்று முதல் அடிகளே சொற்பொழிவு நிகழ்த்த வேண்டு மென அவையோர் வேண்டினர். தம்பியின் பெரு மையை யுணர்ந்த தமையனர் சபாபதிப் பிள்ளை யும் அவர்தம் கிழத்தியாரும் அடிகளிடம் பெரு மதிப்புக் கொண்டனர்.

பெரியோர் பணிவை விரும்பாத அடிகள் வீட்டுத் தொடர்பை விட்டு விலகி ஒற்றியூர் சென்று தியாகேசனை இடைவிடாது பாடி வணங்கிவந்தார்.

துறவுள்ளங்கொண்ட அடிகள் முக்காடிட்டுத் தம் அழகை மறைத்து வசித்துவந்தார். அப்போது சென்னைக்கும் பிறவிடங்கட்கும் சென்று இறையருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவதும் உண்டு. தொழூவூர் வேலாயுத முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், பொன்னேரி சுந்தரம் பிள்ளை முதலானோர் அடிகளிடம் மாணுக்கராகி இலக்கியம், இலக்கணம், சித்தாந்தம் கற்று வந்தனர்.

அக்காலத்திலேயே அடிகள் மனுமுறைகண்ட வாசகம், ஒழுவிலொடுக்க முதற் செய்யுளுரை, சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவ மாலை, இங்கிதமாலை முதலாய நூல்களைச் செய்திருந்தனர்.

தாய், தமையன்மார் வற்புறுத்தலால் அடிகள் தம் தமக்கை உண்ணுமுலையம்மையின் மகள் தனம்மாளை மணந்தார். ஆயினும் துறவு வாழ்க்கையையே மேற்கொண்டுவந்தார். அடிகள் வாழ்க்கை முறையை யுணர்ந்த பெரியோர் தம் முயற்சி வீணனது கண்டு பெரிதும் உளம் வருந்தினர்.

பின்னர், அடிகள் சிதம்பரம் சென்று அம்பலவாணனை வணங்கி நடராசபதிமாலை, அம்மை திருப்பதிகம் முதலாய நூல்களைப் பாடினர். பிறகு சீர்காழி சென்று இறைவனை வணங்கிக் கருங்குழி அடைந்தார். வேங்கட ரெட்டியார் விருப்பப்படி ஆண்டுப் பதினறு ஆண்டுகள் தங்கினர். பின் வடலூர்ப் பெருவெளியில் தருமச்சாலை யொன்று கட்டிமுடித்தார். ஆண்டுச் சாதி சமய வேறுபாடின்றிப் பசித்தவர்க்கெல்லாம் உண்டியளித்ததுடன், இறையருட் சொற்பொழிவும் செய்து வந்தார். பின் ஞானசபைக் கட்டடம் கட்டியருளி

ஞர். இவ்வமையம் அடிகள் வடலூருக்கு இருகல் தொலைவிலுள்ள மேட்டுக் குப்பத்தில் ஒரு குடிசையில் தனித்திருக்கலானார். தைத் திங்களில் ஒரு கண்ணாடியையும் விளக்கையும் நிறுத்தி அவற்றிற்கு வழிபாடு செய்து, அன்பர் கூட்டம் அம்பலவாணனை அதில் கண்டு களிக்கச் செய்தார்.

பின் ஈராண்டு கழித்து ஸ்ரீமுக ஆண்டு தைப் பூசத் திருநாளாகிய வெள்ளிக்கிழமையன்று இரவு 12 மணிக்கு மேட்டுக் குப்பத்திலுள்ள சித்தி வளாகம் எனும் குடிசைக்குள் சென்று உட்புறம் தாளிட்டுக்கொண்டு இறையடி சேர்ந்தார்.

முடிவுரை :

அடிகளின் நூல்களைக் கற்றுச் சாதி சமயப் பிணக்கொழித்து எப்பொருளிலும் இறைவனைக் கண்டு இறையருள் பெற்று முடிவிலின்பத்தையடையத் தவங் கிடத்தலே, அடிகள் வரலாறு கற்ற நம்மனோர் கடனாகும்.

பயிற்சி

1. சாரணர் இயக்கம்.
2. செஞ்சிலுவைச் சங்கம்.
3. தேசியச் சிறுவர் துணைப்படை.
4. இளைஞர் கழகம்.

இவை போன்றவைகளைப்பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

வானொலியில் பேசும் பிறர் பேச்சைக் கேட்டுக் குறிப்பெடுத்தும், அதனை விரித்தெழுதியும் பழகுக.

11. கொடுத்த தலைப்புப்பற்றிக் கட்டுரை வரைதல்

பாண்டித்துரைத் தேவர்

முன்னுரை :

உலகம் தோன்றிய காலம் (கல் தோன்றி, மண் தோன்றாக் காலம்) முதல் தமிழர் திருந்திய நாகரிகம் பெற்று வாழ்ந்தவர். தமிழ்மொழியும் மிகமிகப் பழங்காலத்திலிருந்தே உயர் தனிச் செம் மொழியாய்ச் சிறந்து விளங்கியது. தலை, இடை, கடையென மூன்று சங்கங்களை நிறுவிப் பாண்டி யர் தமிழை வளர்த்தனர். கடைச்சங்க காலத் திற்கு (கி. பி. 250 க்கு)ப் பின் தமிழர் தாழ்ந் தனர் ; தமிழும் தாழ்ந்தது. அந்நிலை நீக்கித் தமிழைப் பண்டுபோல் உயரச் செய்ய முயன்ற உத்தமர் பாண்டித்துரைத் தேவர். ஆதலின் அவரைப்பற்றி ஈண்டுச் சிறிது நோக்குவோம்.

பெற்றோர் :

சேது நாடு என்பது இராமநாதபுரம் மாவட்ட மாகும். இராமன் கட்டிய அணையைக் காக்க நியமிக்கப்பட்டவர் சேதுமன்னர் எனப்பட்டனர். இவர் பாண்டியர்க் கடங்கிய சிற்றரசர். சேதுநாடு, பண்டைக் காலமுதல் புலவர் பலரையும் ஈன்று வந்த பெருநாடாகும். சேதுமன்னர் பரம்பரையில் முத்துராமலிங்க சேதுபதி காலத்தில், சீமை பேஷ்காராக அலுவல் பார்த்தவர் மன்னரின் தமையனாராகிய பொன்னுசாமித் தேவராவர். இவர் சிவப்பற்றும் தமிழ்ப் பற்றும் நிரம்பப்பெற்ற செந்தமிழ்ப் புலவர். இவரது மூன்றாம் மைந்தரே

பாண்டித்துரைத் தேவராவார். இவர் காலத்தில் மன்னராயிருந்தவர் முத்துராமலிங்க சேதுபதியின் மைந்தரான பாஸ்கர சேதுபதியாவார்.

கல்வி :

பாண்டித்துரையவர்கள் அழகர்ராஜு என்ற தமிழ்ப் புலவரிடம் தமிழும், வழக்கறிஞர் வேங்கடேச சாத்திரியிடம் ஆங்கிலமும் கற்ருர். தமக்குரிய பாலவனத்தம் சமீன் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் நிர்வாகத்திலும், குடிகளின் குறை போக்குவதிலும் மிகத் திறம்பட நடந்து வந்தார். ஓய்ந்த நேரத்தில் சதாவதானம் முத்துசாமி ஐயங்காரிடம் உயர் தமிழ் கற்கலானுர். திருவாவடுதுறை ஆதீனம் பழனிக்குமாரத் தம்பிரானிடம் சைவ சித்தாந்த சாத்திரங்களேக் கற்ருர். பாஸ்கர சேதுபதியும் சீரிய புலமை பெற்றவர்.

தேவர் பொழுது போக்கு :

பாஸ்கர சேதுபதி அரசவை, பாண்டித்துரைத் தேவர் தலைமையில் இசைத்தமிழ் பூச்சி—சீநிவாச ஐயங்கார் அவர்களாலும், இயற்றமிழ் மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களாலும் பொலிவு பெற்றது. இயலிசை ஆராய்ச்சிகளும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. அவைக்கு வரும் புதிய புலவர்களும் சோதிக்கப்பெற்றுத் தத்தம் தகுதிக்கேற்பப் பரிசில் பெற்றனர். தேவரவர்களின் 'சோமசுந்தர விலாசம்' எனப்படும் மாளிகைக்கண் சிவபூசை முற்றியபின் நாளும் இசையரங்கு நடைபெறும். புலவர் பலர் சூழ்ந்து பல்வகை ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தலும், புதுச் செய்யுளியற்றலும், பல்வகைப் பொருள்

பற்றி வாதமிடுதலும் நடைபெறும். சிற்சில நாட்களில் பாஸ்கர சேதுபதியவர்களே ஆண்டெழுந்தருளி அவையைச் சிறப்பிப்பதும் உண்டு.

நூல் வெளியீடு:

மக்கட்குத் தமிழுணர்வையூட்டிப் புலவர்க்கு ஆதரவு தரவேண்டுமென்று சொற்பொழிவாற்றுவதுடன், தாமே நடைமுறையில் செய்தும் காட்டியவர் தேவரவர்கள். டாக்டர் உ.வே. சாமிநாதையர், மதுரை இராமசாமிப் பிள்ளை, சுன்னுகம் குமாரசாமிப் பிள்ளை, சபாபதி நாவலரவர்கள் முதலியோர்க்கு இவர் பொருளுதவி செய்து பற்பல நூல்கள் வெளிவரச் செய்தார். தாமும் பன்னூல் திரட்டு, சைவ மஞ்சரி என்ற இரு நூல்களை வெளியிட்டார்.

தமிழ்ச் சங்கம் :

தேவர், சங்கம் வளர்த்த மதுரை, மீண்டும் பண்டைப் பெருமையை அடையவேண்டுமென விரும்பினர். 14-9-1901 இல் மதுரையில் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார். அவ்விழாவில் டாக்டர் உ. வே. சாமிநாதையர், ரா. இராகவையங்கார், வை. மு. சடகோப இராமாநுஜாசாரியார், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், மறைமலை அடிகள், அரசஞ் சண்முகனுர், திருமணம் செல்வ கேசவராய முதலியார், எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை முதலாய பெரும் புலவர் பலர் கலந்து கொண்டனர். சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச்சாலை என்பன தோற்றுவிக்கப்பட்டன. இவை மூன்றும்

இன்னும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இவற்ருல் தமிழ்நாடு பெற்று வரும் நலம் அளப்பரியது.

மறைவு :

தேவரவர்கள் 1911 ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், 2 ஆம் நாள் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகு எய்தினர். தமிழ்ப்பெரு மக்கள் பலரும் ஆருத்துயர் கொண்டனர். இவர் மறைவால் தமிழன்னை பெற்ற இழப்புப் பேரிழப்பாகும்.

நற்பண்புகள் :

தேவரவர்கள் மதுரை சோமசுந்தரக் கடவுள் மீதும் அங்கயற்கண்ணி அம்மைமீதும் எல்லையற்ற அன்புகொண்ட சிவநெறிச் சீலர். ஆயினும் இவரால் ஆதரிக்கப்பட்டவருள் பெரும்பாலோர் வைணவரேயாவர். இதிலிருந்து இவர் *சமயத் துறையில் சமரச மனப்பான்மை கொண்டவர்* என்பதை அறியலாம். வ. உ. சிதம்பரம் பிள்ளை தொடங்கிய சுதேசிக் கப்பல் கம்பெனிக்குத் தம்மாலியன்ற பொருளுதவி செய்ததோடு, சிறிது காலம் தாமே தலைமை தாங்கி அதனை வெற்றிபெறவும் நடத்தினர். இதனுல் இவர் *நாட்டுப்பற்றுடையவர்* என்பதையும் உணரலாம். இவர் சொற்பொழிவு தக்க மேற்கோளுடன் கேட்போர் உளங்களை ஈர்க்கும் முறையில் மிக இனிமையாய் இருக்கும். இவர் தம் சொற்பொழிவைக் குறித்த நேரத்தில் தொடங்கிக் குறித்த நேரத்தில் முடித்துவிடுவார். இதனுல் இவர் *காலத்தின் அருமையை உணர்ந்தவர்* என்பதை அறியலாம். தமிழ்ப் புலவர்களை ஆத

ரித்தல், தமிழ்ச் சங்கம் தோற்றுவித்தல், அதற்குப் பெரும்பொருளும் அளவற்ற நூல்களும் நன்கொடையாக அளித்தல், நூல் பதிப்பித்தல், 'செந்தமிழ்' எனும் திங்கள் தாள் தோற்றுவித்தல் முதலிய இன்னோரன்ன செயல்கள் இவரது தாய்மொழிப் பற்றை விளக்கிக் காட்டும். தேவர் இனம் அறியாச் செம்மல்; பகைவரையும் நண்பராக்கும் பண்பினர்; அனைவரிடமும் அகம் மலர முக மலர்ந்து பேசும் இயல்பினர்; பிறர் துன்ப முணர்ந்து உதவும் பண்பினர்; தம்மைப் போலவே பிறரையும் எண்ணும் பெருந்தகை.

முடிவுரை:

இப்பெருமகனுருடைய சீரிய பண்புகளும், செந்தமிழ்ப் பற்றும், கடவுளுணர்ச்சியும் மக்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் தோன்றி வளர்வனவாகுக. இப்பண்புகளே தமிழரை நன்மக்களாக்க வல்லவை.

பயிற்சி

எழுதிப் பழகுக:

1. நாவன்மை.
2. சோழன் கரிகாலன்.
3. சடையப்ப வள்ளல்.
4. புகழேந்தி.
5. இவைபோல் மேலும் பல.

12. கொடுக்கப்பட்ட மேற்கோள் நூலிலிருந்து கட்டுரைப் பொருள் திரட்டுதல்

(1) அரிச்சந்திரன் வரலாறு

பொய்யாமை

“ பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று ”—வள்ளுவர்.

முன்னுரை :

உள்ளம் அறிந்த ஒன்றை அறிந்தபடி பேசுதல் உண்மை எனப்படும். அதற்கு மறுதலையானது பொய்ம்மை எனப்படும். உண்மையாக (பொய் படாமல்) நடத்தல் பொய்யாமை எனப்படும். பொய்ம்மையால் வரும் இழிவும், பொய்யாமையால் வரும் உயர்வும் அரிச்சந்திரன் வரலாற்றில் இனிது காணலாம்.

பொருள் :

தேவசபை கூடுதல்—பொய்யாமை பற்றிய பேச்சு—விசுவாமித்திரர், வசிட்டர் வாதம்—வசிட்டர் சிறை—கோசிகர்க்குத் தேவர் உதவி—கோசிகர் அரிச்சந்திரனை அடைதல்—யாகத்திற்குப் பொருள் வேண்டல்—காட்டு விலங்குகளைப் படைத்தல்—அரிச்சந்திரன் வேட்டை—கோசிக முனிவரின் மகளிர் நடனம்—முனிவர் மன்னனிடம் நாடு பெறல்—முன் வைத்த பொருள் கேட்டல்—அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன் காசியடைதல்—நட்சத்திரேசன் கொடுமை—சந்திரமதி, லோகிதாசன் அடிமை—காலகண்டன் கொடுமை—அரிச்சந்

திரன் அடிமை—லோகிதாசன் மரணம்—சந்திரமதி சிரச்சேதம்—கோசிகரின் இறுதி முயற்சியும் தோல்வியும்—தேவர் காட்சியளித்தல்—அரிச்சந்திரன் தன் நாட்டைப் பெறுதல்.

முடிவுரை :

கோசிகன் அடைந்த இழிவும் அரிச்சந்திரன் பொய்யாமையால் பெற்ற உயர்வும். "பொய்யாமை......நன்று"—இதன் விளக்கம்.

(2) நளன் வரலாறு

குடி கெடுக்கும் சூது

முன்னுரை :

ஆன்றோரால் விலக்கப்பட்டவை பொய், சூது, கொலை, களவு, கள், காமம். இவற்றுள் சூதைப் பற்றி ஈண்டு ஆராய்வோம். சூது வட்டென்றும் கவறென்றும் கூறப்படும்.

பொருள் :

நளன் ஆட்சியின் மேன்மை—சனியின் சூழ்ச்சி—புட்கரன் வருகை—சூதாடித் தோற்றல்—நளன் மனைவி மக்களுடன் காடேகல்—மக்களை வீமனிடம் அனுப்புதல்—சனி அன்னமாக வருதல்—நளன் தமயந்தியைப் பிரித்தல்—அரவு தீண்டல்—அயோத்தியில் வேலை செய்தல்—தமயந்தி வேதனை—சேதிநாடடைதல்—வீமன் தேடுதல்—தமயந்தி குண்டினபுரி அடைதல்—தமயந்தியின் சூழ்ச்சி—நள தமயந்தியர் ஒன்றுகூடல்—நளன் நல்வாழ்வு பெறுதல்.

முடிவுரை:

சூதாட்டம் இன்று பல்வேறு உருவில் நடைபெறுதல்—அதினின்றும் விலகி வாழ்வதால் வரும் நன்மை—சூதை வெறுக்க வேண்டுதல்.

பயிற்சி

சிலப்பதிகாரத்திலிருந்து 'செங்கோலாட்சிபற்றி'க் கட்டுரைப் பொருள் திரட்டுக.

திருக்குறளிலிருந்து 'நாநலம்'பற்றிக் கட்டுரைப் பொருள் திரட்டுக.

13. ஒருபொருள் தன் வரலாற்றைத் தானே கூறுவதுபோன்ற கட்டுரை

சிலந்தி தன் வரலாறு கூறுதல்

தம்பீ, ஏன் என் வலையைக் கலைத்துக்கொண்டேயிருக்கின்றாய்? யான் உனக்கு என்ன தீமை செய்தேன்? என்னைப்பற்றி அறிந்தால் நீ இவ்வாறு செய்யமாட்டாய். ஆதலின் என் கதையைக் கூறுகிறேன் கேள்.

பொறுமையும் உழைப்பும் உடைய மனிதரை உத்தமரென்றும், உழைப்பாளிகளென்றும், தாளாளரென்றும் பலபடியாகப் போற்றுகின்றீர்கள்! அந்தப் பொறுமையினையும் உழைப்பினையும் யாங்கள் மிகுதியாகக் கொண்டவர்கள். என்ன! வியப்படைகின்றாயா? நீ அழிக்க அழிக்கக் கட்டிக்கொண்டே இருக்கின்றேனே, இது ஒன்றே பொறுமையும் உழைப்பும் எங்களிடம் உண்டு என்பதை விளக்கவில்லையா? மேலும் கேள்.

எங்களுள் வீட்டுச் சிலந்தி, தோட்டச் சிலந்தி முதலாகப் பலவகை உண்டு. யாங்கள் தோட்டச் சிலந்திகள். தோட்டத்தில் பயிர்களை அழிக்கும் புழுக்களை உண்டுபண்ணும் பூச்சிகளை யாங்கள் எங்கள் வலையில் அகப்படுத்தி உண்ணுகின்றோம். இது உங்கட்கு எவ்வளவு பெரிய நன்மை?

எங்கள் வலையை எவ்வாறு கட்டுகிறோம் தெரியுமா? எங்கள் வாயிலிருந்து வெளிப்படும் உமிழ் நீர் காற்றில் பட்டவுடன் நூலாக ஆகின்றது. அதனைக் கொண்டுதான் வலை பின்னுகின்றோம். பார்த்தனையா, நீ பார்த்துக்கொண்டிருக்கும் போதே எவ்வளவு பின்னிவிட்டேன்! எங்களிடமிருந்து உழைப்பின் உயர்வை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எங்கள் வலையைப் பார்! எத்தனை ஆர்க் கால்கள்! சுற்று வட்ட நூலை ஒவ்வோர் ஆர்க்காலோடும் இணைத்துவிடுகின்றோம். வலை காற்றால் பாழாகாதிருக்கச் சிறு மரத்துண்டுகளைக் கட்டித் தொங்க விடுவோம். உங்கள் வீட்டைப்போல் எங்கள் வலை காற்று மழையால் சேதமாவதில்லை! ஏன், எண்ணிப்பார்!

எங்கள் வலைநூல் பிசுபிசுப்புடையது. ஈ தும்பி போன்ற பூச்சிகள் வலையில் பட்டவுடன் அதில் சிக்கிக்கொள்ளும்; தப்பமுடியாது. பின்னர் நாங்கள் அவற்றை உணவாகஆக்கிக்கொள்வோம்.வலையில் பட்டது பெரிய பூச்சியாக இருப்பின், அதனால் வலை அறுந்து போகாதபடி நூலை அசைத்து, அதனை விடுவித்துவிடுவோம். எங்கள் வலையில் வேறொரு சிலந்தி வந்து அகப்பட்டால் அதையும் விடுவித்துவிடுவோம். விடுவித்தும் அது போகாமல் இருந்தால், அது எதிர்த்துச் சண்டைக்கு வருவ

தாக எண்ணுவோம். உடனே பெரிய சிலந்தியாகிய நான் சென்று அதனுடன் போரிடுவேன். போர் மிகக் கடுமையாக நடக்கும். முடிவில் யாராவது ஒருவர்தாம் பிழைக்க முடியும். கடியின் கொடுமையால் மற்றவர் சாவது உறுதி. இது எங்களின் மானத்தையும் வீரத்தையும் விளக்கவில்லையா? இரவில் ஒளிந்திருந்து பகலில் கூட்டின் நடுவில் வந்து காத்திருப்போம். எங்கட்கு வேண்டிய அளவு உணவு கிடைக்கும். அன்றன்று சிதைந்த எங்கள் கூட்டை அன்றன்று மாலையே செப்பனிட்டுவிடுவோம்! இஃது எங்கள் சுறுசுறுப்பைக் காட்டவில்லையா? ஈ கொசுக்களால் உங்கட்கு எவ்வளவு நோய் உண்டாகின்றன? அவற்றை அழிப்பது யார், நாங்களல்லவா? எங்களால் சிறிது தீங்கு உண்டு. அது நாங்கள் கடிப்பதாலாகும். ஆம், எங்கள் கடி சற்று நச்சுத் தன்மையுடையதுதான். ஆனல், எங்களால் உண்டாகும் நன்மையை எண்ணிப் பார்க்கவேண்டாமா? நன்றி மறப்பது நன்றன்றே!

தம்பீ, இதுவரை நீ கேட்டதிலிருந்து யாங்கள் பொறுமைசாலிகள், நல்ல உழைப்பாளிகள், மானமும் வீரமும் உடையவர்கள், சுறுசுறுப்புடையவர்கள், நுணுக்க அறிவு படைத்தவர்கள் என்பதை நீ அறிந்து கொண்டிருக்கலாமே. இந்நற்குணங்களையெல்லாம் நீயும் மேற்கொண்டு சிறந்து விளங்குவாயாக.

பயிற்சி

தாஜ்மகால், செஞ்சிக் கோட்டை, காவிரியாறு, பொதியமலை, முத்து, வைரம், தென்னைமரம், குயில் — இவை போன்றவை தம் வரலாற்றைத் தாமே சொல்வதுபோல் எழுதிப் பழகுக.

14. நடைவகையானும் பொருள் வகையானும் உயர்நிலைக் கடிதங்கள் எழுதுதல்

மாணுக்கர் இதுவரை கற்ற கல்வியின் தரத்திற் கேற்பக் கடிதங்கள் உயரிய நடையினை உடையன வாகவும், கருத்து நிரம்பியனவாகவும் இருக்க வேண்டும். கடிதங்கள் தலைப்பு, முன்னுரை, பொருள், முடிவுரை, முகவரி என்ற ஐந்து பகுப் பாகப் பகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(1) தான் எடுத்துக்கொண்ட பாடத்திட்டத்தை விளக்கி எழுதும் கடிதம்.

15, நக்கீரர் தெரு,
திருவள்ளுவர்புரம்,
வடசென்னை
20—10—1959.

அன்புள்ள அப்பா அவர்கட்கு வணக்கம். நலம்; நலம் அறிய அவா.

நான் பலநாள் சிந்தித்துப் பார்த்து, **அச்சுத் தொழிலை** என் விருப்பப்பாடமாக எடுத்துக் கொண்டேன்; அச்சு எழுத்துக்களைக் கோத்தல், படி எடுத்தல், படித்துத் திருத்தல், இயந்திரத்தில் திருமணத்தாள் முதலிய சிறிய செய்தித் தாள்களை அச்சடித்தல், புத்தகங்களை வெட்டும் இயந்திரத்தில் புத்தகங்களை வெட்டுதல் முதலிய பயிற்சிகள் எட்டாம் வகுப்பில் கற்பிக்கப்படுகின்றன. தாங்கள் அச்சுத் தொழிலில் இருபத்தைந்து ஆண்டுகளாக ஈடுபட்டிருப்பதால், தங்கள் மகனாகிய யானும் அப்பயிற்சியில் ஈடுபட்டேன்.

8, 9, 10 ஆம் வகுப்புக்களில் அச்சுத் தொழில் பற்றிய முழுக்கல்வியும் பயிற்றுவிக்கப்படுமாம். மூன்ருண்டுகட்குப் பிறகு இத்தொழிற் கல்வி பிழைப்புக்கு வழிகாட்ட வல்லதன்ருே? "நீ இத்தொழிலை நன்கு கற்பின், நான் சிறிய அச்சகத்தை உனக்கு ஏற்பாடு செய்து தருவேன்" என்று மாமா என்னிடம் வாக்களித்துள்ளார். அவரது பெருந்துணையுடன், தங்கள் தொழில் அனுபவத்தையும் துணையாகக்கொண்டு, என் கைத்தொழிற் கல்வி, பிழைப்புக்கு நல்வழி காட்டும் என்று நம்புகிறேன். தொழிற் கல்வியை அறிவியல் முறையில் கற்பது தான் முறை என்பது தாங்கள் அறிந்ததேயாகும். இத்துறையில் படித்துத் தொழில் செய்பவர் தொகை நமது நாட்டில் குறைவு. எதிர்காலத்தில் தொழிற்கல்வி கற்றவரே இத்தகைய தொழில்களில் திறம்பட ஈடுபடவேண்டும் என்பது அரசாங்கத்தார் விருப்பம். அதனுற்ருன் பள்ளிகளிலேயே தொழிற் கல்வியை விருப்பப்பாடமாக வைத்துள்ளனர். இதுவரை வெறும் ஏட்டுக்கல்வியே பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வந்தது. காந்தியடிகள் திட்டத்தினுல் தொழிற் கல்வி பள்ளிகளில் வற்புறுத்தப் படுகிறது. எங்கள் பள்ளிகளில் தச்சுவேலை, பாய் பின்னுதல், சமக்காளம் நெய்தல், தேனீ வளர்த்தல் முதலிய கைத்தொழில்களையும் பாடமாக வைத்துள்ளனர்.

என் முயற்சியை வாழ்த்தி, மறுமொழி விடுத்தருள வேண்டும்.

தங்கள் அன்புள்ள மகன்,

இளங்கோவன்.

உயர் திருவாளர்,

சி. முருகேசனார் அவர்கள்,

18, செங்குட்டுவன் தெரு,

மயிலம்,

(தென்னார்க்காடு மாவட்டம்)

(2) விழாவில் உதவி செய்யத்தகும் விவரங்களைக் கூறிக் கடிதம் வரைதல்:

60, கம்பர் தெரு,
பட்டுக்கோட்டை,
25-10-1959.

திருவள்ளுவர் கழகச் செயலாளர் அவர்கட்கு வணக்கம்.

அன்புடையீர்,

தங்கள் கடிதம் வந்தது. தமிழ் நலத்திற்குப் பாடுபடும் எந்தக் கழகத்தாருக்கும் எப்போதும் உதவிபுரியத் தமிழ் இளைஞர் கழகத்தாராகிய யாங்கள் விருப்பத்துடன் காத்திருக்கின்றோம். ஆதலின், உங்கள் திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவில் பெருவிருப்புடன் கலந்துகொண்டு தொண்டு செய்ய விழைகின்றோம். விழாவன்று காலை தாங்கள் நடத்த இருக்கும் ஊர்வலத்தில் நாங்கள் அனைவரும் கலந்து கொள்வோம்; ஒவ்வொரு தெருக்கோடியிலும் நின்று திருக்குறளின் சிறப்பைப் பேச எங்கள் கழகத்தார் அறுவர் முன்வந்துள்ளனர். அவர்களின் பெயர்கள் பின்வருவன :

1. கூத்தரசன், 2. வில்லாளன், 3. மணி அரசி, 4. இசை அரசி, 5. இன்பவல்லி, 6. செந்தமிழரசு.

மாலை நடைபெறும் பெருங்கூட்டத்தில் தாய்மார்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எங்கள் கழக உறுப்பினரான பெண்மணிகள் பதின்மர் இருந்து பணி ஆற்றுவர்! ஆடவர் இடத்தில் பன்னிருவர் இருந்து துணைபுரிவர். அவ்விளைஞர் பன்னிருவரும் உடற்பயிற்சி பெற்றுவருபவர்; அஞ்சா நெஞ்சினர்; கூட்டத்தில் அமைதி காக்கும் ஆற்றல் உடையவர்.

மேலும் எங்களால் செய்யத்தகும் வேறு பணிகள் இருப்பின், அன்புகூர்ந்து தெரிவித்தருள்க. அவற்றையும் விருப்புடன் செய்வோம். தங்கள் முயற்சி வெற்றி பெறுக!

தங்கள் அன்புள்ள,
க. மதியழகன்,
இளைஞர் கழகச் செயலாளன்

திருவாளர்,
அ. நெடுஞ்செழியன் அவர்கள்,
செயலாளர், 'திருவள்ளுவர் கழகம்'
பெரிய கடைத்தெரு,
பட்டுக்கோட்டை.

(3) குடும்பத் துன்பத்தை அகற்றுவதற்காக எழுதப்படும் கடிதம்:

25, சேக்கிழார் தெரு,
கடலூர்,
1-11-1959.

அன்புள்ள கண்ணப்பனுக்கு,

இறைவன் அருளால் நினக்கு எல்லா நலமும் சிறக்கப்பெறுவதாக.

நினது கடிதம் வந்தது. உனக்கு வேலை கிடைக்கவில்லை என்பதை அறிய நான் வருந்து

கின்றேன். உன் தகப்பனர் பலருக்கும் வேலை தேடித் தந்த பெரியவர். அவர் காலமான பிறகு அவரால் நலம் பெற்றவர்கள் உன்னை வேலையில் அமர்த்தத் தவறினர். இக்காலத்தில் நன்றி மறப்பது பலரின் இயல்பாகிவிட்டது. நீ உடனே உன் தாயாரையும், உன் தம்பியையும் அழைத்துக் கொண்டு கடலூர் வந்து சேர். உனக்கு இங்கு 'இராலி கம்பெனி'யில் குமாஸ்தா வேலை தருமாறு ஏற்பாடு செய்திருக்கிறேன். உன் தம்பி நமது மணிமேகலையுடன் பள்ளியிற் படிக்கட்டும். என் வீட்டில் இருப்பின் உன் தாயார் சிறிதளவேனும் உளக்கவலை இல்லாதிருக்கலாம். உடனே வாருங்கள். ரூபாய் ஐம்பது அனுப்பியிருக்கிறேன். அதைச் செலவுக்கு வைத்துக்கொள்ளவும். வரும் நாளை உடனே தெரிவி.

உன் அன்புள்ள நண்பன்,
திருமாவளவன்

திரு. கா. கண்ணப்பன்,
15, திருநாவுக்கரசு தெரு,
அறந்தாங்கி,
(தஞ்சை மாவட்டம்.)

(4) பள்ளியில் நடைபெறும் விழா ஒன்றிற் குரிய முன்னேற்பாடு செய்வதுபற்றிய கடிதம்.

10, சம்பந்தர் தெரு,
ஆரணி,
5—11—1959.

அன்புமிக்க தலைமை ஆசிரியரவர்கட்கு வணக்கம்.

நாளை வியாழனன்று மாலை 4-30 மணிக்கு நமது நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில்

தமிழ்க் கழகச் சார்பில் நடைபெற இருக்கும் பரிசளிப்பு விழாவிற்குச் சென்னைச் சட்ட மன்ற உறுப்பினராகிய நமது ஊர் **உயர்திரு. இளைய பெருமாள்** (எம். எல். ஏ.) அவர்கள் தலைமை தாங்க இசைந்துள்ளனர். பரிசுகள் வழங்க வேலூர் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளித் தலைமை யாசிரியர் உயர்திரு. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் அன்புடன் இசைந்துள்ளார். அவர் வெள்ளியன்று மாலை நமது பள்ளிக்கு நான்கு மணிக்கு வருவார். உடனே அவர்கட்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பின்னர், புகைப்படம் எடுக்கப்படும்.

மாணவரை அணி அணியாக மண்டபத்தில் அமரச் செய்ய 10ஆம் வகுப்பு மாணவத் தொண்டர் இருபதின்மர் இருக்கின்றனர். அவர்கள் அமைதி நிலவச் செய்வர். தமிழ்க் கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டு பரிசுபெற்ற பதின்மருக்கும் உரிய நூல்கள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பரிசு பெற்றவர் பெயர், வகுப்பு, பரிசின் வகை (முதற் பரிசு, இரண்டாம் பரிசு என்பவற்றுள் ஒன்று) இவை குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தாங்கள் கையெழுத்திட வேண்டுகின்றேன்.

கூட்டத் தொடக்கத்தில் 10ஆம் வகுப்பு மாணவன் செந்தமிழரசு, கடவுள் வாழ்த்துப் பாடுவான். 9ஆம் வகுப்பு மாணவன் கலைச் செல்வன் தமிழ்த்தாய் வணக்கம் பாடுவான். இருவரும் நம்மூர்த் தமிழிசைச் சங்கத்தில் இசைப் பயிற்சி பெறுபவர்; நன்ருய்ப் பாடுவர். கூட்ட இறுதியில், கழகச் செயலாளன் என்னும் முறையில் யான் 'நன்றி' கூறுவேன். தாங்கள் தலைவரையும்

பரிசு வழங்குபவரையும் கூட்டத்திற்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டுகிறேன்.

நான் இன்று பள்ளியில் விடுமுறை பெற்று அயலூர்க்குச் சென்று இரண்டு நாட்களில் வருவேன். நான் இன்னும் செய்ய வேண்டுவன எவையேனும் இருப்பின், அன்புகூர்ந்து அறிவிக்க வேண்டுகின்றேன். நான் வியாழனன்று காலையில் தங்களைச் சந்திப்பேன்.

தங்கள் அன்புள்ள மாணவன்,
சு. இளஞ்செழியன்,
கழகச் செயலாளன்.

உயர்திரு.
தலைமையாசிரியர் அவர்கள்,
நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி,
பெரம்பலூர்
(திருச்சி மாவட்டம்)

15. கூட்டங்கள்பற்றி அறிக்கை எழுதி நிகழ்ச்சி நிரலைப் பதிவு செய்துவைத்தல்

(1) பொதுக்கூட்ட அழைப்பிதழ்

நார்த்விக் மகளிர் உயர் நிலைப் பள்ளி
இராயபுரம், சென்னை.
மாணவிகள் கழகம்.

அன்புடையீர்,

எங்கள் பள்ளி மாணவிகள் கழகச் சார்பில் நாளை வியாழனன்று (11-9-1958) மாலை 4 மணிக்குப் பள்ளிக்கூட மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடும். அப்பொழுது நாவலர் சோம

சுந்தர பாரதியாரவர்கள் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கள் "பெண்களும் தமிழ்த் தொண்டும்" என்பதுபற்றிப் பேசுவார்கள். எல்லா மாணவிகளும் வந்து கேட்டு இன்புறுமாறு வேண்டுகின்றேன்.

இராம. இன்பவல்லி
கழகச் செயலாளர்.

நிகழ்ச்சி நிரல்

கடவுள் வணக்கம் :	ந. சண்பகவல்லி
வரவேற்புரை :	செயலாளர்
தலைவர் முன்னுரை :	நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரவர்கள்
சொற்பொழிவு :	
பெண்களும் தமிழ்த்தொண்டும்:	ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கள்
முடிவுரை :	தலைவரவர்கள்
நன்றிகூறல் :	செயலாளர்

(2) இளங்கோ மன்றம், தில்லை இலக்கியச் சொற்பொழிவுகள்

அன்புடையீர்,

நமது இளங்கோ மன்றக் கட்டட மண்டபத்தில் நாளை சனிக்கிழமை (18-10-1958) மாலை 5 மணிக்கு, திரு. டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில், சென்னைக் கிரித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. பூ. ஆலால சுந்தரனார் எம். ஏ., அவர்கள், நிகழ்ச்சிநிரலிற் கண்டுள்ளபடி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தமிழறிஞர் அனைவரும் வந்து கேட்டுப் பயன் எய்துமாறு வேண்டுகின்றோம்.

இளங்கோ மன்றம்,
தில்லை.

க. வேல்முருகன்,
மன்றச் செயலாளன்.

நிகழ்ச்சி நிரல்
(18-10-1958)

மாலை

5-00	கடவுள் வணக்கம் :	திரு. செந்தில்வேள் அவர்கள்
5-15	வரவேற்புரை :	திரு. க. வேல்முருகன் அவர்கள்
5-30	தலைவர் முன்னுரை :	திரு. டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள்
6-00	சொற்பொழிவு திருக்குறள்-தமிழ்ப் பொதுமறை :	திரு. பூ. ஆலாலசுந்தரனார்.
7-30	தலைவர் முடிவுரை :	தலைவரவர்கள்
8-00	நன்றி கூறல் :	செயலாளர்.

(3) கம்பர் கழகம்

ஓர் அவசரப் பொதுக் கூட்டம்

அன்புடையீர்,

தென்னாப்பிரிக்காவிலிருந்து தமிழ்ப் பேரறிஞர் திரு. மயில்வாகனனார் சென்னை வந்துள்ளார். நமது கழக வளர்ச்சிக்குரிய வழி வகைகளையும், கம்பரைப்பற்றிய ஆராய்ச்சியுரையையும் அவர் பால் கேட்க அவசரக் கூட்டம் கூட்டப்படுகிறது. நாளை புதனன்று (22-10-1958) இரவு 8 மணி முதல் 10 மணிவரை அவர் பேசுவார். கழக உறுப்பினரும், தமிழறிஞரும் தவறாது வரவேண்டு கிறேன்.

இடம்: ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மண்டபம், சைதாப்பேட்டை.

15, பால்வண்ணர் தெரு, சைதாப்பேட்டை. } ***இராம. செந்தமிழரசு,*** செயலாளன்.

(4) மாணவர் கழக ஆண்டுவிழா

அன்புடையீர்,

நமது விழுப்புரம் உயர்நிலைப்பள்ளி, தமிழ் மாணவர் கழக ஆண்டு விழா நாளை வெள்ளியன்று (10-4-59) பிற்பகல் 4மணிக்கு நமது பள்ளி மண்டபத்தில் நடைபெறும். அப்பொழுது நமது மாகாண முன்னாள் முதலமைச்சர் உயர்திரு. ***ஓ. பி. இராமசாமி ரெட்டியார்*** அவர்கள் தலைமை தாங்குவார்கள். அறிஞர் இருவர் சொற்பொழி வாற்றுவர். அனைவரும் வந்து விழாவினைச் சிறப்புற நடத்தித் தருமாறு வேண்டுகிறேன்.

நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி விழுப்புரம். } ***மதியழகன்,*** செயலாளன்.

பேசுவோர்:

1. புலவர் துரைவேலனார்.— "நமது தமிழக வளர்ச்சி"
2. புலவர் பொன்னேதுவார்.—"தமிழகத்தின் எதிர்கால வாழ்வு"

16. கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் எழுதுதல்

பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெறும் ஒவ்வொரு கூட்டத்திலும் நடக்கும் நிகழ்ச்சிகளையும் செயலாளர் சுருக்கமாய் எழுதிவைத்து, அடுத்த கூட்ட முதலில் படித்துக் காட்டுதல் வழக்கம். இவ்வாறு படித்துக் காட்டும் பொருள்

அறிக்கை எனப்படும். **செந்தமிழரசு** என்னும் 10ஆம் வகுப்பு மாணவன், தம் பள்ளித் தமிழ் மாணவர் கழகச் செயலாளன். அவன் வரைந்துள்ள அறிக்கை ஒன்று இங்குத் தரப்படுகிறது. இதுபோன்ற அறிக்கைகளை வரையப் பிள்ளைகள் பழகுதல் வேண்டும்.

வேலூர் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளித்

தமிழ் மாணவர் கழகம்

இக்கழகச் சார்பில் சென்ற ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் மாலை 4மணிக்குக் கழக இரண்டாம் கூட்டம், பள்ளித் தலைமையாசிரியர், உயர்திரு. தெய்வசிகாமணி முதலியார் பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் கூடியது. மாணவர்கள் மயிலைநாதன், பரிமேலழகன் என்பவர்கள் முறையே கடவுள் வாழ்த்தும், தமிழ்த்தாய் வணக்கமும் பாடினர். பின்னர் கழகச் செயலாளர் சென்ற முதற்கூட்ட அறிக்கையைப் படித்துக் காட்டினர். தலைவர் மாணவர் கழகத்தின் தேவையைப்பற்றி முன்னுரையாகப் பேசினர். பிறகு மாணவர் மயிலைநாதன் என்பவர், "மாணவர் பொதுநலத் தொண்டு" என்பதுபற்றிப் பேசினர். முதியோர்க்குக் கல்வி வழங்கல், ஓய்வு நாட்களில் சேரி மக்கட்கு எழுத்தறிவித்தல், உடல் நல வழிகளைப் புகட்டல், விழாக் காலங்களில் பொதுமக்கட்குச் சாரண இயக்கத்தில் சேர்ந்து உதவி புரிதல் போன்ற துறைகளில் மாணவர்கள் பொதுநலத் தொண்டு செய்யலாம் என்று பேசினர். தலைவர் தமது முடிவுரையில் பேச்சாளர் கூற்றுக்களை உளமாரப் பாராட்டி, "அத்தகைய துறைகளில் நீங்கள்

தொண்டு செய்வீர்களாயின், நமது சமூகம் விரைவில் முன்னேற்றம் பெறும்'' என்று கூறினர். பின்னர் கழகச் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

செப்டம்பர் 15, 1958

க. வெற்றிவேல்,
செயலாளர்.

17. தீர்மானங்களை நல்ல முறையில் எழுதி அமைத்தல்

நேற்று மயிலாடுதுறை உயர்நிலைப்பள்ளி மண்டபத்திற் கூடிய தஞ்சை மாவட்டத் தமிழ் மாணவர் மாநாட்டிற்கு டாக்டர் அ. சிதம்பர நாதன் செட்டியார் எம். ஏ., பிஎச். டி. அவர்கள் தலைமை தாங்கினர்கள். அவ்வமயம் "உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் விடுமுறை நாட்களில் தங்கள் ஊரைச் சுற்றியுள்ள சிற்றூர்கட்குச் சென்று, சிற்றூர் மக்கட்குக் கல்வியின் தேவை, சுகாதார அவசியம், உலகச் செய்திகள், தமிழ்நாட்டு வரலாறு, பயிர்த்தொழில், கிராமக் கைத் தொழில்கள் முதலிய இன்றியமையாத பொருள் களைப் பற்றிச் சொற்பொழிவாற்ற வேண்டும். இத்தொண்டு தமிழ் மாணவர் செய்யத் தகும் பெருந் தொண்டாகும். ஒரு கிராமத்திற்கு அறுவர் வீதம் செல்லுதல் நல்லது. இது தஞ்சை மாவட்ட மாணவர் மாநாட்டுத் தீர்மானமாகும்'' என்னும் ஒரு தீர்மானம் ஒருமனமாக நிறைவேற்றப் பட்டது.

மாநாட்டுச் செயலாளர் மறுநாள் அத்தீர் மானத்தைப் பல படிகள் எடுத்து எல்லாச் செய்தித் தாள்களுக்கும் அனுப்பினர். தஞ்சை

மாவட்டத்தில் உள்ள எல்லாப் பள்ளித் தமிழ்க் கழகச் செயலாளர்க்கும் அனுப்பினர். மாநாட்டு நோட்டுப் புத்தகத்திலும் தீர்மானம் பதிவு செய்யப் பட்டது.

பிள்ளைகளே, இத்தகைய பல தீர்மானங்களைத் தயாரித்தல், அவற்றைக் கூட்டங்களிலோ, மாநாடு களிலோ படித்து விளக்குதல், அவற்றைச் செய்தித் தாள்கட்கும் பிற இடங்கட்கும் அனுப்புதல் என்னும் இத்துறைகளில் நீங்கள் நன்கு பயிற்சி பெறுதல் வேண்டும். தமிழன்னை உங்களை வாழ்த்துவாளாக!

பயிற்சி

கீழ்வரும் பொருள்கள்பற்றிக் கடிதங்கள், அழைப்பிதழ்கள் முதலியன வரைக :

1. பொறியியல், கைத்தொழில், கணிதம் இவற்றுள் ஒன்றை விருப்பப் பாடமாக எடுத்தமைக்குரிய விளக்கம்.

2. உங்கள் ஊரில் உள்ள வேறொரு தமிழ்க் கழக விழாவில் கலந்து தொண்டாற்ற வருவதைக் குறிப்பிடும் கடிதம்.

3. ஊரில் நடக்கும் 'முதியோர் கல்வி மாநாடு' ஒன்றிற் கலந்துகொண்டு தொண்டாற்ற விரும்பும் தமிழ் மாணவர் வரையும் கடிதம்.

4. பெற்றோரை இழந்த ஏழை மாணவன் படிக்க விரும்பித் தன் ஊர்ச் செல்வர் ஒருவர்க்கு எழுதும் கடிதம்.

5. உனது கழக ஆண்டு விழாவுக்குரிய முன்னேற்பாடுகள் செய்வதுபற்றிக் கழகத் தலைவருக்கு எழுதும் ஒரு கடிதம்.

6. உங்கள் மாணவர் கழகப் பொதுக்கூட்ட அழைப்பிதழ்.

7. மாணவர் கழகச் சார்பில் அவசரக் கூட்ட அழைப்பிதழ்.

8. மாணவர் கழக அல்லது இளைஞர் கழக ஆண்டு விழா அழைப்பிதழ்.

9. மாணவர் கழகத்தின் முன் கூட்டத்து அறிக்கை.

10. மாணவர் கழகக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களைச் செய்தித் தாள்கட்கு எழுதி யனுப்புதல்.

18. வாழ்க்கை வசதிகள் சில வேண்டி ஊரவர் எழுதும் கூட்டு விண்ணப்பம்

(1) தனிப்பட்டவர் அல்லது ஒரு தொகுதி யினர் தம் பொதுநல முயற்சிக்கு அரசியலாரது ஒத்துழைப்பை வேண்டுதல்.

9, இராமசாமித் தெரு,
பெத்துநாய்க்கன் பேட்டை,
சென்னை-1.
10-8-1959

சென்னைப் பெத்து நாய்க்கன் பேட்டைப் பொதுநலக் கழகத்தார், நகராண்மைக் கழகத் தலைவர்க்கு விடுக்கும் வேண்டுகோள் :

அன்புள்ள ஐயா,

நாங்கள் வாழும் பெத்துநாய்க்கன் பேட்டை யின் கீழ்ப்பகுதி மூலையில் நேற்றிரவு எதிர்பாரா வகையில் தீப்பிடித்துக்கொண்டது. அங்கு ஏழை கள் பலர் சிறுசிறு தென்னங் கீற்றுக் குடிசைகள் அமைத்து வாழ்ந்திருந்தனர்; ஆதலின் தீ விரை வில் குடிசைகளைப் பற்றியது. தீப்பிடித்த காரணம் தெரியவில்லை. இருபத்தைந்து குடிசைகள் எரிந்து சாம்பலாகிவிட்டன; உயிர்ச் சேதம் இல்லை.

நாங்கள், வீடிழந்தவர்களை எங்கள் பகுதியில் உள்ள பள்ளிக்கூடத்தில் தங்கவைத்திருக்கின் ரேம்; அவர்களுக்கு மீண்டும் குடிசைகளைப் புதி யனவாகக் கட்டித் தரவும், அதுவரை உண வளித்துவரவும் எங்கள் பேட்டையிலுள்ள செல்வர் களின் உதவியையும் நாடியுள்ளோம்.

புதிய குடிசைகள் கட்டித்தரும் முயற்சியிலும், அதுவரை அவர்களுக்கு வேண்டும் உணவளிக்கும்

முயற்சியிலும் எங்களுடன் ஒத்துழைத்து ஆதரவு அளிக்குமாறு நகர சபையாரை வேண்டுகின்றோம். தாங்கள் உடனே இங்கு வந்து ஏழைகள் நிலைமையை நேரிற் கண்டறிந்து, போதிய பண உதவி செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
பா. கந்தசாமி,
செயலாளர்,
(பெத்துநாய்க்கன்பேட்டைப்
பொதுநலக் கழகம், சென்னை.)

(2) பள்ளிக்கூடம் திறக்க வேண்டுமென்று ஊராண்மைக் கழகத்தார் உதவி வேண்டுதல்.

15, அம்மன் கோயில் தெரு,
பல்லாவரம்,
12-8-1959.

ஊராண்மைக் கழகத் தலைவர் அவர்களுக்கு

அன்புமிக்க ஐயா,

நம் நாட்டில் கல்வியறிவு குறைந்திருப்பதனை முன்னிட்டு, அதனைப் பெருக்க அரசாங்கம் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு உழைத்து வருகிறது என்பது எனக்குத் தெரியும். அரசாங்கத்தின் விருப்பப்படி நம்மூரில் ஒரு துவக்கப் பள்ளிக் கூடம் திறந்து வைக்க நான் முடிவு செய்து, அதற்காகப் பதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள என் வீட்டை நன்கொடையாக அளித்துவிடுகிறேன். இந்த எனது முடிவை நேற்று நடைபெற்ற ஊர்ப் பொது மக்கள் மன்றக் கூட்டத்திலும் வெளியிட்டேன்.

தாங்கள் ஊராண்மைக் கழகத்திலிருந்தும், ஊர்ச் செல்வர்களிடமிருந்தும் பணம் சேர்த்து,

பள்ளிக்கூடத்தைத் திறந்து வைப்பதற்கான முயற்சியைச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் அன்புள்ள
கா. சின்னப்பன்,
(வைர வாணிகம்)

பயிற்சி

கீழ்க் காணப்படும் பொருள்களைப்பற்றிக் கடிதங்கள் வரைக:

1. உங்கள் ஊரில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையால் வீடிழந்து தவிப்பவர்க்கு உதவி செய்ய நாடும் ஊர்ப் பொது நலக் கழகத்தார், ஊராண்மைக் கழகத் துணையை வேண்டுதல்.

2. பள்ளி மாணவர் கழகத்தார் ஏற்படுத்த விரும்பும் கூட்டுறவுக் கடைக்கு ஊராண்மைக் கழகத்தாரிடம் இட வசதிதர வேண்டுதல்.

3. உங்கள் ஊரில் பொது நூல் நிலையம் வைக்க விரும்பும் செல்வர், நாட்டாண்மைக் கழகத்தின் உதவியை வேண்டுதல்.

4. உங்கள் ஊரில் இரவுப் பள்ளிக்கூடம் ஒன்று அமைக்க விரும்பும் பொதுநலக் கழகத்தார், நகராண்மைக் கழகத்தாரிடம் பண உதவி வேண்டுதல்.

5. ஏழைகளுக்குப் பணம் வாங்காமல் மருத்துவ உதவி அளிப்பதற்காக, உங்கள் ஊரில் ஏற்படுத்திய மருத்துவ நிலையத்திற்கு, நாட்டாண்மைக் கழகச் செலவில் இரண்டு மருத்துவச்சிகளை அனுப்பித்தர வேண்டுதல்.

6. உங்கள் பேட்டைப் படிப்பகத்திற்கு நாட் செய்தித் தாள்கள் இரண்டு வாங்கப் பண உதவி புரியுமாறு நகராண்மைக் கழகத்தாரை வேண்டுதல்.

19. (1) திருமண வாழ்த்து வரைதல்

அன்புள்ள நண்பர் திரு. தில்லையம்பலம் அவர்கட்கு, வணக்கம். தங்கள் செல்வன் சேரலாதன் திருமண அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

நம்பி திருவளர் செல்வன் சேரலாதனும், நங்கை திருவளர் செல்வி அங்கயற்கண்ணியும் நன்மணம் புணர்ந்து, பாலும் சுவையும்போல் ஒருமித்துப் பல்வளமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம் :
தங்களன்புள்ள நண்பன்,
த. முருகவேள்.

(2) திருமண வாழ்த்து இதழ்

மணமகன் :	மணமகள் :
திருவளர் நம்பி	திருவளர் நங்கை
மா. தமிழ்ச்செல்வன்	தாமரைச்செல்வி

திருமணம் நிகழுமிடம் :

ஆயிரவர் சத்திரம், திருத்தணிகை.

அறிவும் ஆற்றலும் அமைவுறக்கொண்ட அரும்பெறற் செல்வ !

"தோன்றிற் புகழொடு தோன்றுக" எனும் வள்ளுவன் வாக்கிற்கு இலக்கியமாய், சென்னை நகரிற் சிறந்து விளங்கும் திரு. சாத்தப்பச் செட்டியாரவர்தம் திருக்குமரனாய்த் தோன்றினை; பன்மொழியும் பாங்குறக் கற்றுச் செந்தமிழ்ப் புலமை சிறக்கப்பெற்றனை; அன்பு அருள் அடக்கம் நடுநிலை எனும் நற்பண்புகளை நலமுறக்கொண்டனை; தந்தைக்கேற்ற மைந்தனாய், தறுகணாளனாய்த் தகு புகழ்பெற்றனை. எம்மரு நண்ப! நின் திருமணக் கோலங்கண்டு பெருமகிழ்வெய்துகின்றோம். நற்குண நற்செயல் நிரம்பிய நல்லாள் தாமரைச் செல்வியைக் கைப்பிடித்தனை; மலரினும் மென்மை

யுடைத்து மங்கையருள்ளம். அது வாடாது வதங்காது காத்து, மகிழ்ச்சியால் மலரச் செய்து, நலம் பல பெறுக என நின்னை வாழ்த்துகின்றோம்.

அன்புருவாகும் பொற்புடைப் பாவாய்!

“நாடு நலம்பெறல் நல்லார் தவத்தால்” என்பர் ஆன்றோர். நற்பண்புகள் பலவும் ஒருங்கே அமையப்பெற்ற அன்னை திருவாட்டி மாணிக்கத் தம்மையாரவர்கள் மணிவயிற்று, திரு. கண்ணப்பச் செட்டியாரவர்தம் திருமகளாய்த் தோன்றினை; பெற்றோர் பெயர் சிறக்கப் பல்வகை நலனும் பெற்றனை; எம் கெழுதகை நண்பராகிய திருவளர் நம்பி தமிழ்ச்செல்வனை மணாளனாய்க் கொண்டனை; நின் பிறந்த குடியின் புகழையும், புகுந்த குடியின் புகழையும் சிறக்கச் செய்து, கற்புடை மங்கைக்குக் கணவனே தெய்வம் என்பதை உளங்கொண்டு, இல்லறம் நடாத்தி இனிதே இலங்குக என வாழ்த்துகின்றோம்.

நன்மணம் புணர்ந்த நல்லீர்!

இல்லறமாம் நல்லறத்தை மேற்கொண்டீர்; இவ்வுலகம் என்பது, இன்பம் துன்பம் இரண்டுங் கலக்கப்பெற்றதேயாகும். இல்வாழ்வெனும் இன்பப் பாதைக்கண் கூர்முள்ளும், பருக்கைக் கற்களும், பரந்தெரி தீயும், கடுவிசைக் காட்டாறும் இடையிடையே தோன்றக்கூடும். அவை கண்டு கலங்காது திண்ணிய உரத்துடன் நகமும் சதையும் போல், தமிழும் இசையும்போல் கலந்து இருவீரும் ஒருவீராய் இல்லறச் சகட்டினை இனிதே உருட்டி, சான்றோர் போற்றும் சால்புடையீராய், என்றும் இன்றேபோல் இன்புற்றுப், பதினறு பேறுகளையும்

பாங்குறப் பெற்றுச் சிறக்க என வாழ்த்து கின்ருேம்.

வாழ்க மணமக்கள்! வாழ்க வாழ்கவே.

இங்ஙனம்:
அன்புடை நண்பர்
திரு. வி. க. மன்றத்தார்.
10-11-1958

பயிற்சி

உன் நண்பனுக்குத் திருமண வாழ்த்து ஒன்று எழுதுக.

20. செய்யுள் நலன் பாராட்டுதல்

நலம் பாராட்டுதலாவது செய்யுளிலுள்ள பொருளழகு, சொல்லழகு, யாப்பமைதி ஆகியவற்றை எடுத்து விளக்கிப் பாராட்டுதலாகும்.

அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டப்போகும் போது, கோசிகமுனிவன் அரிச்சந்திரனை நோக்கி, "எனக்குத் தந்த நாட்டினைத் 'தரவில்லை' என்று (பொய்) சொல், உன் நாட்டை உனக்கே தந்து விடுகிறேன்" என்று சொன்ஞன். அப்போது, அரிச்சந்திரன் கோசிகரை நோக்கி:

1. "சேய்மை யண்மையில் உயிர்க்கொரு
துணையெனச் சிறந்த
வாய்மை யாலகம் தூய்மையாம்;
மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலால்;
சொல்லின்வே றுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே
நோன்பெமக் கறிதி.

2. புலைய னும்விரும் பாதஇப்
புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினும்
நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம்
பிறழ்வது தரியேம்;
கலையு ணர்ந்தநீ எமக்கிது
கழறுவ தழகோ?

3. இம்மை யம்மைவீ டெனமறை
புலங்கொள இயம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத்
தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிநீ
டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினும்
மெய்ம்மையை விடேமால்

4. பதியி ழந்தனம்; பாலனை
யிழந்தனம்; படைத்த
நிதியி ழந்தனம்; இனிநமக்
குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை
இழக்கிலேம்" என்ருன்;
மதியி ழந்துதன் வாயிழந்
தருந்தவன் மறைந்தான்.

I

1. உடலைத் தூய்மை செய்வது நீர் என்பது யாவருமறிந்த உண்மை; இதை உவமையாகக் கொண்டு உள்ளத்தைத் தூய்மை செய்வது வாய்மை யென்பதை விளக்குகின்ருன். நீரைத்

தவிர்த்து வேறெதுவும் உடலைத் தூய்மை செய்ய உதவாது என்பதைக்கொண்டு, வாய்மையைத் தவிர்த்து வேறெதனுலும் உள்ளத்தைத் தூய்மை செய்ய முடியாது என்பதை விளக்குந் திறம் வியக்கத்தக்கது.

2. இப்பிறப்பு மறுபிறப்பு என்ற இரண்டிலுமே உயிர்க்குச் சிறந்த துணையாவது வாய்மை என்பதனுல் வாய்மையைக் கடைப்பிடிப்பதன் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்ருன்.

3. "நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பு எமக்கு அறிதி" என்பதனுல் 'முனிவனே, நீ இதுவரை எமக்குச் செய்த தீமைகள் அளவிறந்த கொடுமையுடையன; இனி, மேலும் எவ்வளவுதான் கொடுமை செய்தபோதிலும் யாங்கள் வாய்மையை விடமாட்டோம் என்பதை அறிவாயாக என்பதனுல் முனிவனது புன்மையையும், அரிச்சந்திரன் சந்திரமதி ஆகியவரின் உறுதியின் திறத்தையும் புலப்படுத்தியவாரும்.

II

1. **புலையனும்** விரும்பாத என்றதனுல் மக்கட் பிறப்பின் அருவருப்பினையும், **நிலையெனு மருண்டு** என்றதனுல் உடலின் அழிவினையும் விளக்கி, **உயிரினும்** நெடிதுறச் சிறந்த **தலைமை சேர்தரு** சத்தியம் என்றதனுல் சத்தியத்தின் உயர்வினை விளக்கி, இழிந்த ஒன்றுக்காக உயர்ந்த ஒன்றை இழக்க ஒப்பமாட்டோம் எனும் திறம் எண்ணி மகிழத் தக்கது.

2. **கலையுணர்ந்த** நீ எமக்கிது கழறுவ **தழகோ**—என்பதனுல் கல்வி யறிவுடையோன்,

தானும் நல்வழியில் நடந்து மற்றவரையும் நல்வழி யிற் செலுத்தவேண்டியவன். அவ்வாறு செய்ய வேண்டிய நீ என்னை வாய்மை தவறச் சொல்வது உனக்கோ, நீ கற்ற கல்விக்கோ அழகாகுமோ? என்று இடித்துக் கூறும் நயம் உணர்ந்து மகிழத் தக்கது.

III

இப்பிறப்பு மறுபிறப்பு வீடு என்ற மூன்றையும் தருவது மெய்ம்மை; இந்நிலை ஒருகாலும் மாருது. அப்படி மாறி எம்மைத் தனது ஆழ்ந்த வயிற்றுக் குள் அடக்கிக்கொண்டு, திருப்பி உமிழாத-எரியும் படியான வாயினையுடைய கொடுமை மிக்க-நரகத் தில் தள்ளுவதாயிருந்தபோதிலும் யாங்கள் மெய்ம் மையை விடோம் என்பதனுல் அவர்கள் வாய்மை யில் கொண்டிருந்த பற்றும், வாய்மை காத்தற் பொருட்டு எவ்வளவு கொடிய துன்பமாயினும் தாங்கக் கூடியவர் என்பதும் அறியலாம்.

IV

பதி, பாலன், நிதி இம்மூன்றும் இவ்வுலக வாழ்வுக்கு இன்றியமையாதன. நற்கதி அழியாதது; இவ்வுலக வாழ்வுக்குப்பின் கிட்டுவது. வாய்மை யுடையார் உறுதியாக நற்கதியினைப் பெறுவர் என் பதற்காக இழக்கினும் என்ருன். இவ்வுலக வாழ்வுக் குத் தேவையான நாடு (அரச வாழ்வு), குழந்தை, செல்வம் மூன்றையும் அழித்துவிட்டீர்; உம்மால் முடிந்தால் அழிக்கப்படாமலிருக்கும் அந்த நற் கதியும் எமக்குக் கிட்டாமற் செய்துகொள்ளும். அதுபற்றி யாம் கவலைப்படோம் என்பான் நற்கதி யிழப்பதாயினும் மெய்ம்மையை இழக்கமாட்டோம் என்று கூறினுன்.

I. *சேய்மை யண்மை* - இணை முரண் தொடை. *வாய்மை* யாலகம் **தூய்மை**யாம் - பொழிப்பெதுகை. **தூய்மை** செய்வது நீரலால் - பொழிப்பு நெடில்மோனை. நோய்மை செய்யினும் வாய்மையே - பொழிப்பொதுகை. **நோய்மை** செய் யினும் வாய்மையே - **நோன்பு** ஒரூஉமோனை.

II. புலையனும் - இழிவு சிறப்பும்மை. புலைய னும்விரும் பாதஇப் புன்புலால் - ஒரூஉமோனை. நிலையெ னுமருண் டுயிரினும் நெடிதுற - ஒரூஉ மோனை. தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது - முரண் தொடை. கலையு ணர்ந்தநீ எமக்கிது கழறு வது - ஒரூஉமோனை.

III. இம்மை அம்மை வீடு - கூழைமுரண். மும்மை யுந்தரும் எனுநிலை *முரணி* - முரண் தொடை. வெம்மை கூர்நர குய்க்கினும் மெய்ம்மை. ஒரூஉவெதுகை.

IV. பதியி ழந்தனம் பாலனை - பொழிப்பு மோனை. கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலோம் - முரண்தொடை.

பயிற்சி

உன் பாடப்புத்தகத்திலுள்ள சிறந்த பாடல்களைப்பற்றிய நலத்தைப் பாராட்டி எழுதிப் பழகுக.

21. உரையாடல்

ஒரு பொருளைக் குறித்து இரு வேறு கருத் துடையவர் தம்முள் சொற்போர் நிகழ்த்துவதாக அமைத்தலும், ஒரு பொருளைக் குறித்து உண்மை யறிய விரும்பும் ஒருவர் ஐயவினா எழுப்ப, மற்றவர் அதற்கு விடையளித்தலும் உரையாடல் எனும் வகையில் அடங்கும்.

ஒரு பொருள்பற்றிய இருவகைக் கருத்துக்கள்

(பள்ளியில் தொழிற்கல்வி கட்டாயப் பாடமாகத் தேவை—தேவையில்லை)

கண்ணன்: கட்டாயப் பாடம் தேவையில்லை என்பவன்.

கமலம்: கட்டாயப் பாடம் தேவை என்பவள்.

கண்ணன்: அக்கா, எங்கள் பள்ளியில் கைத்தொழிற் கல்வியை விருப்பப் பாடமாக வைத்துள்ளனர்.

கமலம்: அப்படியா? அது தவறு.

கண்ணன்: தவறு? விருப்பப் பாடமாக இருப்பதுதான் நல்லது. விருப்பம் உள்ளவர் தொழிற்கல்வி பெறலாம்; விருப்பம் இல்லாதவர் வேறு பாடங்களைப் படிக்கலாம் என்று இருத்தலே நல்ல முறை என்று பலரும் பேசுகின்றனரே!

கமலம்: தம்பி, அஃது ஒரு வகையில் பொருத்தமான வாதம்; முற்றும் சரியன்று. தொழிற்கல்வி கற்பிப்பதன் நோக்கம், தொழில் இன்னது என்பதை அனைவரும் அறிந்திருத்தல் நல்லது என்பதே. வெறும் புத்தகப் படிப்பேதான் இதுவரை எல்லாப் பள்ளிகளிலும் இருந்து வந்தது. அதனால் நாடு அடைந்த பலன் யாது? படித்தவர் தொகை பெருகிற்று; ஆனால் பிழைக்க வழி தெரிந்தவர் தொகை பெருகவில்லை. அஃதாவது ‘பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது’ என்பதுபோல ஏட்டுக்கல்வி எல்லோருக்கும் பிழைப்புக்கு வழி காட்டவில்லை. அதனால் வேலையில்லாதவர் தொகை

பெருகிற்று. கணக்கற்ற குடும்பங்கள் வறுமைப் படலாயின. ஒரு சமுதாயத்தின் இளங்கொழுந்துகள்—எதிர்காலத்தில் இந்நாட்டின் குடிமக்களாக இருக்கத்தக்கவர்—தொகை இவ்வாறு வறுமைப் படின், நாடு எவ்வாறு உயர்வுபெறக்கூடும்? பதினுன்காண்டுகள் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றும், அப்படிப்பு, பிழைப்புக்கு வழிகாட்ட வில்லையாயின், அதனுல் பயன் யாது? இதனை நன்கு ஆராய்ந்தே காந்தியடிகள் கல்வித் திட்டத்தையே மாற்றியமைக்கவேண்டும் என்று திட்டமிட்டார். ஏட்டுக்கல்வியும், கைத்தொழிற்கல்வியும் கலந்து புகட்டப்படின் பள்ளியையோ, கல்லூரியையோ விட்டு வெளிவரும் பிள்ளைகள், வேலை கிடைக்கவில்லையாயின், தொழில் செய்தேனும் பிழைக்க வழியுண்டு.

கண்ணன்: நீ கூறுவது சரிதான். ஆனுல் கட்டாயத் தொழிற்கல்வி வேண்டுவதில்லையே!

கமலம்: கண்ணு, 'நீ கைத்தொழிற்கல்வி நமக்குத் தேவையில்லை; நாம் அப்பாவைப்போல வேலை பார்க்கலாம்' என்று நினைத்து உன் விருப்பம் போல வேறு பாடத்தைப் படிப்பதாகக் கொள்வோம். நீ பி. ஏ. பட்டம் பெற்றவுடனே வேலை கிடைக்கவில்லை. அப்பொழுது நீ என்ன செய்வாய்! அதே சமயத்தில் தொழிற்கல்வியிற் பயிற்சி பெற்ற உன் வகுப்பு மாணவன் வேலையைப்பற்றிக் கவலைப்படாமல் தான் கற்ற தொழிலைச் செய்ய முனைவான்; பொருள் ஈட்டுவான். 'ஐயோ, நாம் அப்பொழுது தொழிற்கல்வியிற் பயிற்சி பெறத் தவறினேமே. இப்பொழுது வேலையின்றித் தவிக்கிறேமே!' என்று நீ கவலைப்பட நேரும்; தொழிற்

கல்வி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படின் எல்லோரும் நலம் பெறுவர் அன்ருே? கண்ணு, அதனை நன்கு எண்ணிப் பார்.

கண்ணன்: அக்கா, நீ சொல்வது சிறந்த கருத்தே யெனினும், பட்டம் பெற்ற பிறகு எல்லோருமே வேலையின்றித் தவிப்பார்கள் என்று கூறமுடியுமா? அதைக் கருதித் தொழிற்கல்வியைக் கட்டாயமாக்க வேண்டுமா?

கமலம்: தம்பீ, நான் கூறுவது அதைமட்டும் கருதியன்று. ஒவ்வொரு மனிதனும் ஒரு தொழிலிலே அறிவு படைத்தவனுதல் வேண்டும். வேலை கிடைக்கவில்லையாயினும், கிடைத்த வேலை நிலைக்கவில்லையாயினும், வயிற்றுப் பிழைப்பு நடைபெற வேண்டுமே! அதற்கென்ன செய்வது? ஏதேனும் ஒரு தொழிலில் திறமை பெற்றிருத்தல் கையிருப்புப் போன்றதன்ருே? அக்கையிருப்பு வேலை உன்னை அடிமைத்தனத்திலிருந்து நீக்கும்; உரிமை மனிதனுக்கும்; ஏறுபோல் பீடுநடை கொள்ளச் செய்யும்; மான வுணர்ச்சியைக் கொல்லாமற் காக்கும். வேலை செய்துகொண்டே நீ கற்ற தொழிலையும் ஓய்வு நேரத்திற் செய்து வருமானத்தைப் பெருக்கலாம். இத்தகைய பல நலன்களைச் செய்யும் தொழிற் கல்வி கட்டாயமாய்க் கற்பிக்கப்படல் வேண்டும் என்பது என் கருத்து. கண்ணு! படிக்கும் பெண்களை எடுத்துக்கொள். அவர்கள் திருமணம் செய்துகொண்டு கணவருடன் வாழ்பவர்கள். கணவன் ஏழை; வேலை செய்கிருன்; அவன் திடீரென்று இறந்துவிடுகிருன். அவன் மனைவியின் கதி என்னவாகும்? அவள் ஏட்டுக்கல்வி கற்றவள். திடீரென்று வேலை கிடைக்குமா?

வேலை கிடைக்கும்வரை அவள் என்ன செய்வாள்? அவள் பள்ளியில் ஏதேனும் ஒரு தொழிற் பயிற்சி பெற்றிருப்பின், எளிதில் அத்தொழில் செய்ய இறங்குவாள் அல்லளோ? அத்தொழில் அவளை ஒருவாறு காக்கக் கூடுமன்றோ? நம் நாட்டில் பின்னல், நூல் நூற்றல், கைத்தறியில் நெய்தல், கூடை முடைதல், பூமாலை கட்டுதல், சமக்காளம் பின்னுதல், தையல் வேலை, நெட்டி வேலை, சரிகை(லேஸ்)பின்னுதல், களிமண் வேலை முதலிய பல சிறிய கைத்தொழில்களைச் செய்து கணக்கற்ற பெண்கள் பிழைக்கிறார்கள் என்பதை நீ உணர வேண்டும். இங்ஙனம் ஆடவரை நோக்கினும், பெண்களை நோக்கினும் தொழிற் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டுவது என்பதில் ஐயமே உண்டாகாது.

கண்ணன்: அக்கா, நீ கூறியன யாவும் உண்மையே. ஆனால் அலுவலர் மகன் தச்சுவேலை, ஆடை நெய்தல் முதலிய வேலைகள் செய்ய விரும்புவானா? விரும்பினும் அவனால் எளிதில் கற்க முடியுமா? தச்சன் மகனுக்கன்றோ தச்சு வேலை எளிதாக விளங்கும்?

கமலம்: தம்பி, நீ நினைப்பது சரியன்று. அரசியல் அலுவல் போன்றவை, தொழிலைப்போல உரிமையுடையனவல்ல. அரசியல் அலுவல் வாழ்வு அடிமை வாழ்வு; தொழில், உரிமை வாழ்வைத் தரும். அரசியல் அலுவல் செல்வ வளத்தைத் தராது; தொழில் செல்வ வளத்தைத் தரும். நாட்டில் செல்வராயிருப்பவர் தொழில்செய்பவரே தவிர, அலுவலர் அல்லர். ஆதலால் **பயிர்த்தொழில் கைத்தொழில் என்பவை பிற அலுவல்களைவிடப் பன்மடங்கு சிறந்தவை.**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

என்னும் **தமிழ்மறையை** எண்ணிப்பார். இத்தகைய உயர்ச்சியைத் தரும் **தொழிற் கல்வியை அனைவரும் கற்கவேண்டும்.** இஃது அனைவர்க்கும் எய்ப்பினில் வைப்புப் போன்றது; உற்றுழி உதவி புரிவது.

மேலும் இன்ன தொழில் இன்னவர் தாம் செய்ய வேண்டும் என்னும் வரையறை இருத்தல் முறையன்று. சலவைத் தொழிலாளி மகன் சலவைத் தொழிலாளியாகவே இருத்தல் வேண்டுமா? அங்ஙனம் இருப்பின் அச்சமூகம் உயர்நிலை அடைவது எப்பொழுது? தொழிலாளி மகன் படித்து அரசியல் அலுவல் செய்யலாகாதா? இப்பொழுது அத்தகையோர் சிலர் அரசியல் அலுவல் செய்துகொண்டிருக்கின்றனரே. தொழிலைப் பரம்பரை உரிமையாகக் கொண்டதாற்றான் உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லாத சாதிகள் நம் நாட்டில்மட்டும் ஏற்பட்டு வேரூன்றி, இன்று சமுதாய வாழ்க்கையின் அடிப்படையிலேயே அமைதியின்மையை உண்டாக்கிவிட்டது. அதனாற்றானே காந்தியடிகள் போன்றோர் **தொழில்களை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டும்** என்பதை வற்புறுத்தினர்; இன்றும் வற்புறுத்தி வருகின்றனர். இந்த நாடு முன்னேற வேண்டுமாயின், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமாயின், எல்லோரும் எவ்வித வேறுபாடும் இன்றி அவரவர்க்கு விருப்பமான ஒரு கைத்தொழிலை நன்கு கற்பதுதான் சிறந்த வழியாகும். ஆகவே, பள்ளிகளில் எல்லோரும் கட்டாய

மாகத் தொழிற் கல்வியில் பயிற்சி பெறும் திட்டமே நமது நாட்டுக்கு ஏற்றது.

கண்ணன்: அக்கா, எனக்கு இப்பொழுது தான் உண்மை விளங்குகிறது. நான் தொழிற் கல்வியில் பயிற்சி பெறுவேன்.

பயிற்சி

பின்வரும் செய்தியைப்பற்றிய இருவகைக் கருத்துக்களை யும் உரையாடல் வடிவத்தில் வரைக:

1. உயர்தரக் கல்வி பெண்களுக்குத் தேவை—தேவை யில்லை.
2. பெண்களும் எல்லா அரசியல் அலுவல்களையும் செய்யலாம்.—செய்யலாகாது.
3. பள்ளித் தேர்வுகள் வேண்டும்—வேண்டாம்.
4. எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிற் கற்பித்தல் ஏற்றது—ஏற்றதன்று.
5. கைத்தறி நெசவு வேண்டும்—ஆலை நெசவு வேண்டும்.
6. கட்டாயப் படைக்கலப் பயிற்சி மாணவர்க்கு வேண்டும்—வேண்டாம்.

22. பத்திரங்கள் (உரிமுறி)

பத்திரங்கள் குத்தகைப் பத்திரம், விற்பனைப் பத்திரம், குடிக்கூலிப் பத்திரம், அடைமானப் பத்திரம் முதலாகப் பலவகைப்படும்.

குத்தகைப் பத்திரமாவது ஒருவர் மற்றவரது நிலம், வீடு போன்ற பொருள்களில் ஒன்றைத் தமது தேவைக்காக எடுத்துக்கொள்ளுங்கால், அங்ஙனம் எடுத்துக்கொள்பவர், பொருளுக்கு உரியவருக்கு எழுதிக் கொடுக்கும் பத்திரம்.

(1) குத்தகைப் பத்திரம்

1959ஆம் ஹு மார்ச்சுத் திங்கள் 7ஆம் நாள் செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரிக் கூற்றம்,

காட்டுப்பாக்கம் ஊரிலிருக்கும் மா. நல்லப்ப முதலியார் குமாரன், ந. மறைமலை முதலியார், ஷை மாவட்டம், ஷை கூற்றம், அத்திப்பட்டு என்னும் ஊரிலிருக்கும் தா. வெள்ளையப்ப நாயக்கர் குமாரர் வெ. செந்தில்வேள் நாயக்கருக்கு எழுதிக்கொடுத்த குத்தகைப் பத்திரம்:

யான் தங்கட்கு உரியதும் தங்கள் அனுபோகத்திலும், உரிமையிலும் இருப்பதுமாகிய காட்டுப்பாக்கத்தில் உள்ள சர்வே எண் C/108 நன்செய் நிலம் ஐந்து ஏக்கரையும் என் சொந்தத்தில் பயிர் வைக்கப் பெற்றுக்கொள்ளுகின்றேன். போகம் ஒன்றிற்கு 40 மூட்டை நெல் தட்டாது தங்களிடமேனும் தங்கள் உத்தரவு பெற்றவர்களிடமேனும் அளப்பேனாகவும். நிலத்தைத் தரிசு போடாமல் சிறந்த முறையில் பயிரிட்டு வருவேனாகவும். இன்றைய நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளில் தங்கள் நிலத்தைத் தங்களிடம் ஒப்படைத்து விடுவேனாகவும்.

இப்படிக்கு யான் இசைந்து எழுதித் தந்த குத்தகை உரிமுறிச் சீட்டு.

ந. மறைமலை முதலியார்
7-3-'59

சாட்சிகள்
மு. பழநியப்ப நாயக்கர்
தெ. வேலு முதலியார்
நா. திருமூலம்பிள்ளை

இக்குத்தகைச் சீட்டை எழுதியது காட்டுப்பாக்கம் கர்ணம் நா. திருமூலம் பிள்ளை.

ந. திருமூலம்பிள்ளை
7-3-59'

(2) விற்பனைப் பத்திரம்

நிலம், வீடு முதலாய பொருளை ஒருவர் மற்றொருவருக்கு விற்குங்கால் எழுதித் தரும் பத்திரம் விற்பனைப் பத்திரம் எனப்படும்.

கிருத்து ஆண்டு 1959ஆம் ஸு மார்ச்சு மீ 12ஆம் நாள் செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரிக் கூற்றம் மீஞ்சூர் கிராமத்திலிருக்கும் சிவ மதம் வேளாண்குலம் நா. அழகப்ப முதலியார் குமாரன் கதிர்வேல் முதலியார், ஷை மாவட்டம், ஷை கூற்றம், புதுப்பாக்கம் கிராமத்திலிருக்கும் விஷ்ணு மதம் வைசியகுலம் பொ. நரசிம்ம செட்டியார் குமாரன் கோவிந்தராச செட்டியாருக்கு எழுதிக் கொடுத்த விற்பனைப் பத்திரம்.

யான் என் மூத்த மகள் வள்ளியம்மையின் திருமணச் செலவிற்காக என் சொந்த சம்பாத்திய மானதும், யான் அனுபவித்து வருவதுமாகிய மீஞ்சூர் வட்டம் சர்வே எண் D280 உள்ள ஒரு ஏக்கர் நன்செய் நிலத்தைத் தங்கட்கு ரூபாய் 2000க்கு (ரூபாய் இரண்டாயிரத்துக்கு) விற்பனை செய்து, ரூபாய் இரண்டாயிரமும் பெற்றுக்கொண்டேன். இன்று முதல் அந்நிலத்தைத் தாங்கள் அனுபவித்துக்கொள்ளவும். நிலம்பற்றி ஏதும் வில்லங்கமில்லை. அப்படி ஏதேனும் நேர்ந்தால் அதற்குண்டாகும் செலவுத் தொகையைக் கட்டித் தந்து, அதைத் தீர்த்து வைப்பேனாகவும், இப்படிக்கு யான் முழு மனத்துடன் உடன்பட்டு எழுதித் தந்த விற்பனைப் பத்திரம்.

நிலத்தின் விவரம்: செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரிக் கூற்றம், மீஞ்சூர் வட்டம் சர்வே எண் D280. இராஜன் வாய்க்காலுக்குத் தெற்கு,

நாகப்ப நாயக்கர் நிலத்திற்கு வடக்கு, கன்னியப்ப முதலியார் நிலத்திற்கு மேற்கு, கருப்பண்ண முதலியார் நிலத்திற்குக் கிழக்கு. இவற்றிற்குள்ளிட்ட நன்செய் ஒரு ஏக்கர். சர்வே எண் D280.

இப்படிக்கு,
அ. கதிர்வேல் முதலியார்,
12—3—'59.

சாட்சிகள் :
(1) த. பொன்னுவேல் கவுண்டர்.
(2) வெ. சாத்தப்பச் செட்டியார்.
(3) சு. கண்ணப்பப் பிள்ளை.

இவ்விற்பனைப் பத்திரம் எழுதியது மீஞ்சூர் கர்ணம் சு. கண்ணப்பப் பிள்ளை.

சு. கண்ணப்பப் பிள்ளை
12—3—'59.

(3) குடிக்கூலி ஒப்பந்தப் பத்திரம்

கிருத்து ஆண்டு 1959ஆம் ௵ சனவரி ௴ 8ஆம் நாள் சென்னை, முத்தியாலுப்பேட்டை, நல்லப்பச் செட்டித் தெரு, 30ஆம் எண் இல்லத்திலிருக்கும் கோவிந்தராசக் கோனூர் மனைவியார் தனலட்சுமி அம்மாள், சென்னை, தண்டையார்ப் பேட்டை, கோதண்டபாணிச் செட்டித் தெரு, 10ஆம் எண் இல்லத்திலிருக்கும் வேலுச் செட்டியார் குமாரன் வீரண்ணச் செட்டியாருக்கு எழுதிக் கொடுத்த குடிக்கூலி ஒப்பந்தப் பத்திரம்.

சென்னை, முத்தியாலுப்பேட்டை, இராமசாமித் தெருவிலிருக்கும் 20ஆம் எண்ணுள்ள தங்கள் வீட்டை மாதம் ரூபாய் முப்பது குடிக்கூலிக்கு 8—1—'59 முதல் ஐந்து ஆண்டுகட்கு எடுத்துக்

கொள்கின்றேன். தற்போது முன்பணமாக ரூபாய் 150 (நூற்றைம்பது) தந்துள்ளேன். மாதந்தோறும் குடிக்கூலி செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்வேனுகவும், வீட்டை எந்த விதமான சேதத்திற்கும் உள்ளாக்காமல் பார்த்துக்கொள்வதுடன் ஆண்டு ஐந்து ஆனவுடன் வீட்டைத் தங்களிடம் ஒப்படைத்துவிடுவேனுகவும். இப்படிக்கு யான் சம்மதித்து எழுதிக் கொடுத்த குடிக்கூலி ஒப்பந்தப் பத்திரம்.

கோ. தனலட்சுமி அம்மாள்

சாட்சிகள் :

(1) குழந்தைவேல் செட்டியார்.

(2) முருகப்ப முதலியார்.

பயிற்சி

குடிக்கூலிப் பத்திரம், விற்பனைப் பத்திரம், குத்தகைப் பத்திரம், நிலவாரப் பத்திரம் போன்றவற்றை எழுதிப் பழகுக.

மொழிப் பயிற்சி

1. வாக்கியம்—பொது இலக்கணம்

தனி—தொடர்—கலவை வாக்கியங்கள்

நாம் பேசும்போதும் எழுதும்போதும் முழுக் கருத்துக்கள் அடங்கிய (பல சொற்களைக் கொண்டுள்ள) சொற்றொடராகப் பேசுகின்றோம்; எழுதுகின்றோம். பல சொற்கள் சேர்ந்து பொருள் முடிந்து நிற்பதை முற்றுச்சொற்றொடர் என்றும், பொருள் முடியாது நிற்பதை எச்சச்சொற்றொடர் என்றும் கூறுவோம். முற்றுச்சொற்றொடர் வட

மொழியில் வாக்கியம் எனப்படும். பல முற்றுச் சொற்றொடர் சேர்ந்தது ஒரு **பத்தி** (Para) ஆகும். பல பத்திகளைக் கொண்டது ஒருகட்டுரை. ஆகவே கட்டுரை எழுதுவதற்கு **முற்றுச்சொற்றொடர் அமைப்பு** நமக்குத் தெரிதல் வேண்டும்.

தனி வாக்கியம்

கீழ்வரும் முற்றுச்சொற்றொடர்களைப் படித்துப் பாருங்கள் :

(1) தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் அனைவரும் தமிழர் எனப்படுவர்.

(2) பண்டைக் காலத்துத் தமிழர் வாழ்ந்து வந்த நாடு தமிழகம் எனப் பெயர் பெற்றது.

(3) தமிழகத்தை முற்காலத்தில் சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவேந்தரும் ஆண்டு வந்தனர்.

இவற்றுள் **எழுவாய்** ஒவ்வொன்றும் **ஒவ்வொரு வினைமுற்றையே** (பயனிலையையே) பெற்றுத் தனித் தனியாய் வந்துள்ளது. இங்ஙனம் ஓர் எழுவாய் ஒரே வினைமுற்றைப் பெற்றுத் தனித்து முடியும் வாக்கியங்களைத் **தனி வாக்கியங்கள்** என்னலாம்.

தொடர் வாக்கியம்

கீழ்க்கண்ட வாக்கியங்களையும் படியுங்கள் :

(1) கண்ணன் கடைக்குப் போனான்; ஆறணா கொடுத்தான்; ஒரு புத்தகம் வாங்கினான்.

(2) முருகன் காலையில் எழுந்தான்; கடவுளைத் தொழுதான்; நீராடினான்; பாடங்களைப் படித்தான்.

இவ்வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும், ஓர் எழுவாய்க்கே ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகள் வந்து, ஒன்றுக்கு மேற்பட்ட தனிவாக்கியங்களைப்போல்

அமைந்திருப்பினும், இவை யாவும், ஒரே வாக்கிய மாக ஒன்றுபட்டுப் போய்விட்டன. எனவே, ஒரே எழுவாய் (ஒன்றுக்கு மேற்பட்ட) பல பயனிலை களைக்கொண்டு தனித்தனியான வாக்கியங்களைப் போன்று இருப்பினும், அவை ஒன்றுபட்டுத் தொடர்ந்து ஒரே வாக்கியமாக வந்தால், அத் தொடரைத் **தொடர் வாக்கியம்** எனலாம்.

அடுத்து வரும் வாக்கியங்களையும் கவனியுங்கள் :

கலவை வாக்கியம்

(1) பண்டைத் தமிழரசர் நாட்டை நீதிமுறை வழுவாது ஆண்டு வந்தனர் என்பதைச் சங்கத்துச் சான்றோர்கள் நூல்களிலிருந்து நன்றாய் உணர்ந்து கொள்ளலாம்.

(2) பாண்டிய நாட்டின் பெரும்பகுதியைக் கடல் கொண்டதன்பின், பாண்டியன் வடக்கே வந்தான் என்று தமிழ் நூல்கள் தெளிவாய்க் கூறி னும், சிலர் இதை ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்.

இவற்றுள் எச்சத்தொடர்கள் வந்து, தனி-தொடர் வாக்கியங்களும் கலந்து வருவதால் இவற் றைக் **கலவை வாக்கியங்கள்** என்னலாம்.

2. வாக்கியப் பொருத்தம்

எந்த வாக்கியமாக இருந்தாலும், அதில் உள்ள எழுவாய், பயனிலையோடு திணை, பால், எண், இடங்களில் பொருத்தமாக முடியவேண்டும்.

1. திணைப் பொருத்தம்

1. கீழ்க்கண்ட வாக்கியங்களைப் படித்துத் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களைக் கவனியுங்கள் :

(1) **புரவலர்கள்** புலவர்களை அக்காலத்தில் நன்கு **போற்றினர்.**

(2) தமிழ்நாட்டுப் **பெண்கள்,** கல்விக்கே அன்றிக் கற்புக்கும் அணிகலன்களாக **விளங்கு கின்றனர்.**

(3) நன்**மாணுக்கர்** காலந்தவருமல், பொழு தோடே பள்ளிக்கூடத்திற்கு **வருவர்.**

(4) **தமிழ் மாணவர்கள்** தம் தமிழாசிரியர் பால் மிகுந்த அன்பும் நன்மதிப்பும் உடையவர் **களாய் இருக்கிருர்கள்.**

இவற்ருல் **உயர்திணையில்** உள்ள எழுவாய்கள் உயர்திணைப் பயனிலைகளையே கொண்டு முடியும் என்பதை அறிந்தோம்.

2. (1) இந்த **மரம்** பூத்துக் காய்த்துப் பழுத் துக் **குலுங்குகிறது.**

(2) இம்**மருந்து** அவர் நோய்க்கு மிகவும் **ஏற்றதாகும்.**

(3) இந்த ஆண்டு **மழை** சரியாகப் **பெய்தது.**

(4) நன்றியறிவைக் காட்டுவதற்காக **நாய்** தன் வாலை **ஆட்டிற்று.**

இவற்றிலிருந்து, அஃறிணையில் உள்ள எழு வாய்கள் அஃறிணைப் பயனிலைகளைக் கொண்டு தான் முடியும் என்பதை அறியலாம்.

3. இனி, கீழ்வரும் எடுத்துக்காட்டுகளையும் கவனியுங்கள் :

(1) **தம்பியும் நாயும் வந்துவிட்டார்கள்.**

(2) **அரசனும்** நால்வகைச் **சேனைகளும்** மிக விரைவில் முன்னேறிச் **சென்ருர்கள்.**

இவற்றிலிருந்து உயர்திணை அஃறிணை எழு

வாய்கள் இரண்டும் கலந்து வந்து ஒரு முடிவு கொள்ளும்போது, சிறப்பு நோக்கினல் உயர்திணை வினைகொண்டு முடியும் என்பதை அறியலாம்.

4. (1) பேதையும் நாயும் வந்தன.

(2) மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.

இவற்றிலிருந்து உயர்திணை அஃறிணை எழுவாய்கள் சேர்ந்து வரும்போது, இழிவு குறித்தால், அவ்விருதிணை எழுவாய்களும் அஃறிணை வினையைக்கொண்டு முடிதலும் அறிக.

5. (1) விலங்குகளில் நரியும், மனிதர்களில் குள்ளனும், பெண்களில் வேலைக்காரியும் தந்திரமுள்ளவர்களாய் இருப்பார்கள்.

(2) அடக்கமுடைய அரசன், ஆசிரியன், பாம்பு என்னும் இவரை உருவாற் சிறியவர் என்று இகழக்கூடாது.

இவை முறையே இருப்பார்கள், சிறியவர் என்னும் ஒரு திணைக்குரிய சொற்களையே ஏற்று வருதலை நோக்குங்கள். இதனல், இருதிணைப் பெயர்கள் பல விரவி வருமாயின், அவை மிகுதி (பெரும்பான்மை) பற்றி ஒருதிணைச் சொல்லைக் கொண்டு முடியும் என அறிக.

2. பால், எண், இடப் பொருத்தங்கள்

1. அவன் சென்ருன்
2. அவள் சென்ருள்
3. அவர் சென்ருர்
4. அது சென்றது
5. அவை சென்றன
6. நான் சென்றேன்
7. நாம் சென்ருேம்
8. நாங்கள் சென்ருேம்
9. நீ சென்ருய்
10. நீர் சென்றீர்
11. நீங்கள் சென்றீர்கள்

என்ற எடுத்துக்காட்டுகளில் 1இல் உள்ள எழுவாய் உயர்திணை, படர்க்கையிடம், ஆண்பால், ஒருமை எண்ணும், 2இல் உள்ள எழுவாய் உயர் திணை, படர்க்கையிடம், பெண்பால், ஒருமை எண்ணும், 3இல் உயர்திணை, படர்க்கை, பலர் பால், பன்மை எண்ணும், 4இல் அஃறிணை, படர்க்கை, ஒன்றன்பால், ஒருமை எண்ணும், 5இல் அஃறிணை, படர்க்கை, பலவின்பால், பன்மை எண்ணுமாய் அவ்வவ்விடத்திற்கும், திணைக்கும், எண்ணுக்கும், பாலுக்கும் ஏற்ற பயனிலைகளைக் கொண்டு முடிந்தன. 6இல் தன்மை இடம் ஒருமை எண்ணும், 7, 8இல் தன்மையிடம் பன்மை எண்ணும், 9இல் முன்னிலையிடம் ஒருமை எண்ணும், 10, 11இல் முன்னிலையிடம் பன்மை எண்ணுமாய் அவ்வவ்விடத்திற்கும் எண்ணுக்கும் ஏற்ற பயனிலைகளைக்கொண்டு முடிந்தன. எனவே தன்மை முன்னிலை என்ற இடங்களில் ஒருமை பன்மை எண்களிலும், உயர்திணை அஃறிணைப் படர்க்கை இடங்களில் ஆண் பெண் பலர் ஒன்று பல என்னும் பால்களிலும் வரும் எழுவாய்கள், அவ்வத் திணையில் இடங்களுக்கும் பாலுக்கும் எண்ணுக்கும் உரிய பயனிலைகளிலேயே முடியவேண்டும் என அறிக. இதுவே எண், பால், இடப் பொருத்தமாம்.

3. மரியாதைப் பொருத்தம்

1. அரசர் வந்தார்.
   அரசியார் வந்தார்.
   ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்.
   அம்மா குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்.

அப்பா ஊருக்குப் போயிருக்கிருர்.
ஒருவர் வந்தார்.
அவர் நல்லவர்.

என்ற இடங்களிற் போல "*அரசர் அரசியார்*" முதலிய சொற்கள் ஆண்பால் பெண்பால்களாய் உயர்திணை ஒருமையை உணர்த்தி நிற்பினும் அவை, உயர்வு கருதிப் பலர்பால் விகுதியில் வருவதும் உண்டு. இவை போன்றவை *மரியாதைப் பொருத்தம்* ஆகும்.

2. அவர்கள் வருகிருர்கள்.
அரசர்கள் செங்கோல் வழுவாமல்
நாட்டை ஆளுகிருர்கள்

என்ற இடங்களில் அவர் வருகிருர், அரசர் ஆளுகிருர் என்பனவே பன்மையைக் குறிக்கப் போதுமாயினும், மரியாதைக்காக, ஒருமை பன்மையாக வருவதினின்றும் வேறு பிரித்துக் காட்டி, இவை பன்மையே எனத் தெளிவாகக் கூற, "**அர் ஆர்**" என்னும் பலர்பால் விகுதிகளோடு "**கள்**" என்னும் மற்ருெரு விகுதியும் சேர்க்கிருேம்.

3. எழுத்துப் பிழையும்—திருத்தமும்

பெரு வழக்காய் வரும் எழுத்துப் பிழைகள்

சில எடுத்துக் காட்டுகள்: கீழ்வருவன உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் கட்டுரைப் புத்தகங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவை. பிழைகளைப் பொருளும் இடமும் நோக்கித் திருத்துக:

1. ர, ற வேறுபாடு அறியாமையால் நிகழ்ந்தவை

உறிய
திரவுகோல்
வரலாரு
வறலாரு
உறையாடும்
சறியாக
இறவு
ஒவ்வொறு
மறியாதை
பிருணி
கறுதப்பட்டு
வறுகிறது
நிறம்பிற்று
உறைநடை
நெறுக்கம்
பெறுமை
கவறுவது
தவராகும்
கைவிறல்களில்
கூறைவீடு
நவருத்திரி
பிருமணன்
சுதேசமித்திறன்
சிருவர்
பெறியோர்
உருப்பு
நன்ராக
ஆறம்பம்
சுறுக்கம்
எல்லோறுக்கும்
தெறியாமல்
பேசுகிறான்
சிரந்தது
நிரைய
அரிவு
முரம்
துரந்தார்
செய்தியைஅரிந்தான்
ஏரினன்

2. ல, ழ, ள வேறுபாடு அறியாமையால் நிகழ்ந்தவை

கதிரவன் ஒழி
வலரும்
மகலுக்கு
கிளத்தி
தெழிவு
தாளாட்டு
நல்லிரவு (நடு இரவு)
அவள் வந்தால்
பளங்கள்
விளுங்கினர்

சோலை
அளிவாள்
பளக்கம்
வளிகள்
அளிப்பவை (destory)
வாள்க்கை
குலத்தில் (நீர் நிலை)
கிலைகள்
ஏராலம்
கோலை

மகான்கல்
நீலமான (long)
வேழை (காலம்)
விழங்கினார்
அவைக்கலம்
கேழ்வி
எங்கல்
பத்திரிகைகல்
மாலை வேலை
ஆலப்பட்டு

3. ந, ன, ண வேறுபாடு அறியாமையால் நிகழ்ந்தவை

இரன்டு
சன்டை
உன்டாகின்ற
தோண்றி
கற்பணாசக்தி
பேனுவது
தன்டனை
வன்டி
வன்தனர்
நன்பன்
பன்து
மான்தர்
தன்தையின்
ஐன்து
ஒண்று
உன்டாகின்றன

மூண்று
வென்னீர்
திருவல்லிக்கேனி
பண்ணிரண்டு
தன்னீர்
உன்ன (சாப்பிட) வேண்டும்
என்னை (oil)
என்னி
தொன்னூறு
காரனம்
கலியானம்
கனக்கு
கருனை (அருள்)
நண்று

4. (*1*) ஷ, ஸ, க்ஷ, ஜ போன்ற வட எழுத்துக்களைச் சரியாக வழங்கத் தெரியாமையாலும், தமிழ் முறைப்படி மாற்றத் தெரியாமையாலும் நிகழ்ந்தவை:

சாட்க்ஷி	வைச்சணவர்கள்	பாசை
பக்ஷிணி	வய்ஷ்ணவர்கள்	ஜீரகம்
பக்சினி	பஷகணம்	கிருச்ணன்
பச்சினி	பக்சணம்	பச்சம்
விசயங்கள்	பச்சணம்	விஜயம் [(செய்தி)
புஸ்பம்	பாழை	ஜூடு

(**2**) வடசொற்களிலும் திசைச் சொற்களிலும் றகரத்தை எழுதுவதால் நிகழ்வன (பெரும்பாலும் ரகரமே வரும்):

ருமசாமி	உறுமால்	ஈஸ்வறன்
பிருமணன்	குறுமா	மகாறிஷி
அபருதம்	நாருயணன்	கிறுஷிகன்

5. மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்தை வல்லினமாக எழுதுவதால் விளையும் பிழைகள் சில:

அவற்	குதிற்	கவற்	எதிற்
ஊற்	மலற்	சுவற்	வெதிற்

6. (1) மொழியிடையில் வரும் '*ற்*' '*ல்*' '*ள்*' மெய்கள், வேறு எந்த மெய்யோடும் இணைந்து வாரா; உயிர் மெய்யோடுதான் இணையும். இரட்டித்தால் றகர, லகர, ளகரங்களாகத்தான் (உயிர் மெய்யாகத்தான்) இரட்டிக்கும். இதனை அறியாமல் மாணவர் செய்யும் பிழைகள் சில காண்க:

கற்க்கும்	கல்த்தரை
சிற்ப்பி	வில்த்தொழில்
விற்ப்பான்	புல்ப்பூண்டு
தோற்க்கும்	ஆள்த்தலை
முயற்ச்சி	கோள்ச் சொன்னன்
பயிற்ச்சி	ஆள்ப்பட்டான்
போல்த்தோன்றும்	

(2) இவை இணைந்தால் கீழ்க்கண்டவாறு பிற உயிர்மெய்யோடுதான் வரும்; அல்லது இரட்டித்தால், தம் உயிர்மெய்யோடுதான் இணையும்:—

ற்

கற்க	நாற்றம்	மற்றெல்லாம்
சிற்பி	காற்றடி	கற்றேன்
விற்பான்	விற்றன்	தோற்றேன்
தோற்கும்	வெற்றிலை	அற்றை நாள்
முயற்சி	முற்றின	மற்றையவர்
பயிற்சி	கற்றீர்	மற்றென்று
கற்பித்தான்	மாற்றீர்	உற்றெருவர்
பொற்கொல்லன்	சிற்றூர்	பெற்றோர்
உற்சவம்	கற்றாண்	கற்றோர்
குற்றம்	சிற்றெறும்பு	உற்றார்

ல்

(3) கல்வி வெல்க நல்குக
முதலியன போல் வரும்.

ள்

(4) கொள்வல் கொள்கை வேள்வி கேள்வி
முதலியன போல் வரும்.

(5) இணைந்தால் அவ்வுயிர்மெய்யே இணையும்:—

ல்ல

வெல்லுதல்	கல்லீரல்	செல்லெனச் செல்லல்
வெல்லாமை	கொல்லை	சொல்லேன் எனல்
புல்லினம்	புல்லுக்கு	செல்லாக்கும்
நல்லினம்	நல்லூரன்	கொல்லோம்

ள்ள

(6)

வெள்ளம்	கொள்ளெனக் கொண்டான்
வெள்ளாமை	கொள்ளேன் என்றான்
வெள்ளி	கொள்ளைநோய்
வள்ளீ !	எள்ளொக்கும்
துள்ளும்	முள்ளோடு
உள்ளூர்	வள்ளுவர்

இவை போன்றே 'ன்', 'ண்', 'ழ்' களுக்கும் அறிக.

(7) மொழியிடையில் 'ர்'—"க், ச், த், ப், ந்" போன்ற மெய்களோடுதான் இணைந்து வரும்:—

வளர்க்க	உயர்ச்சி	உயர்ந்து
சர்க்கரை	சேர்த்து	அடர்ந்து
வளர்ச்சி	வளர்த்து	வளர்ப்போர்
பார்ப்பார்		

பிற பிழைகளின் வகைகளை, வரும்வழி அறிந்தும் ஆசிரியர்வாய்க் கேட்டும் உணர்க.

4. வாக்கிய முடிவுப் பிழைகளும்—திருத்தமும்

முன்னர், வாக்கியங்கள் எப்படித் திணை, பால், எண், இடங்களுக்கு ஏற்றவாறு எழுவாய், பயனிலை முதலியன ஒத்திருக்க வேண்டும் என்று படித்தீர்களோ, அப்படியின்றி அவை மாறி வந்தால் வாக்கியம் சரியாக முடிவு பெறுது; பிழைபடும். கீழே சரியான முடிவு இல்லாத சொற்றொடர்களை (வாக்கியங்களை)க் காண்பீர்கள்; அவற்றைத் திருத்துங்கள்; பிழை இல்லை என்றால் திருத்தாதுவிட்டு விடுங்கள் :—

(1) புரவலன் இரவலரைப் போற்றினர்.

(2) தமிழ் நாட்டுப் பெண்கள் கல்விக்கும் கற்புக்கும் அணிகலன்களாய் விளங்கினள்.

(3) நன்மாணுக்கர் காலந்தவறுமல் பள்ளிக் கூடத்தை விட்டு நீங்குவான்.

(4) இந்த மரம் பூத்துக் காய்த்துப் பழுத்துக் குலுங்கின.

(5) இம்மருந்துகள் நீர் கூறிய நோய்க்கு ஏற்றதாகும்.

(6) நான் உன்னைக் கண்டு ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டது.

(7) அவை இங்கே உள்ளது.

(8) நல்லவை அன்று.

(9) இது நல்லதுக்கு அல்ல.

(10) மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்.

(11) பேதையும் நாயும் வந்தனர். (இழிவுப் பொருளில்)

(12) தாய் தந்தையர், தாய்நாடு, தாய்மொழி என்னும் இவர்களிடத்துப் பற்று வைக்க வேண்டும். (மிகுதிப் பொருளில்)

(13) பாம்பு, அரசன், அடக்கமுடையான், ஆசிரியன் ஆகிய இவற்றை உருவாற் சிறியன என்று இகழக்கூடாது. (மிகுதிப் பொருளில்)

(14) அவன் வந்தார் நான் சென்றோம்
அவள் வந்தார் நாம் சென்றோம்
அவர் வந்தார் நீ சென்றீர்
அது சென்றன நீர் சென்றாய்
அவை சென்றது நீங்கள் சென்றீர்

(15) அரசியார் அரசரோடு வந்தாள்.

5. வாக்கிய மாற்றம்

1. தனி - தொடர் - கலவை வாக்கியம்

வாக்கியத்தின் பொது இலக்கணத்தையும், தனி, தொடர், கலவை வாக்கியங்களின் இயல்புகளையும் முன்பு படித்தீர்கள். இனிக் கீழ்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள் :—

(1) சங்க காலத்துப் புலவர் அகப்பொருள் பற்றிப் பாடினர்; புறப்பொருள்பற்றிப் பாடினர்; ஒவ்வொரு பொருளையும் எவ்வேழு திணைகளிற் பாடினர்.—இது மூன்று தனி வாக்கியங்கள் உள்ள தொடர் வாக்கியமாகும்.

(2) மறைமலை அடிகள் இனிய செந்தமிழ் நடையில் பேசுவார்; இனிய செந்தமிழ் நடையில் எழுதுவார்; செய்யுளும் இயற்றுவார்.—இதுவும் மூன்று தனி வாக்கியங்கள் உள்ள தொடர்வாக்கியமாகும்.

இவற்றை முறையே, (1) சங்க காலத்துப் புலவர் அகப்பொருள் புறப்பொருள் பற்றி, எவ் வேழு திணைகளில் பாடினர். (2) மறைமலை அடிகள் இனிய செந்தமிழ் நடையில் பேசவும், எழுதவும், செய்யுள் இயற்றவும் வல்லவர், எனத் தனி வாக்கியங்களாக மாற்றலாம். இதுபோன்றே தனி வாக்கியத்தைத் தொடர் வாக்கியமாகவும் மாற்றலாம். இவற்றின் பிறவகை மாற்றங்களை மேலே பார்ப்போம்.

2. செய்தி - வினா, உடன்பாடு - எதிர்மறை, நேர்கூற்று - அயற்கூற்று, செய்வினை - செயப்பாட்டு வினை, தன்வினை - பிறவினை வாக்கிய மாற்றம்

(திருப்புதல்)

(1) செய்தி - வினா

ஒரு கருத்தைத் தெரிவிப்பது **செய்தி வாக்கியம்**; ஒரு கருத்தை அறிய வினவுவது **வினா வாக்கியம்**. செய்தி வாக்கியத்தில் வரும் செய்தியை அறியவேண்டி, வினாவை ஈற்றிலோ, முதலிலோ போட்டு மாற்றினால் அது வினா வாக்கியமாக மாறிவிடும். வினா வாக்கியத்தில் உள்ள வினாவை நீக்கிவிட்டால் அது செய்தி வாக்கியமாக மாறிவிடும்.

உ - ம்:

பாண்டியன் தலைநகரம் மதுரை—செய்தி வாக்கியம்.
பாண்டியன் தலைநகரம் மதுரையா ?—வினாவாக்கியம்.
அப்பா கோபித்துக்கொண்டார்—செய்தி வாக்கியம்.
ஏன், அப்பா கோபித்துக்கொண்டார் ?
—வினா வாக்கியம்.

இதேபோல் செய்தியை வினுவாகவும், வினுவைச் செய்தியாகவும் மாற்றப் பழகுக.

(2) உடன்பாடு—எதிர்மறை

செயல் நடைபெற்றதை, அல்லது நடைபெறுவது தனக்குச் சம்மதமே என்பதைத் தெரிவிப்பது **உடன்பாட்டு வாக்கியம்.** செயல் நடவாமையைத் தெரிவிப்பது, அல்லது நடப்பது தனக்கு விருப்பமில்லை என்பதைத் தெரிவிப்பது **எதிர்மறை வாக்கியம்.** உடன்பாட்டு வாக்கியங்களில் ஒத்துக் கொண்டு 'ஆம்' என்று உடன்பட்டுக் கூறும் செய்திகளை, எதிர்மறுத்து 'இல்லை' என்று பொருள் படும்படி செய்தால் அவை எதிர்மறை வாக்கியங்களாக மாறிவிடும். எதிர்மறை வாக்கியங்களில், உள்ள,—எதிர்மறுக்கப்பட்டு 'இல்லை' என்று கூறப்பட்ட—செய்திகளை, 'உண்டு' அல்லது 'ஆம்' என்று உடன்பாடு ஆகும்படி செய்தால் அவை உடன்பாட்டு வாக்கியங்களாக மாறிவிடுகின்றன.

உ - ம் :

பள்ளிக்கூடம் விட்டதற்குப் பிறகு பரந்தாமன் நேராக வீட்டிற்குப் போனுன்—உடன்பாடு.

பள்ளிக்கூடம் விட்டதற்குப் பிறகு பரந்தாமன் நேராக வீட்டிற்குப் போகவில்லை—எதிர்மறை.

பையன் தேர்வில் வெற்றி பெறவில்லை—எதிர்மறை.

பையன் தேர்வில் வெற்றி பெற்றுன்—உடன்பாடு.

இதேபோல் உடன்பாட்டை எதிர்மறையாகவும், எதிர்மறையை உடன்பாடாகவும் மாற்றப் பழகுக.

(3) நேர்கூற்று—அயற்கூற்று

ஒருவர் கூறியதை *மாற்றுமல் அப்படியே எடுத்துக்கொண்டு,* அதற்கு *மேற்கோள்* குறி

யிட்டு, நம் வாக்கியத்திற்குள் வைத்து எழுதுவது ***நேர்கூற்று வாக்கியம் எனப்படும்.***

உ-ம்: என் தமிழாசிரியர் ''இராமன் நல்ல பையன், நீ அவனை அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு வந்து, என்னைப்பார்,'' என்று நேற்றுக் கூறினார்.

இதில் ஆசிரியர் நேரே கூறிய பகுதி இரட்டை மேற்கோள் குறிக்குள் அடங்கியிருக்கிறது.

நேர்கூற்று வாக்கியத்தில் வரும் மேற்கோள் குறிகளை நீக்கிவிட்டு, நேர்கூற்றில் உள்ள தன்மைச் சொற்களைமட்டும் பொருள் மாருதபடி படர்க்கையிடத்திற்கேற்ப மாற்றி, முன்னிலையில் உள்ள சொல்லையும் தன்மைப்படுத்தி, என்று அல்லது என்னும் போன்ற இடைச் சொற்களைப் பெய்து எழுதினால் அஃது அயற்கூற்றாகும்.

உ-ம்: என் தமிழாசிரியர், இராமன் நல்ல பையன் என்றும், அவனை என்னோடு அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு வந்து தம்மைப் பார்க்கும்படியும் கூறினார்.

(1) இதில் நேர்கூற்றிலிருந்த 'நீ' என்னும் முன்னிலைச் சொல் நீக்கப்பட்டது. அதற்குப் பதில் 'என்னோடு' என்ற தன்மைச்சொல் சேர்க்கப் பட்டது; (2) 'என்னை' என்ற தன்மைச் சொல்லை நீக்கி 'தம்மை' என்ற படர்க்கைச் சொல் இடப் பட்டது; (3) 'பார்' என்ற சொல்லோடு 'படியும்' என்ற சொல்லைச் சேர்த்துப் 'பார்க்கும்படியும்' என்றாக்கி, (4) மேற்கோள்குறி நீக்கப்பட்டது.

அயலார் பேசியதை மாற்றி, நம் வாக்கியமாக எடுத்துக் கூறுவது அயற்கூற்று வாக்கியம் எனப்படும்.

உ-ம்: தகப்பனுர், வேலைக்கார இராமனைப் பார்த்து, கடைக்குப் போய் வாழைக்காயும் இலையும் வாங்கிக் கொண்டு வரும்படி கூறினுர்.—அயற்கூற்று.

தகப்பனுர் வேலைக்காரனைப் பார்த்துக் கூறும் செய்தி தொடங்கும் இடத்திலிருந்து அது முடியும் வரை மேற்கோள் குறியிட்டு, நீ என்று முன் னிலைப்படுத்தி, 'என்று கூறினுர்' என்று முடித் தால் அது நேர் கூற்ருகிவிடும்.

உ-ம்: தகப்பனுர் வேலைக்கார இராமனைப் பார்த்து, "இராமா! நீ கடைக்குப்போய் வாழைக்காயும் இலையும் வாங்கிக்கொண்டு வா," என்று கூறினுர்.—நேர்கூற்று.

இதேபோல் நேர்கூற்றை அயற்கூற்ருகவும், அயற்கூற்றை நேர்கூற்ருகவும் மாற்றிப் பழகுக.

(4) செய்வினை—செயப்பாட்டுவினை

செயல் (காரியம்) செய்பவர் கருத்தா எனப் படுவார். கருத்தாவை எழுவாயாகக்கொண்டு, கருத்தாவுக்குப் பயனிலையாக வரும் வினை செய் வினை எனப்படும். இதில் கருத்தாவால் செய்யப் பட்ட பொருள் செயப்படுபொருளாக வரும். கருத்தா எழுவாயாக வரும்.

உ-ம்: தச்சன் நாற்காலியைச் செய்தான்.

—இதில் நாற்காலி தச்சனுல் செய்யப்பட்ட பொருள்; ஆதலின் நாற்காலி என்பது செயப்படு பொருளாயிற்று. செய்தல் தொழிலுக்குக் கருத்தா தச்சன் என்பது; அக்கருத்தா இங்கு, செய்தான் என்ற பயனிலைக்கு எழுவாயாக நின்றது. செய் தான் என்ற வினை கருத்தாவின்மேல் நிற்றலால், இது செய்வினை எனப்படும். இனி,

உ - ம்: தச்சனல் நாற்காலி செய்யப்பட்டது.

—இதில் எழுவாயாக நின்ற கருத்தா மூன்றும் வேற்றுமைக் கருவிப் பொருளாயிற்று; செயப்படு பொருளாக நின்ற நாற்காலி இங்கு எழுவாயாக வந்தது; செய்யப்பட்டது என்ற வினை செயப்படு பொருளை எழுவாயாகப் பெற்றமையால் (செயப்படு பொருளின்மேல் நிற்கும் வினை ஆனமையால்), **இது செயப்பாட்டு வினை** எனப்படும்.

செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்க: (1) கருத்தாவோடு மூன்றும் வேற்றுமைக்குரிய ஆல் உருபினைச் சேர்க்கவேண்டும்; (2) செயப்படு பொருளிலுள்ள ஐ உருபை நீக்கிவிடுதல்வேண்டும்; (3) செய்வினையோடு படு என்ற துணைவினையைச் சேர்த்து, எழுவாய்க்குத் தக்கவாறு விகுதியை மாற்றவேண்டும்.

செயப்பாட்டு வினையைச் செய்வினையாக்க: (1) கருத்தாவின்மேல் உள்ள 'ஆல்' உருபை எடுத்துவிட்டு, (2) செயப்படு பொருளோடு 'ஐ' உருபைச் சேர்த்து, (3) பயனிலையிலுள்ள 'படு' என்ற துணைவினையை நீக்கிவிட்டு, (4) விகுதியை எழுவாய்க்குத் தகுந்தவாறு மாற்றவேண்டும்.

(5) தன்வினை—பிறவினை

கருத்தா தானே செய்யும் வினை ***தன்வினை*** எனப்படும்; கருத்தா தானே செய்யாமல் பிறரைச் செய்யும்படியாகச் செய்யும் வினை (பிறரைக் கொண்டு செய்விக்கும் வினை) *பிறவினை* எனப்படும்.

உ - ம்: கொற்றன் கோயில் கட்டினன்—தன்வினை.

கொற்றன் (பிறரை ஏவாமல்) கோயிலைத்

தானே கட்டினன்; ஆதலால் **கட்டினன்** என்பது **தன்வினையாயிற்று.**

உ - ம்: மன்னன் கோயில் கட்டுவித்தான்—பிறவினை.

மன்னன் கோயிலைத் தானே கட்டாமல் கொற்றனைக் கட்டும்படியாகச் செய்தான்; ஆதலால் **கட்டுவித்தான்** என்பது **பிறவினை.**

தன்வினையைப் பிறவினையாக்குங்கால் தன்வினைப் பகுதியோடு '**வி**' அல்லது '**பி**' என்ற பிறவினை விகுதியைச் சேர்க்கவேண்டும்.

உ - ம்: கட்டு - கட்டுவி; காண் - காண்பி.

சில தன்வினைப் பகுதியின் **வல்லொற்றை இரட்டித்தாலும்** பிறவினையாகும்.

உ - ம்: உருகு - உருக்கு; பெருகு - பெருக்கு.

சில தன்வினைப் பகுதியின் **மெல்லொற்றை வல்லொற்ருக்கினுலும்** பிறவினையாகும்.

உ - ம்: நெருங்கு - நெருக்கு; உடைந்தது - உடைத்தது.

பயிற்சி

1. செய்வினையைச் செயப்பாட்டுவினையாகவும், செயப்பாட்டுவினையைச் செய்வினையாகவும் மாற்றிப் பழகுக:

2. தன்வினையைப் பிறவினையாகவும், பிறவினையைத் தன்வினையாகவும் மாற்றிப் பழகுக.

6. நிறுத்தக் குறிகள் (முழுதும்)

நாம் பேசும்பொழுது சொற்களைத் தனித்தனியாகப் பேசுவதில்லை; சிலவும் பலவுமாய சொற்களை ஒன்றுசேர்த்தே பேசுகின்ருேம். ஆயினும் சொல்லப்படும் கருத்துக்களின் முடிவுக்கு ஏற்ப நாம் நிறுத்திப் பேசுகின்ருேம். எழுதும்பொழுது நிறுத்து

மிடங்களைக் குறிப்பிடுவதற்கெனச் சில குறிகளை இடுகின்றோம். இவ்வாறு பொருள் முடிவுக்கு ஏற்ப நிறுத்திப் பேசியும், எழுதியும் வருவதால் கருத்துக்களை ஒழுங்காகத் திரட்டல், வகைப் படுத்தல், வெளியிடல் முதலியவற்றைச் செய்ய முடிகிறது. பேசுவோர், பேசுவதைக் கேட்போர் ஆகிய எல்லோருக்குமே, தாம் பேசும் அல்லது கேட்கும் பொருளைத் தெளிவாக அறிந்து உள்ளத்து அமைத்துக்கொள்வதற்கு 'நிறுத்தல்கள்' இன்றி யமையாது வேண்டப்படுகின்றன. பேசும்பொழுது இவ்வாறு நிறுத்துவதை ஆங்கிலத்தில் இயற்கை நிறுத்தல்கள் (Natural pauses) என்பார்கள். எழுதும்போது அவற்றைச் சில குறிகளால் குறிப்பிட்டுக் காட்டுவதை ***நிறுத்தக் குறிகள்*** (Punctuation Marks) என்பார்கள்.

எவ்வெவ்விடங்களில் எவ்வெக்குறிகளை இடுதல் வேண்டுமென்பதை ஈண்டு அறிவோம்.

1. முற்றுப்புள்ளி (.)

1. நாளை மாலை நான் உன்னை வீட்டில் வந்து பார்க்கிறேன்.

   திருக்குறள் உலகப் பொது நூலாக விளங்குகிறது.

   தமிழ் மொழி ஓர் உயர்தனிச் செம்மொழி யாகும்.

மேலே உள்ள ஒவ்வொரு ***வாக்கியத்தின் முடிவிலும்*** புள்ளிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. வாக்கியங்கள் முற்றுப்பெற்றன என்பதைக் குறிக் கும் இப்புள்ளிகள் ***முற்றுப்புள்ளிகள்*** எனப்படும். இன்னும் எவ்வெவ்விடங்களில் இம்முற்றுப்

புள்ளிகள் வைக்கப்படும் என்பதைக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளால் உணர்க:

2. (1) திரு. அ. கார்மேகக் கோனூர் அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

(2) கி.மு. கி.பி., பி.எ., பி.ஓ.எல்.

மேலே காட்டப்பட்டுள்ள முகவரியின் முடிவிலும், சொற்குறுக்கங்களுக்குப் பின்னும் முற்றுப் புள்ளிகள் இடப்பட்டுள்ளன. எனவே ***முகவரியின் முடிவிலும், சொற்குறுக்கங்களுக்குப் பின்னும்*** முற்றுப்புள்ளிகள் வைக்கப்படவேண்டும் என்பதை அறிக.

3. இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,
ச. கந்தசாமி.

என்று ***கையெழுத்திற்குப் பிறகும்*** முற்றுப் புள்ளி வருதல் வேண்டும்.

4. தமிழ் கற்பிக்கும் முறைகள்.
இமயமலை அல்லது தியானம்.
முருகன் அல்லது அழகு.

என்பனபோன்ற ***தலைப்புக்களின் இறுதியிலும்*** முற்றுப்புள்ளிகள் இடலாம்.

5. கற்க. வாசல்.
ஓடாதே. எழுத்து.
உண்மை. தோட்டம்.

என்பனபோலச் ***சொற்கள் தனித்து நிற்கும் பொழுதும்*** முற்றுப் புள்ளி இடுவதுண்டு. முற்றுப் புள்ளி வைக்கப்பட்ட இடத்தில் ***நான்கு மாத்திரை நேரம்*** நிறுத்தியே படிக்கவேண்டும்.

(2) முக்காற் புள்ளி (:)

1. குற்றியலுகரம் :
எழுத்து :
நாடகம் :

மேற்காட்டியன போன்ற சிறு தலைப்புக் களுக்குப் பின் முக்காற் புள்ளியை இடவேண்டும்.

2. (1) உலகத்தில் இருளைப் போக்குவன இரண்டு: ஒன்று புறவிருளைப் போக்கும் ஞாயிறு; மற்றொன்று அகவிருளைப் போக்கும் கல்வி.

(2) போனால் வராதவை இரண்டு: ஒன்று உயிர்; மற்றொன்று மானம்.

மேற்காட்டிய இரண்டு எடுத்துக் காட்டுகளில், வாக்கியங்களில் கூறியவற்றை விரித்துக் கூறும் பொழுது, முக்காற் புள்ளிகள் இடப்பெற்றுள்ளன.

முக்காற் புள்ளி வந்துள்ள இடத்தில் மூன்று மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

3. அரைப் புள்ளி (;)

1. கல்வி கரையில; கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கின் பிணி பல.

மேலே காட்டப்பட்டுள்ள வாக்கியங்கள், 'நூலைக் கற்குங்காலும் ஆராய்ந்து கற்கவேண்டும்' என்னும் ஒருகருத்தை விளக்க வந்தவை. ஆகவே, இது போன்ற இடங்களில் அரைப்புள்ளிகள் வரும்.

2. காந்தியடிகளார் வாய்மையைக் கடைப்பிடித் தவர்; பிறர்க்கு இன்னா செய்யாதவர்; கடவுளன்பு உடையவர்; கொல்லாமையை மேற்கொண்டவர்.

மேலே காட்டப்பட்டுள்ள தொடர் வாக்கியத் தில் ஓர் எழுவாய்க்குப் பல பயனிலைகள் வந்துள்

என. அவ்வாறு வருங்கால் இடையே ***அரைப் புள்ளிகள்*** இடப்பட்டுள்ளன.

3. (1) தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.

(2) ஊசியைக் காந்தம் இழுக்கும்; உத்தமனை நட்பு இழுக்கும்.

என்பன போன்ற எடுத்துக் காட்டுவமைத் தொடர்களின் இடையே ***அரைப்புள்ளி*** இடல் **வேண்டும்.**

4. மேலும்,

இன்சொலால் உலகம் மகிழும்;
வன்சொலால் உலகம் மகிழாது.

என்பது போன்ற, உடன்பாடு, எதிர்மறைக் கருத்துக்களை ஒருங்கு கூறி முடிக்கும் தொடர் வாக்கியத்தின் இடையிலும் ***அரைப்புள்ளி*** வரும். அரைப் புள்ளிக்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

4. காற்புள்ளி (,)

1. நிலம், நீர், தீ, காற்று, வான்.
அறம், பொருள், இன்பம், வீடு.
சேர, சோழ, பாண்டியர்.

என்று பொருள்களை எண்ணும்பொழுது ***காற் புள்ளி*** இடவேண்டும்.

2. (அதியமான் இறந்தபொழுது)ஔவையார் அழுதார், அரற்றினர், விழுந்தார், விம்மினர்.— என ஓர் எழுவாய், தனி வினைமுற்றுக்களைப் பல பயனிலைகளாக ஏற்றுவரும்பொழுது ***காற்புள்ளி*** இடவேண்டும்.

3. நாம் நடந்ததை நடந்தவாறே கூறின், எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை.—என எச்சச் சொற்றொடரின் இடையில் **காற்புள்ளி** இட வேண்டும்.

4. எவன், யாவன், இராமனோ, ஏவன்—என வரும் பல எடுத்துக்காட்டுகளின் இடையில் **காற்புள்ளி** இடவேண்டும்.

5. இளையோர் முதியோர், கற்றவன் கல்லாதவன், செல்வன் வறியன், உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்று காலன் கருதமாட்டான்.—என இணைமொழிகளின் இடையில் **காற்புள்ளி** இடவேண்டும்.

6. உடம்பு, எவ்வளவு போற்றப்பட்டாலும், ஊர்முனி பண்டந்தானே.—என்று இடைப்பிறவைப்புக்கு முன்னும் பின்னும், **காற்புள்ளி** இட வேண்டும்.

7. ஔவையார், "மீதூண் விரும்பேல்", என்று கூறியுள்ளார். "கற்க கசடறக் கற்பவை," என்றார் திருவள்ளுவர்.—என்று மேற்கோட் குறிகளுக்கு முன்னோ பின்னோ **காற்புள்ளி** இட வேண்டும்.

8. (1) ஜவஹர்லால் நேரு நம் நாட்டின் மாபெருந் தலைவராவர். ஆதலால், அவர் சொற்படி நாம் நடக்கவேண்டும்.

(2) உண்மையைக் கடைப்பிடிக்குங்கால் பல இடையூறுகள் வரும். எனினும், அவற்றை எதிர்த்து நின்று வெற்றி பெற வேண்டும்.

இவற்றில் வரும் **ஆதலால், எனினும்** ஆகிய இணைப்புச் சொற்களுக்குப் பின்னும், இவை போன்ற **ஆகையால், என்றாலும், எனவே,**

ஆகவே, ஆயினும் என்பனவற்றிற்குப் பின்னும் **காற்புள்ளி** இடவேண்டும்.

9. திருமுகங்கள் எழுதும்பொழுது,

அன்புடையீர், ஐய, அன்பரீர், நண்ப என்பன போன்ற விளிகளுக்குப் பின்னும் **காற்புள்ளி** இடவேண்டும்.

10. "17, மோதிலால் தெரு, தியாகராயநகர்" என்று முகவரியில் குறிப்பிடும் வீட்டு எண், தெரு முதலியவற்றிற்குப் பின்னும் **காற்புள்ளி** இட வேண்டும்.

காற்புள்ளிக்கு ஒரு *மாத்திரை* நேரம் நிறுத்த வேண்டும்.

5. வினக்குறி (?)

நீ அதைச் செய்தாயா?

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை?

உலகில் பெரிய ஆறு எது?

நான் கேட்டுக்கொண்டபடி நீ நாளைக்கு வருவாயா?

என்பன போன்ற வினச் சொற்களைக் கொண்ட சொற்றொடர்களின் இறுதியில் **வினக் குறிகளை** இடவேண்டும்.

6. உணர்ச்சிக் குறி (!)

(1) வெற்றி பெற்றேம்! வெற்றி பெற்றேம்!
—மகிழ்ச்சி.

(2) என்னே இஃது! என்னே இஃது!
—வியப்பு.

(3) அந்தோ! இஃதென்ன கொடுமை!
—இரங்கல்.

(4) பாம்பு! பாம்பு! —அச்சம்.

(5) திருடன்! திருடன்! —ஐயம்.

(6) இளமான்காள்! மயில்காள்! மடப்பிடி காள்! —விளி.

(7) அண்ணுவோ! அண்ணுவோ!—அழுகை.

(8) உன்னை விட்டேனு பார்! —சினம்.

என வரும் மகிழ்ச்சி, வியப்பு, இரங்கல், அச்சம், ஐயம், விளி, அழுகை, சினம் என்பன போன்ற உணர்ச்சி வெளியீட்டுரைகளின் பின் **உணர்ச்சிக் குறி** வரும்.

7. (அ) இரட்டை மேற்கோள் குறி (" ")

1. (1) "அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்," என்று வியந்தார் சேக்கிழார்.

(2) "ஊழ்வினை உருத்து வந்தூட்டும்," என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

(3) "செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்," என்பது வள்ளுவர் வாக்கு.

என்று புலவர்களின் பொன்மொழிகளை மேற்கோளாகக் காட்டும் பொழுது **இரட்டை மேற்கோள் குறிகள்** இடவேண்டும்.

2. "ஊருக்குப் போய் விரைவில் திரும்புவேன்" என்று கூறிச் சென்ற மகன் இன்னும் வரவில்லையே—என்பது போன்ற நேர்கூற்றுக்கு முன்னும் பின்னும் **இரட்டை மேற்கோள் குறிகள்** வரும்.

(ஆ) ஒற்றை மேற்கோள் குறி (' ')

1. (1) 'அ', 'இ', 'உ' என்பன சுட்டெழுத்துக்கள்.

(2) 'செய்யிய' என்னும் வினையெச்சத்தின் பின்வரும் வல்லினம் இயல்பாகும்.—என்பன போல் எழுத்தோ சொல்லோ தன்னையே சுட்டிக் கொள்ளும் பொழுது, **ஒற்றை மேற்கோள் குறி** இடவேண்டும்.

2. (1) 'கால்கோள்', 'நீர்ப்படை'—என்பன போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பொழுதும்,

(2) "மாணவர்களே, 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்ற பெரியோரின் வாக்குப்படி நடவுங்கள்" என்று உடல்நல ஆசிரியர் கூறினார்.—என்பது போன்று மேற்கோளுக்குள் மேற்கோள் வரும்பொழுதும் **ஒற்றை மேற்கோள் குறிகள்** இடவேண்டும்.

8. பிறைக் கோடு ( )

1. நிறுத்தக் குறிகள் (Punctuation Marks) உரைநடைக்கு இன்றியமையாதவை-என்று மொழி பெயர்க்கும் பொழுது ***பிறைக் கோடுகள்*** இட வேண்டும்.

2. கடவுள் மக்களைப் போலன்றி, மலமற்றவன் (குற்றமற்றவன்) ஆதலால், அவன் அமலன் எனப்படுவான்—என்று வாக்கியத்தின் இடையே வரும் அருஞ்சொல்லை விளக்கும் பொழுது ***பிறைக் கோடுகள்*** இடவேண்டும்.

3. (1) (2) (3) என்று சிறு பிரிவுகளை எண்ணிக்கொண்டு போகும்போது, ***பிறைக் கோடுகள்*** இடவேண்டும்.

4. "அட்டாலும் பால் சுவையிற் குன்றாது," காய்ச்சினாலும் பால் (தனது இனிய) சுவையிற்

குறையாது—என்று உரை கூறுங்கால் சொல் வருவிக்கும் பொழுது, *பிறைக் கோடுகள்* போட வேண்டும்.

9. வரலாற்றுக் குறி (:—)

1. (1) பாண்டியன் கை குறைத்த வரலாறு பின்வருமாறு :—

(2) பொறிகள் ஐந்து. அவையாவன :—

என்பன போன்ற வரலாறுகளைத் தெரிவிக்கும் பொழுது *வரலாற்றுக் குறியை* இடவேண்டும்.

நிறுத்தக் குறிகளின் *பிற வகைகளை* மேல் வகுப்புக்களில் படிப்போம்.

7. வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும்

1. மிகும் இடங்கள்

பெரும்பாலான மாணவர் தாம் எழுதும் போது வல்லெழுத்துக்களை மிகுக்க வேண்டிய இடங்களில் மிகுக்காமலும், மிகுக்க வேண்டாத இடங்களில் மிகுத்தும் பல பிழைகளைச் செய்கின் றனர். எந்த இடங்களில் இவை மிகும், எந்த இடங்களில் மிகா என்பதைப் பழகியே அறிதல் வேண்டும். அவ்வாறு பழகுவதற்கான சில குறிப்புக் களை இங்குத் தருவோம். இன்னும் மிகுதியான விவரங்களை அடுத்த வகுப்பில் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

ஆறு வல்லெழுத்துக்களில் மொழிக்கு முதலில் வரக்கூடியவை "*க, ச, த, ப*" என்னும் நான்கே. அவை மிகுதலாவது, அவற்றின் ஒற்றுக்கள் (க், ச்,

த், ப்) மிகுந்து 'க்க, ச்ச, த்த, ப்ப' என்பன போல அவற்றோடு இணைந்து வருதலாம்.

1. (1) பொருள்தனைப் போற்றிவாழ்.
செல்வத்தைப் படைத்தான்.
நூல்களைக் கற்றான்.
கண்ணனைக் கண்டேன்.

என இரண்டாம் வேற்றுமை உருபுக்கு முன் 'க, ச, த, ப' மிகுந்தன.

(2) ஊருக்குப் போனான்.
ஏழைக்குக் கொடு.
பாலுக்குச் சருக்கரை இல்லை.
வேலைக்குத் தக்க கூலி.

என நான்காம் வேற்றுமை உருபுக்கு முன்வரும் 'க, ச, த, ப' மிகுந்தன.

2. (1) செய்யச் சொல்.
வரப் போகிறாயா?
இருக்கக் கூடாதா?

என்பன போன்ற நிகழ்கால வினையெச்சங் (செய வெனெச்சங்) களுக்கு முன் வரும் 'க, ச, த, ப' மிகும்.

(2) பையச் சென்றான்.
மெல்லப் போனான்.
சாலத் தந்தான்.

என்பன போன்ற அகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சத்திற்கு முன்னும் இவை மிகுதலைக் காண்க.

3. வருவதாய்ச் சொல்.
விவரமாய்ப் பேசு.
நல்லதாய்ப் போயிற்று.

என வரும் யகர மெய்யீற்று வினையெச்சத்தின் முன்னும் இவை மிகும். இந்த ஈற்றுக்குப் பதிலாக 'ஆக' என்பதும் வரும்; அங்கும் மிகும்.

4. ஓடிப் போனான்.
மாற்றிப் பேசுகிறான்.
விரும்பிப் படி.
அருளிச் செய்.
கூட்டிச் சொல்.

இந்த எடுத்துக்காட்டுகளைப் பாருங்கள்.

இகர ஈற்று வினையெச்சங்களின் முன் வல்லெழுத்துக்கள் மிகும் என்று இவற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

5. (1) நாட்டுப் பையன்.
முரட்டுக் காளை.
(2) ஆற்றுப் பாய்ச்சல்.
கிணற்றுத் தவளை.

என்பனபோன்ற சொற்களிலிருந்து, ட, ற, இரட்டித்து வரும் நெடில் தொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்கட்கு முன்னும் இவை மிகும் என அறியலாம்.

(3) உப்புப் பண்டம்	மக்குப் பையன்
விட்டுப் போனான்	செத்துப் பிழைப்பான்
விட்டுக் கொடுத்தான்.	சேர்த்துக் கொள்
கற்றுக் கொடு	பிரித்துக் கொடு
பட்டுத் துணி	கிழக்குத் திசை

போன்றவைகளிலிருந்து வன்றொடர்க் குற்றியலுகரத்துக்கு முன்னும் வல்லினம் மிகும் என்பது தெரியவரும்.

(4) குண்டுக் கல் தண்டுக் கீரை
பாம்புத் தோல் மருந்துப் பை

என்றாற்போல மென்றொடர்க் குற்றியலுகரத்துக்கு முன்னும் இவை மிகும்.

6. (1) அறியாக் குழந்தை
அடங்காக் கோபம்
பறவாக் குளவி
விளங்காக் கேள்வி
வடியாக் கிளவி

என்பனபோன்ற ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கட்கு முன்னும் 'க, ச, த, ப' மிகும்.

7. பெய்யாக் கொடுக்கும்
"புரண்டு வீழாப் பெருநிலத்தில்"
"கேளாக் கொடுத்தான்."

என்பனபோன்ற செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கட்கு முன்னும் 'க, ச, த, ப' மிகும். இன்னும் மிகும் இடங்கள் பல. அவற்றின் விவரங்களை மேல் வகுப்பிற் பார்க்கலாம்.

2. வலி மிகா இடங்கள்

வலி மிகும் இடங்களைப்போலவே, வலி மிகா இடங்கள் சிலவற்றையும் தெரிந்துகொள்ளுங்கள்:

1. கல்வி கேள்வி
நன்மை தீமை
கல்வி கல்லாமை

போன்ற உம்மைத் தொகையில் வலி மிகாது.

2. (1) உரைநடை கற்பித்தல், கதை சொல்லல், நிலை கொண் டுணர்தல்.

போன்ற இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும் வலி மிகாது.

(2) முருகனோடு பேசினான்
கன்றோடு பசு வந்தது.

(3) பள்ளிக்கூடத்திலிருந்து புறப்பட்டான்
மலையினின்று பார்த்தான்
மரத்தினின்று குதித்தான்.

(4) கண்ணகி கற்பு
எனது புத்தகம்
என்னுடைய பாட்டு
தம்பியினுடைய சட்டை.

என்பனபோன்ற மூன்றும் வேற்றுமை விரி ஐந்தாம் வேற்றுமை விரி ஆகியவற்றின் முன்னும், ஆறும் வேற்றுமைத் தொகையின் முன்னும், ஆறும் வேற்றுமை விரியின் முன்னும் 'க, ச, த, ப' மிகா.

தெ-வி-பெ-எ.	கு-வி-பெ-எ.
3. வருகிற திங்கள்	நல்ல பிள்ளை
படித்த பிள்ளை	பெரிய பெட்டி
வந்த பையன்	கரிய தாமரை
படியாத சிறுவன்	இல்லாத பொருள்

என்பனபோன்ற உடன்பாடு, எதிர்மறைகளில் வரும் தெரிநிலைவினை, குறிப்புவினைப் பெயரெச்சங்களுக்கு முன்னும் 'க, ச, த, ப' மிகா.

4. பொருது பெற்றான்
கொய்து கொண்டுவா
நெடிது பேசினான்
செய்யாது போனான்
இல்லாது போயிற்று

என்றாற்போன்ற சில வினையெச்சங்களின் முன்பும் இவை மிகா.

5. என்று பேசினான் செய்து தீர்த்தான்,
வந்து கொடுப்பார் காசு கொடு

என்றாற்போன்ற சில வன்றொடர் ஒழிந்த குற்றியலுகரங்கட்கு முன்னும் ‘க, ச, த, ப’ மிகா.

6. கோழி கூவிற்று அண்ணா பார்
பொழுது போயிற்று தமிழ்வாழி பல்லாண்டு
தங்காய் தா வாழ்க தமிழ்

என்றாற்போன்ற எழுவாய்த் தொடரிலும், விளித்தொடரிலும்,வியங்கோளிலும் ‘க, ச, த, ப’ மிகா. பிறவகைகளை மேல் வகுப்பிற் காண்க.

———

229

THANN TAMIL
ILAKANAMUM KATTURAIUM

STANDARD VIII

BY

M. P. RAMANATHAN

THE NATIONAL PUBLISHING CO.
6, KONDI CHETTY STREET, MADRAS-1.

 [*Price Re.* **1·50**